July 2020

# தமிழ்

11-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**July 2020**

சுவடி — 10
ஓலை — 5

## வணக்கம் பல

ஒருபுறம் உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது நோய்த்தொற்று என்றால், மனிதனை பீடித்த ஒவ்வாமைத் தொற்று இன்னொருபுறத்தில் பேருருக் கொண்டு எழுந்துநின்று வெறியாட்டம் போடுகிறது.

மொழி, இனம், மதம், நிறம், அதிகாரம் என்று இந்த வெறியாட்டங்கள் வெவ்வேறு வடிவில் உலகெங்கும் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆண்டாண்டு காலமாக உலகம் சந்தித்த மாபெரும் அவலங்களுக்கெல்லாம் வெறும் நாடு பிடிக்கும் நோக்கங்கள் மட்டுமல்லாது, பிற காரணங்களும் இருந்தன.

இனவெறியையும் மதவெறியையும் அதிகார வெறியையும் தூண்டிவிடும் சித்தாந்தங்கள் எந்த வடிவில் இருந்தாலும், அவை தீக்கிரையாக்கப்பட வேண்டியவை என்பதில் ஐயம் வேண்டாம்!

அதிகார வெறியைக் காட்டும் விதமாக காவல்துறையினர் நடந்துகொள்வது, உலகெங்கும் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது. நாட்டின் தலைமை எவ்விதம் அமைகிறதோ குடிகளும் அவ்விதமாகவே இருப்பார்கள் என்று நிரூபிக்கப்பட்டதை, மனிதாபிமானம் தன் முன் மண்டியிட வைத்த பெருமையும் இதே மண்ணில்தான் நிகழ்ந்திருக்கிறது.

கடும் நெருக்கடியான நோய்த்தொற்று காலகட்டத்தில் பயணிக்கும் நாம், நோய்த் தொற்றுக்கு எதிராக எவ்விதம் போராடுகிறோமோ அதற்குச் சிறிதும் குறையாமல் இதுபோன்று வரும் அதிகாரச் சக்திகளுக்கும் அதன் ஆட்டங்களுக்கும் எதிராக நாம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்க வேண்டும்!

இந்த புவிக்கோளம் மனித உயிர்களுக்கு மட்டுமானதல்ல, எல்லா உயிர்களுக்கும் பொதுவானது என்பதை உணர்ந்து கொண்டால் மனித இனம் இம்மண்ணில் தொடர்ந்து நீடிக்கும். மாறாக, அதனை மறந்தால் மனித இனத்திற்கு மிகப்பெரிய சிக்கல் என்பதை இயற்கை பாடம் நடத்திக் காட்டுகிறது! இனியும் இதுபோல் நடக்காமலிருக்க நம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ளுதல் நலம்!

இந்தச் சிந்தனைகளோடு மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' வழமைபோல நல்ல பல ஆக்கங்களைச் சுமந்து வருகிறது!

வாசியுங்கள்! வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**

## உள்ளே...

இன வெறி உச்சம்!

பற்றியெரியும் வயிறு!

ஒரு உண்மை
தெரிஞ்சாகணும் சாமி!

முகாம்களே நாடாய்!

சேரமான் கனவு

தல வலம்


அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

யோக யோகா

மருத்துவ தமிழ்

இசையால் அசையும்




**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது



# இன வெறி

### ஜார்ஜ் ஃப்ளாய்ட்

ஜார்ஜ் ஃப்ளாய்ட் மரணத்துக்கு நீதி கேட்டு அமெரிக்கா தொடங்கி உலகம் முழுவதும் நடந்துவரும் போராட்டங்களில், கறுப்பினத்தவர்களுடன் கணிசமான அளவில் வெள்ளையர்களும் பங்கேற்றிருப்பது குறித்துப் பலரும் ஆச்சரியமாகப் பேசி வருகிறார்கள்.

ஜார்ஜ் ஃப்ளாய்ட் — நடந்தது என்ன?

என்னால் மூச்சுவிடமுடியவில்லை— ஒரு போலீஸ் அதிகாரி தனது கழுத்தில் காலை வைத்து நெரிக்கும்போது ஆப்பிரிக்க அமெரிக்கரான ஜார்ஜ் ஃப்ளாய்ட் பரிதாபமாக அலறினார். ஆனால் எதையும் காதில் வாங்காத அந்த வெள்ளையின போலீஸ் தொடர்ந்து அழுத்த, ஃபிளாய்டு பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம்தான் தற்போது அமெரிக்காவே வன்முறையால் பற்றி எரிவதற்கு காரணம். கடந்த மே மாதம் 25—ம் தேதி




கொரோனா வைரஸால் உலகிலேயே மிகக்கடுமையாக பாதிக்கப்பட்ட நாடு அமெரிக்காதான். 18 லட்சம் பேர் நோயால் அவுதியுற்றுள்ளார்கள். ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள். பொருளாதாரம் முடங்கிப் போயிருக்கிறது.

ஆனால் போலீஸ் பிடியில் இருந்த ஒரு கறுப்பின நபர் இறந்த பின் அமெரிக்காவின் பெரும்பகுதி பற்றி எரிய தொடங்கியிருக்கிறது.கடந்த 50 ஆண்டுகளில் மிகப்பெரிய சீற்றம் உருவாகியுள்ளது. அமெரிக்க அதிபர் டிரம்ப் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் பதுங்கு குழிக்குள் செலவழித்துள்ளார்.

அமெரிக்காவின் மின்னெசோட்டா மாகாணத்தின் மின்னியாபொலிஸ் நகரத்தில் 46 வயதான ஜார்ஜ் ஃப்ளாய்ட் ‘கப் புட்ஸ்’ எனும் கடையில் சிகரெட் வாங்கச் சென்றுள்ளார்.

அவர் கொடுத்த 20 டாலர் நோட்டு அதாவது இந்திய மதிப்பில் சுமார் 1500 ரூபாய் மதிப்பு கொண்ட அந்த நோட்டு போலியானது என அந்தக் கடையின் பதின்மவயது ஊழியர் சந்தேகித்துள்ளார்.

இதையடுத்து காவல்துறைக்கு புகார் கொடுத்திருக்கிறார். 911 என்ற எண்ணுக்கு அவர் ஃபோன் செய்து என்ன சொன்னார் என்பது



# உச்சம்!

தற்போது எழுத்து வடிவமாகவே அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி அந்த பதின்ம வயது ஊழியர், ஜார்ஜ் குடித்திருப்பது போல தெரிவதாகவும், அவர் கட்டுப்பாட்டிலேயே இல்லை என தெரிவித்திருக்கிறார். அடுத்த ஏழு நிமிடங்களில் இரண்டு காவல்துறை அதிகாரிகள் அங்கே வந்துவிட்டார்கள். ஒரு மூலையில் காரை பார்க் செய்துவிட்டு அதனுள் இருவருடன் உட்கார்ந்திருந்தார் ஜார்ஜ்.

காரை சென்றடைந்த அதிகாரிகளில் ஒருவரான தாமஸ் லென் தனது துப்பாக்கியை எடுத்து நீட்டி ஃப்ளாயிடை கையை நீட்டுமாறு சொல்கிறார். அந்த சமயத்தில் அவர் ஏன் தேவையில்லாமல் துப்பாக்கியை எடுத்து நீட்டினார் என்பது இன்னும் விளக்கப்படவில்லை.




கள்ளநோட்டு பரிமாறியதாகச் சொல்லி, காரை விட்டு இறங்க மறுத்த அவரை கை விலங்கிட்டது போலீஸ். பொது இடத்தில் நடந்த சம்பவத்தால் உச்சகட்ட பயமும், ஒருவித எரிச்சலும் அடைந்த நிலையில் கீழே விழுந்தார் ஜார்ஜ். தனக்கு உடல்நிலை பாதிப்பு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். அவரை போலீஸ் வாகனத்தில் ஏற்றும் முயற்சியில் டெரெக் சாவின் எனும் அதிகாரியும் களமிறங்கினார். அப்போது கீழே விழுந்த ஃப்ளாய்ட் சந்தித்த மோசமான நிமிடங்களை பலர் தங்களது மொபைலில் ரெக்கார்ட் செய்தனர். 44 வயதாகும் டெரெக் சாவின் தனது இடது கால் முட்டியை ஜார்ஜின் தலைக்கும் கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து அழுத்தினார். "I can't breathe," "please, please, please" என ஜார்ஜ் அலறினார். எட்டு நிமிடங்கள் 46 நொடிகள் தனது காலை வைத்து அழுத்தினார் ஜார்ஜ். ஆறு நிமிடங்கள் முடிந்த போதே ஜார்ஜ் மூர்ச்சையாகிவிட்டார். அவரிடம் இருந்து எந்த எதிர்வினையும்

இல்லை என்பது வீடியோவில் தெரிந்தது. அங்கே சென்றுகொண்டிருந்தவர்கள் ஜார்ஜின் நாடித்துடிப்பை சோதிக்குமாறு அதிகாரிகளிடம் வலியுறுத்தினர். ஒரு அதிகாரி ஃபிளாய்டின் வலது மணிக்கட்டில் நாடித்துடிப்பை சோதனை செய்ய, அதன் பின்னர் சாவின் தனது முட்டியை எடுத்தார். ஆம்புலன்ஸ் மூலம் ஜார்ஜ் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட, ஒரு மணி நேரத்துக்கு பின் அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.




## யார் இந்த ஜார்ஜ் ஃப்ளாய்ட்?

டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டனைச் சேர்ந்த ஜார்ஜ் பல ஆண்டுகளுக்கு முன்பே பிழைப்புக்காக மின்னியாபோலிஸ் நகருக்கு வந்துவிட்டார். அந்த நகரில் சமீபகாலமாக ஒரு பௌன்சராக வேலை செய்துவந்தார். தற்போது பல லட்சக்கணக்கான அமெரிக்கர்கள் கொரோனாவால் வேலையின்றி தவிப்பது போலவே ஜார்ஜுக்கும் வருமானமில்லை. அவர் 'கப் புட்ஸ்' கடைக்கு அடிக்கடி வருபவர். ஒரு நண்பரை போன்ற முகத்துடன் சிரித்து பேசக்கூடிய, எந்தவித தீங்கும் விளைவிக்காத நபர் அவர் என்கிறார் அந்த கடையின் முதலாளி மைக் அபுமேயல்லா. பெரும் தொற்று அபாயம் சூழ்ந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில், அமெரிக்க மக்கள் தெருவுக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். "கரோனா தீநுண்மி நோய்த்தொற்று தாக்கி மரணிப்பதைவிட, போராட்டக் களத்தில் துணிந்து நின்று உயிரை இழப்பதே மேல்' என்ற நிலைக்கு அமெரிக்க கருப்பினத்தவர்கள் வந்துவிட்டார்கள். அவர்களுக்கு வாக்குரிமை உண்டு. அவர்களுக்கான சுதந்திரமும் உண்டு. ஆனால், அந்தச் சுதந்திரத்தால் கிடைக்கும் உரிமைகள் உண்டா? இதுதான் மெய்யான ஜனநாயகமா என்ற கேள்வியை எழுப்பி வெள்ளை மாளிகையை நோக்கி போராட்டக்காரர்கள் நியாயம் கேட்டு நிற்கிறார்கள்.

வெள்ளை மாளிகையில் வசிக்கும் அந்த நாட்டின் அதிபர் டிரம்ப்போ பதுங்கு குழிக்குச் சென்று தங்கியிருப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் பறைசாற்றுகின்றன. போராட்டத்துக்கான வலிமையும் கூர்மையும் எத்தகையது என்பதைப் பதுங்கு குழியே ஊருக்கும் உலகுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

தங்கள் மீது காட்டப்படும் காழ்ப்புணர்ச்சி காரணமாக கடந்த மே 25—ஆம் தேதிமுதல் பல்வேறு அமெரிக்க மாகாணங்களில் கருப்பினத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், டெக்சாஸ் மாகாணத்தில் காவல் துறை மூத்த அதிகாரி ஆர்ட் அசெவெடோ அமெரிக்க அதிபருக்கு ஓர் அறிவுரை கூறியிருக்கிறார். இது சமூக ஊடகங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. "அனைத்து காவல் துறை அதிகாரிகளின் சார்பாகப் பேசுகிறேன்' என்று அவரின் பேச்சு தொடங்குகிறது. "அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறுவதற்கு ஆக்கபூர்வமான விஷயம் எதுவும் இல்லையென்றால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கவும்' என்று பேசியிருக்கிறார்.

இனவெறிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்களை நோக்கி, அவர்கள் உள்நாட்டுப் பயங்கரவாதிகள் என்றும், வன்முறை — போராட்டத்தில் மேலும் ஈடுபட்டால் ராணுவம் வரவழைக்கப்படும் என்றும் கூறினார் அதிபர் டிரம்ப். மேலும், ஒருபடி மேலே சென்று அமெரிக்க சொத்தை யாராவது கொள்ளையடித்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்றும் அவர் பேசியிருக்கிறார். இந்தப் பேச்சுக்குப் பின்னர்தான் போராட்டங்கள் வன்முறைகளாக மாறியிருக்கின்றன. அதனால்தானோ என்னவோ காவல் துறையினரையும் எதிர்த்து போராட்டக் குழுக்கள் கடும் தாக்குதலிலும் ஈடுபட்டு வருவதாக ஊடகங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது.

அமெரிக்காவில் டிரம்ப்பை ஆதரிக்கும் — இன வெறுப்பையும், மத வெறுப்பையும் உமிழும் தீவிர வலதுசாரி அரசியல் குழுக்கள் வெள்ளை நிறமா,

கருப்பு நிறமா என்ற போட்டியில் இந்தக் கரோனா தீநுண்மி நோய்த்தொற்று பரவிக்கொண்டிருக்கும் இக்கட்டான காலகட்டத்தில், அடக்குமுறைக்கான போரை நிகழ்த்த இதுதான் சரியான தருணம் என்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. கரோனா தீநுண்மி நோய்த்

அமெரிக்காவில் வசிக்கும் கருப்பினத்தவர்கள் லிங்கனின் ரத்த சாட்சியோடு தங்களின் இருண்ட பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். கரோனா தீநுண்மி நோய்த்தொற்று காலகட்டத்தில் கருப்பினத்தவருக்கு நேர்ந்த கொடூரச் சம்பவம் மனிதத் தன்மையையே உலுக்கிவிட்டது.



தொற்று பரவும் வேகத்தைவிட, இன வெறுப்பு அதிவேகமாகப் பரவுகிறது.

மனிதகுலத்துக்கு விடப்பட்டுள்ள சவால் என்கிற பல்வேறு கேள்விக்குறிகளைத் தாங்கி நின்றது அந்தக் கொடூரச் சம்பவம். இவை சமூக அநீதிக்கு இழைக்கப்பட்ட கொடூரத் தாக்குதலாகவும், இன வெறியின் உச்சகட்ட நடவடிக்கையாகவும் உலகம் முழுவதும் கொந்தளிப்புகள் எழுந்தன.

“இது இனவெறியின் வெளிப்பாடுதான்; அதில் என்ன சந்தேகம்‘ என்று கேட்பவர்களும் உண்டு. கருப்பினத்தவர்களுக்கு எதிராக நீண்ட நாள்களாகக் காட்டப்படும் வெறுப்புணர்ச்சியின் அடையாளம்தானே இந்த நிகழ்வு. இன்று, நேற்று நடக்கின்ற சம்பவமா இது? 17—ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கியிருக்கிறது இந்தப் போராட்டம். வாழ்வதற்கும், சாவதற்குமான நிகழ்வாக கடந்துபோக வேண்டியதாய் இருக்கிறது. மார்ட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் கருப்பினத்தவர்களின் விடுதலையை கண்ணீருடன் துடைத்தார்கள். ஆனால், அந்தக் கண்ணீர் காய்வதற்கு முன்பே அதே மண்ணில் மார்ட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் இனவெறிக்குத் தங்களின் உயிரைப் பரிசாகத் தரவேண்டிய துரதிருஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மனிதனை மனிதனாகப் பார்க்க வேண்டும் என்று யார் இவர்களிடம் போய்ப் பாடம் நடத்துவார்கள்? விரைவில் அமெரிக்க தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வெள்ளை, கருப்பு என்கிற நிற பேதம் மனிதத் தன்மைக்கு சவால் விடும் செயல்கள் அல்லவா? கருப்பு உயிரா, வெள்ளை உயிரா என்ற கேள்வியை எழுப்பினால், அங்கு மானுடப் பற்று காணாமல் போய் விடாதா? எதற்கு நீங்கள் வாக்களிப்பீர்கள் என்ற சவால்கள் எழாமல் இல்லை.

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தின் தலைநகரான மினியாபொலிஸ் நகரில் ஒரு காருக்கு அடியில் ஒரு மனிதர் கைவிலங்கிட்டிருப்பதைப் போன்றும், அவரின் கழுத்தின் மேல் முழங்காலை வைத்துக் காவலர் அழுத்துவதும், என்னால் மூச்சு விடமுடியவில்லை என்று அந்தக் கருப்பின இளைஞர் ஜார்ஜ் ஃப்ளாய்ட் கூறுவதும், “தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்’ என்று கதறுவதும், மனதை உருக்கி நெகிழச் செய்கின்ற ஒன்றாகும். அமெரிக்காவில் கருப்பினத்தவர்கள் போலீஸலரால் கொல்லப்படுவது குறித்து ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையில், இந்தச் சம்பவம் மேலும் பதற்றத்தை அதிகப்படுத்தியது.

கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், ரப்பர்




குண்டுகளையும் கொண்டு போராட்டக்காரர்களை போலீஸலர் கலைத்துவிடலாம். நடைபெற்ற கொடூரச் சம்பவம் படிந்துவிட்ட வரலாற்றின் கருப்பு அத்தியாயத்தை எதைக் கொண்டு கலைக்க முடியும்? எதைக் கொண்டு அழிக்க முடியும்?

"எனது சகோதரர் திரும்பி வரப் போவதில்லை, எங்களுக்கு நீதி வேண்டும்' என்று கண்ணீர்மல்க ஜார்ஜின் சகோதரர் ஊடகங்களுக்கு அளித்தபேட்டி, மனிதகுலத்துக்கு எழுப்பிய அதிர்வலையாகவே நாம் பார்க்க வேண்டும். உலக நாடுகள் பலவும் இந்தப் படுகொலை குறித்து நிறையப் பேசுகின்றன. இது குறித்தான நீதியை அவர்களால் எப்படிப் பெற முடியும்? இருந்தபோதிலும், ஒரு ஜனநாயக நாடான அமெரிக்கா அதற்கான பதிலை ஜனநாயக மாண்புகளுக்குச் சொல்லித்தானே ஆக வேண்டும். கறுப்பினத்தவர்களுக்குத் தங்கள் முன்னோர்கள் இழைத்த கொடுமைகளுக்காக அவர்கள் முன்பு மண்டியிட்டு கண்ணீர் சிந்தி மன்னிப்பு கேட்கும் வெள்ளையினத்தவர்களின் வீடியோ ஒன்று சமீபத்தில் வைரலானது. லண்டனில் அடிமை வியாபாரி ராபர்ட் மில்லிகனின் சிலை அகற்றப்பட்டது. வெள்ளையர்களின் இந்தக் குற்றவுணர்வு நிச்சயம் போலியானது அல்ல.

## உள்நாட்டுப் போரும் கறுப்பின உரிமைகளும்

கறுப்பினத்தவர்களின் உரிமைகளுக்காக சக வெள்ளையினத்தவர்களை எதிர்த்துப் போராடிய வெள்ளையினத்தவர்கள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து அடிமைகளாக அழைத்துவரப்பட்டு அமெரிக்க மண்ணில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த கறுப்பினத்தவர்களின் வரலாறு கண்ணீரும் ரத்தமும் நிரம்பியது. 16—ம் நூற்றாண்டு முதல் நடந்துவந்த அடிமை வியாபாரத்தின் மூலம் வெள்ளையின அமெரிக்கர்களின் பண்ணைகளில் ரத்தம் சிந்த உழைத்தார்கள் கறுப்பினத்தவர்கள். இந்தக் கொடுமையை மனசாட்சியுள்ள வெள்ளையினத்தவர்கள் கண்டித்தார்கள்.

சொல்லப்போனால், அடிமை முறையை ரத்து செய்வதா வேண்டாமா எனும் முரண்பாடுதான் அமெரிக்க உள்நாட்டுப் போருக்கே வழிவகுத்தது. அடிமை முறையை ரத்து செய்யும் நடவடிக்கையை வட மாநிலங்கள் ஆதரித்தன. தென் மாநிலங்களைச் சேர்ந்த பண்ணை முதலாளிகள் எதிர்த்தனர். 4 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த அந்தப் போர், 1865 மே மாதம் முடிவுக்கு வந்தது. தென் மாநிலங்கள் சரணடைந்தன. 1865 டிசம்பரில், அடிமை முறையை ஒழிக்கும் 13—வது சட்டத்திருத்தம் அமலுக்கு வந்தது. அதைச் சாதித்துக் காட்டிய ஆபிரஹாம் லிங்கன் இனவெறியை வெறுத்த வெள்ளையர்தான்!

அதன் பின்னர், முன்னாள் அடிமைகளின் சட்ட உரிமைகளைப் பாதுகாக்க 14—வது சட்டத்திருத்தமும், முன்னாள் அடிமை ஆண்களுக்கு வாக்குரிமை வழங்கும் 15—வது சட்டத்திருத்தமும் கொண்டுவரப்பட்டன. எனினும், அந்த உரிமைகளைப் பெறுவதற்கே கறுப்பினத்தவர்கள் பெரும் போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போதும் மனசாட்சியுள்ள வெள்ளையினத்தவர்கள் அவர்களுக்குத் துணை நின்றனர்.

## வெள்ளையினத் தியாகிகள்

வெள்ளையினத்தைச் சேர்ந்த சிலர் அந்தப் போராட்டங்களில் தங்கள் உயிரையும் தியாகம்

செய்திருக்கிறார்கள். 1965—ல், கறுப்பின மக்களுக்கு உரிமை கோரி அலபாமா மாநிலத்தின் செல்மா நகரிலிருந்து அம்மாநிலத் தலைநகர் மன்ட்காமரிக்குப் பேரணி நடந்தது. அந்தப் பேரணியில் கலந்துகொண்ட வியாலோ லுயிஸோ எனும் வெள்ளையினப் பெண்மணி, வெள்ளை இனவாதக் குழுவான ‘கு க்ளக்ஸ் க்ளான்’ அமைப்பினரால் படுகொலை செய்யப்பட்டார். 5 குழந்தைகளின் தாய் அவர். அதே பேரணியில் கலந்துகொண்ட ஜேம்ஸ் ரீப் எனும் வெள்ளையின மனிதர் அடித்தே கொல்லப்பட்டார். ஜொனாதன் டேனியல்ஸ், ஜிம் லெதெரர், ஆன் பிராடென், பீட்டர் நார்மன் என்று பலர் கறுப்பினத்தவர்களின்




உரிமைப் போராட்டங்களில் தங்கள் உயிரையும் துச்சமாக மதித்துக் கலந்துகொண்டார்கள்.

குறிப்பாக, அமெரிக்க யூதர்கள் பலர், கறுப்பின மக்களின் உரிமைப் போராட்டங்களுக்குத் துணை நின்றார்கள். அவர்களில் ஆண்ட்ரூ குட்மேன், மைக்கேல் ஷ்வெர்னர் இருவரும் முக்கியமானவர்கள்.

ஜேம்ஸ் சேனி எனும் கறுப்பின இளைஞருடன் காரில் சென்றபோது, மூவரும் படுகொலை செய்யப்பட்டனர். தீவிரத் தேடுதலுக்குப் பின்னர்தான் மூவரின் உடல்களும் கிடைத்தன. மூவரும் ‘ஃப்ரீடம் சம்மர்’ எனும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். மிசிஸிப்பி மாநிலத்தில் கறுப்பின மக்களின் வாக்குரிமையை நிலைநாட்டப் போராடிவந்தவர்கள்.

அவர்களைக் கொலை செய்த வெள்ளையின வெறியர்களுக்கு உள்ளூர்க் காவல் துறையினரும் துணைபோயினர் என்பது முக்கியமான விஷயம். எனினும், ஜான் ப்ராக்டர், ஜோஸப் சல்லிவான் ஆகிய வெள்ளையின எஃப்.பி.ஐ அதிகாரிகள் கடும் சவால்களுக்கு இடையில் அந்த வழக்கை விசாரித்து, குற்றவாளிகளைச் சட்டத்துக்கு முன்னர் நிறுத்தினர்.

கு க்ளக்ஸ் க்ளான் அமைப்பினர், கறுப்பின மக்கள் என்று பல்வேறு தரப்பினருடன் நேரடிப் பழக்கம் கொண்டிருந்த ஜான் ப்ராக்டர் மிக உறுதியுடன் நின்று இந்த வழக்கை விசாரித்தார். ஜோஸப் சல்லிவானும் அப்படியானவர்தான். கறுப்பின உரிமைப் போராளி மார்ட்டின் லூதர் கிங் படுகொலை வழக்கையும் இவர் விசாரித்திருக்கிறார். இப்படி பல தரப்பைச் சேர்ந்த வெள்ளையினத்தவர்கள் கறுப்பினத்தவர்கள் மீது பரிவுடன் இயங்கியிருக்கிறார்கள். நியாயத்தின் பக்கம் நின்றிருக்கிறார்கள்.

மார்ட்டினும் மால்கம் எக்ஸும்

மார்ட்டின் லூதர் கிங்கின் குழந்தைப் பருவத்தில், வெள்ளையினத் தோழன் ஒருவன் இருந்தான். எனினும், அந்தச் சிறுவனின் பெற்றோர் ஒருகட்டத்தில் மார்ட்டின் கிங்குடன் விளையாட அவனை அனுமதிக்கவில்லை. அப்போதுதான் இனவெறியின் கொடூரத்தை மார்ட்டின் உணர்ந்தார். பின்னர் கறுப்பின மக்கள் மீது காட்டப்பட்ட பாரபட்சம், நிகழ்த்தப்பட்ட வன்முறைகள் எல்லாம் சேர்ந்து வெள்ளையினத்தவர் மீது கடும் வெறுப்பை அவரிடம் ஏற்படுத்தியிருந்தன. “ஒவ்வொரு வெள்ளையின அமெரிக்கரையும் வெறுக்கிறேன்” என்று ஒருகட்டத்தில் சொன்னவர்தான் அவர். எனினும், காந்தியின் அகிம்சைக் கொள்கை மீது பற்று கொண்டிருந்த மார்ட்டின், “எனது இயக்கத்தின் நோக்கம் வெள்ளையினத்தவர்களை வீழ்த்துவதோ அவமதிப்பதோ அல்ல. அவர்களிடம் நட்பை வளர்த்துக்கொள்வதும், எங்கள் மீதான புரிதலை ஏற்படுத்திக்கொள்வதும்தான்” என்று குறிப்பிட்டார்.

கறுப்பினத்தவர்களின் உரிமை விஷயத்தில் மார்ட்டின் மிதவாதப் போக்கைக் கொண்டிருந்தார் என்று கடுமையாக விமர்சித்தவர் கறுப்பினத் தலைவர்களில்




முக்கியமான இன்னொரு ஆளுமையான மால்கம் எக்ஸ். வெள்ளையினத்தவர்களை மிகக் கடுமையாக வெறுத்த அவர், 1962—ல் நடந்த விமான விபத்து ஒன்றில் 100—க்கும் மேற்பட்ட வெள்ளையினத்தவர்கள் உயிரிழந்தபோது அதைக் கொண்டாடியவர். எனினும், அவரும் வெள்ளையின மக்கள் மீது ஒரு கட்டத்தில் நட்பு பாராட்டினார்.

இஸ்லாம் மதத்தைத் தழுவியவரான மால்கம் எக்ஸ், ஒருமுறை மெக்காவுக்குச் சென்றிருந்தார். அப்போது அங்கு வந்திருந்த வெள்ளையின முஸ்லிம்கள் அனைவருடனும் இயல்பாகப் பழகியதையும், ஒரே தட்டில் உணவு உண்டதையும் பார்த்து “என் வாழ்நாளில் முதன்முறையாகத் தங்களை வெள்ளையர்களாகக் காட்டிக்கொள்ளாத வெள்ளையர்களைச் சந்தித்தேன்” என்று சொன்னார். தங்களை வெறுக்கும் வெள்ளையர்களை எந்த அளவுக்கு அந்தத் தலைவர்கள் வெறுத்தார்களோ, அதே அளவுக்குத் தங்களை மதித்த, நட்புடன் பழகிய வெள்ளையினத்தவர்களிடம் மதிப்பு கொண்டிருந்தார்கள்.

## அதிகரிக்கும் ஆதரவு

1960—களில் கறுப்பினத்தவர்களின் உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டவர்களைவிட, தற்போது ஜார்ஜ் ஃப்ளாய்டின் மரணத்துக்கு நீதி கேட்டு நடக்கும் போராட்டங்களில் வெள்ளையினத்தவர்கள் அதிகம் கலந்துகொண்டிருப்பதாக ‘தி நியூயார்க் டைம்ஸ்’ நாளிதழில் வெளியாகியிருக்கும் ஒரு செய்திக் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

‘இனவெறி தொடர்பான புத்தகங்களை வாங்கி வாசிப்பது, கறுப்பின நண்பர்களுடன் மேலும் நெருங்கிப் பழகுவது, கறுப்பினச் சமூகத்தினர் எதிர்கொள்ளும் அவலம் குறித்து தங்கள் குடும்பத்தினரிடம் விவாதிப்பது என்று வெள்ளையின இளைஞர்கள் செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள்’ என்று அந்தச் செய்திக் கட்டுரை சொல்கிறது.

அட்லான்டாவில் வெள்ளையினப் போலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட ரேஷார்டு புரூக்ஸ் எனும் கறுப்பின இளைஞருக்காக நீதி கேட்டு நடக்கும் போராட்டங்களிலும் வெள்ளையினத்தவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். அமெரிக்காவில் மட்டுமல்ல, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் நடக்கும் போராட்டங்களிலும் கணிசமான வெள்ளையினத்தவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். இவை அனைத்துமே சக மனிதர்கள் மீது தங்கள் சமூகத்தினர் காட்டும் வெறுப்பைக் கேள்விக்குள்ளாக்கும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் உருவாகியிருக்கும் மாற்றங்கள்.

அதேசமயம், இந்தியாவில் மதம், இனம், சாதி, வர்க்கம் போன்றவற்றின் அடிப்படையில் அடக்குமுறையும், பாரபட்சமும் காட்டப்படும்போது சுய சமூக விமர்சனத்துடன் மனிதத்தைப் பாதுகாக்க எத்தனை பேர் தயாராக இருக்கிறார்கள் எனும் கேள்வியையும் நாம் கேட்டுக்கொண்டாக வேண்டும். ‘Black Lives Matter’ எனும் ஹேஷ்டேகைப் பகிர்ந்துகொள்ளும் பலரும் நம் மண்ணில் நடந்துவரும் அக்கிரமங்கள் குறித்தும் அக்கறை கொள்வது காலத்தின் தேவை.

# கருத்துப் ப(ா)டம்





## சொல்றாங்க... சொல்றாங்க...



"நான் இந்திரா காந்தி பேத்தி! என்னை அச்சுறுத்த முயல வேண்டாம்!"

**பிரியங்கா காந்தி**

(அம்மா தாயி... நீயாவது வாய் திறந்து சொன்னியே! நாட்டுல பெரிய பெரிய தலையெல்லாம் தலைமறைவாய் கிடக்குதும்மா!)



"சாத்தான்குளம் போன்ற அதிகார அத்துமீறல் முடிவுக்கு வரவேண்டும்!"

**சூர்யா**


(இதுதான் ஒன்றரை டன் வெயிட்டு!)



"சாத்தான்குள போலீஸ் அத்துமீறலுக்கு எதிராகக் கண்டிப்புக் குரல் எழுப்ப வேண்டும். மீண்டும் இதுபோன்று நடக்கவே கூடாது"

**தவான்**

(இவர் ஒருத்தர்தான் இந்த விஷயத்தாலே பெவிலியனைத் தாண்டி சிக்சர் விளாசியிருக்காருங்க! மத்தவங்க விளம்பரத்துல வீசறதோட சரி!)



"ஜார்ஜ் பிளாயிட் கொலை செய்யப்பட்டார் என்பதில் சந்தேகமே இல்லை! இதுதான் உண்மையான பெண்டமிக்! இந்தத் தாக்கத்துக்கு நாம் இன்னமும் தடுப்பு மருந்தைக் கண்டறியவில்லை!"

**ஜார்ஜ் குலூனி**

(தல, சாத்தான் குளத்தில் நடந்ததைப் பார்த்தால் இப்போதைக்கு மருந்து கண்டுபிடிக்கிற மாதிரி தெரியலயே!)

# பற்றியெரியும்

## பிடில் வாசிக்கும் நீரோக்கள் !

ஒரு பழைய தமிழ்த் திரைப்படப் பாடல்!

'டிங்கிரி டிங்காலே! மீனாட்சி டிங்கிரி டிங்காலே!

உலகம் போற போக்க பாத்தா எதுவும் நல்லால்லே'

உலகம் 'கொரோனா' நோய்த்தொற்றை எதிர்கொள்வதற்கு போராடும் போக்கு ஒருவிதத்தில் இருக்கிறதென்றால் இந்தியாவில் இந்தப் போக்கு வேறுவிதமாக இருக்கிறது.

மிக வித்தியாசமான முறையில் நோய்த்தொற்றை எதிர்ப்பதற்கு இந்தியா போராடும் போக்கு, உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தி இருக்கிறது.

இந்தியப் பிரதமர் ஒரு குறிப்பிட்ட நாளைச் சொல்லி, அன்று மாலை "கை தட்டுங்கள்! அந்தக் கைதட்டல் ஒலி நோய்த்தொற்றை விரட்ட வேண்டும்!" என்கிறார்.

"விளக்கேற்றுங்கள்! அந்த விளக்கின் ஒளியில் நோய்த்தொற்றை நாம் எதிர்கொள்வதை உலகுக்குக் காட்ட வேண்டும்!" என்கிறார்.

பிரதமர் சொன்னதற்கு மறுமொழி இல்லாமல் மக்கள் செய்யும் அந்தக் காட்சியே தலைப்புச் செய்தியாக ஊடகங்கள் காட்டுகின்றன.

உலகத் தலைவர்கள் எல்லாம் பரவி வரும் நோய்த் தொற்றுக்கு எதிராகக் கடும் ஆராய்ச்சிக்கு உட்படுத்திக் கொண்டு செயல்படுகிறார்கள் என்றால், இங்கே காணொளியில் தோன்றி, 'கைதட்டுங்கள்! விளக்கேற்றுங்கள்!' என்று சொல்லி மக்களின் மனப்போக்கை வேறுவகையில் திசைத் திருப்பும் பிரதமரைக் காண்கின்றோம்!

இந்திய நிலை அப்படி என்றால், தமிழகத்து நிலை அதை விடவும் மோசமாக இருக்கிறது. தமிழக முதல்வர் முன்னுக்குப்பின் முரணானத் தகவல்களை வழங்கி கொண்டிருக்கிறார்.

"மூன்றே நாட்களில் கொரோனா முடிந்து போய்விடும்!" என்கிறார். அவர் சொன்னதற்கு மாறாக 300 மடங்காக மின்னல் வேகத்தில் பரவிக் கொண்டிருக்கிறது.

"இனி ஊரடங்கு வராது! வரவே வராது! அப்படி வருவதாக யாரேனும் வதந்தி பரப்பினால்





# வயிறு!

**கொற்றவன்**

அப்படி வருவதாக யாரேனும் வதந்தி பரப்பினால் அவர்களுக்குத் தக்க தண்டனை கிடைக்கும்” என்கிறார்.

அடுத்த சில தினங்களில் அவரே முழு ஊரடங்கை அறிவிக்கிறார். வதந்தியாய் சொல்பவர்களுக்கே தண்டனை வழங்கப்படும் என்றால், ஊரடங்கை உத்தரவாகவே வழங்கிய முதல்வருக்கு என்ன தண்டனை தருவது?

மத்தியிலும் மாநிலத்திலும் ஆளும் ஆட்சியாளர்கள் ஆடிக்கொண்டிருக்கும் ஆட்டம் வேடிக்கையானதாக மட்டுமல்ல மிகுந்த வேதனையாகவும் இருக்கிறது


மீண்டும் ‘டிங்கிரி டிங்காலே மீனாட்சி’தான் நினைவிற்கு வருகிறது!

இந்த நாடு உண்மையில் எங்கே போய்க்கொண்டிருக்கிறது?

இவர்கள் செய்கின்ற ஊரடங்கு இன்னும் எத்தனை நாளைக்கு? பொதுமுடக்கத்துக்கு இந்தியா தந்துகொண்டிருக்கும் விலை இன்னதென்று அறியாதபடி ஆட்சி நடக்கிறது என்பதுதான் வேதனையின் உச்சம்!

நோய்த்தோற்று ஏற்படுத்தும் தாக்கத்தைவிட மக்களின் மனநிலையில் ஏற்படுகின்ற தாக்கமும், அவர்களின் வாழ்வாதாரங்களில் ஏற்படும் தாக்கமும் சொல்லொணாத் துயரத்தை அளிக்கிறது.

கால அவகாசம் தராமல் அறிவிக்கப்பட்ட பொது ஊரடங்கின் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் அவலநிலை கோடிக்கணக்கில் நீண்டு கொண்டிருக்கிறது.



ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கைநோய்த்தொற்று எண்ணிக்கையைவிட பலமடங்கு உயர்ந்துள்ளது என்றால் கவனிக்கப்பட வேண்டியது எது?

ஊடகங்களும் ஆட்சியாளர்களும் பெரிதாக ஊதிக் காட்டுவது போலல்லாமல், இக்கடும் நோய்த்தொற்றானது, உள்ளபடியே பார்த்தால்




எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி நடந்து கடந்து போய்க் கொண்டிருக்கிறது.

வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கும் கோடானுகோடி அடித்தட்டு மக்களும் நோய்த்தொற்றை விடவும் இந்த ஊரடங்கால் பெரிதும் அல்லற்பட்டு வாழ்வை இழந்து வருகிறார்கள் என்ற உண்மையை ஏன் ஆட்சியாளர்கள் உணர மறுக்கிறார்கள்?

இந்த நோய்த்தொற்றை முறியடிக்கக் கூடிய அற்புதமான மருந்துகளை சித்த மருத்துவம் உலகுக்கு வழங்கி இருக்கிறது. ஆனால் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆட்சியாளர்கள் இல்லை என்பதே கொடுமை!

சரிந்து கொண்டிருக்கும் இந்தியாவின் பிம்பத்தை இவர்கள் எந்த வகையில் மீண்டும் கட்டியெழுப்பப் போகிறார்கள்? இந்தியக் குடிமக்களின் வேதனை இன்னமும் ஆட்சியாளர்களின் மனதில் ஏன் பதியவில்லை?

ஒரு நான்கைந்து சம்பவங்களை மட்டுமே அடிப்படையாக வைத்துக் கொண்டு சொல்லவேண்டாம் என்று அரசு விடும் அறிக்கைகளில் அந்த நான்கைந்து சம்பவங்கள் எங்களுக்கொன்றும் புதிதல்ல என்பதான அதிகாரப் பின்னணிக் குரல் ஒலிக்கிறதல்லவா?

ஒரு ஏழைத்தாய் ரயில் நிலையத்தில் படுத்து கிடக்கிறார். பசிக் கொடுமையால் அவர் அப்படியே மரணித்துப் போகிறார். தாயின் மரணத்தை அறியாமல் அவர் மடியில் விளையாடிக்கொண்டிருக்கும் பிஞ்சுக் குழந்தை பாலுக்காக ஏங்கித் தவிக்கிறது.

கண்டுங்காணாமல் விடப்பட்ட அந்தப் பெண்ணுக்கு எப்படி மரணம் நேர்ந்தது?

லட்சக் கணக்கான மக்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்துக்கு நடந்து போகிறார்கள். நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் அவர்கள் நடக்க வேண்டியிருக்கிறது. பசியும் பட்டினியுமாக அவர்கள் நடந்து செல்லும் அந்தக் காட்சி, ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாய் அல்ல, இந்தியா முழுமையும் அக்காட்சிகளைப் பார்க்க முடிகிறதென்றால், எப்படி நேர்ந்தன அந்தச் சம்பவங்கள்?

அந்தக் காட்சிகளின் கொடுமை ஏன் இன்னும் ஆட்சியாளர்களுக்கு போய்ச்சேரவில்லை? அவர்கள் தங்களது குடும்பங்களை விட்டுப் பிரிந்து பல மாதங்களாக வெளி மாநிலங்களில் தங்கி வேலை செய்பவர்கள். மீண்டும் தங்கள் குடும்பத்தோடு விரைவில் இணைந்துவிட மாட்டோமா என்ற ஏக்கத்தில் நடந்தவர்களில் எத்தனைப்பேர் முழுமையாக ஊர் போய்ச் சேர்ந்தார்கள்?

நடந்த களைப்பில் ஒரு குழுவினர் அயர்ந்து தண்டவாளத்தில் உறங்குகின்றனர். ஊரே முடங்கிக் கிடக்கையில், அங்கே ஒரு ரயில் விரைந்து வந்து அவர்களின் உயிரைக் காவு வாங்கியிருக்கிறது என்றால், எப்படி நடந்தேறியது அந்தக் கோரச்

சம்பவம்?

நடந்து செல்லும் இலட்சக்கணக்கான மக்களை காவல்துறை நடத்துகின்ற பாடு சொல்லி மாளாது! அவர்கள் ஏதோ தேசத்துரோகம் செய்துவிட்டு தப்பியோடுபவர்கள் போன்று நடத்தும் காவல்துறையின் செயல்பாட்டை என்னவென்று சொல்வது?

நடந்து செல்பவர்களைத் தேடித் பிடித்து துரத்தி அடிக்கும் உரிமையை காவல்துறைக்கு ஏன் தந்தார்கள்? இந்த நாட்டில் என்ன நடக்கிறது? ஏன் நடக்கிறது என்று தெரியாமலேயே ஏராளமான விஷயங்கள் நடந்துக் கொண்டிருக்கின்றன.

தாயும் மகளும் ஊரடங்கால் வேலை வாய்ப்பை இழந்து ஆந்திர மாநிலத்துக்குக் கால்நடையாகப் போகும் வழியில் பசியாலும் தாகத்தாலும் தன் மகள் சுருண்டு விழுந்து இறப்பதைக் கண்ட அந்தப் பெற்ற வயிறு பட்ட துன்பம் வார்த்தைகளில் அடங்குமா?




ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து சிறைக்கைதிகளாய் வாழும் பலர் தங்கள் சொந்த வீட்டுக்குக்கூட செல்லவியலாமல் வாயும் வயிறும் காய்ந்ததோடு, வார்த்தைகளும் வராமலே செத்து மடிகின்ற கொடுமை இன்னமும் ஆட்சியாளர்கள் கண்ணில் ஏன் படவில்லை?

ரோம் நகரம் எரியும்போது பிடில் வாசித்த மன்னனை வரலாற்றில் படித்தோம்! அந்த வரலாற்றைத் தற்போதைய இக்கட்டான சூழலில் இந்தியாவில் நிரூபித்து வருகிறார்கள் சில முதல்வர்களும் அவர்களுக்குத் தலைவரான ஒரேயொரு பிரதமரும்!

## சிக்கல் எங்கே இருக்கிறது?

மூன்று மாதங்களாக நீடித்துக் கொண்டிருக்கும் ஊரடங்கால், அன்றாடம் வேலை செய்து சாப்பிட வேண்டும் என்ற நிலையிலுள்ள இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் என்ன செய்வார்கள் என்ற குறைந்தபட்ச அக்கறையை ஆள்பவர்கள் எடுத்துக் கொள்ளாதது ஏன்?

மூன்று மாதத்திற்கு பிறகு ஒருவர் கடையைத் திறக்கிறார். அவரை ஊரடங்கைக் காரணம் காட்டி காவல்துறை கைது செய்கிறது. தந்தையைச் சித்திரவதை செய்யும் பொழுது அதைக் கண்முன்னே பார்க்கும் மகன் பொறுக்கமுடியாமல் காவல்துறையைக் கண்டிக்கிறான். பின்னர் தந்தையும் மகனும் காவல் நிலையத்திலேயே அடித்தே கொலை செய்யப்படுகிறார்கள்!

இது தமிழகத்தின் சாத்தான்குளத்தில் நடந்த சம்பவம்! இதுபோன்ற சம்பவங்கள் இந்தியா முழுவதுமே பரவலகத்தான் காணப்படுகிறது. இந்த அதிகார அத்துமீறல்களுக்கும் முடிவே இல்லாமல் தொடரும் கொடுமைகளுக்கும் யார் காரணம்?

சாத்தான்குளம் குறித்து இன்னமும் மௌனம் சாதிக்கிறார் தமிழக முதல்வர் திரு.எடப்பாடி! இதுதான் இந்த ஜனநாயக நாட்டில் நடக்கின்ற ஆட்சியும் அதிகாரமும் காட்டுகின்ற உண்மையான முகமாக இருக்கிறது!

நோய்த்தொற்று தாக்கத்தினை விடவும் இதுபோன்ற அத்துமீறல் தொற்றுக்கள் நாடுமுழுதும் பரவிக் கிடப்பதற்கு அரசியல், மதம், சாதி போன்ற அடிப்படைக் கோளாறுகள் இம்மண்ணில் கிளைப் பரப்பி தழைத்துக் கிடப்பதுதான் காரணம்!

இந்தியாவைப் பிரிவினைவாதச் சிந்தனைக்கு ஆட்படுத்தி வைத்திருக்கிறார்கள். இங்கே மக்கள்

சிந்தித்து விடக்கூடாது! சிந்தித்தாலும் ஏன் என்று கேட்கக் கூடாது! கேட்டு விட்டால் அவர்கள் உயிரோடு இருக்கக் கூடாது! என்ற ஒரு 'ஜனநாயக மாண்பு' இங்கே எழுதப்படாத விதியாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஊடகங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையை உணர்ந்திருக்கின்றன. மக்களின் சிரமங்களை எடுத்துக் கூறும் எதுவும் உடனேயே முனை மழுங்கடிக்கப்படுகின்றன. மக்களின் மனங்களில் வெவ்வேறு விதமான சிந்தனைகளும், செய்திகளும் ஓடிக் கொண்டிருக்க வேண்டும். அதற்குத் தக்கமுறையில் கார்ப்பரேட் நிறுவனங்கள் அடிமை வேலை செய்ய வேண்டும்! எல்லாம் இங்கே திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.




பிரதமரும் முதல்வரும் இங்கே மக்களைக் காக்கவா? அல்லது அவர்களுக்காக மக்கள் பலிகடாக்களாகவா? முன்னுக்குப்பின் முரணாகப் பேசும் முதல்வரை ஒரு மாநிலம் கொண்டிருக்கிறது என்றால் அதற்காக தமிழகம் வெட்கப்படவேண்டும்! வேதனைப் படவேண்டும்!

முன்னாள் தொலைகாட்சி செய்தி வாசிப்பாளர் திரு. வரதராஜன் அவர்கள் தாம் பட்ட, தமது நண்பர் பட்ட என் இன்னலைச் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பகிர்ந்து கொண்டதற்காக அவர் மிரட்டப்படுவதும், வழக்குத் தொடுக்கப்படுவதும் எதன் அடிப்படையில்?

இங்கே கைத்தட்டச் சொல்வதற்கும் விளக்கேற்றச் சொல்வதற்கும் ஒரு பிரதமர் தேவையில்லை! இக்கட்டான சூழலில் மக்களைக் காப்பதற்கு ஒரு போர் வீரனைப் போன்ற பிரதமரும் முதல்வரும்தான் தேவைப்படுகிறார்களே தவிர, அவர்களே இரும்புக்கரம் கொண்டு நோயை ஒரு காரணமாகக் காட்டி மக்களை இன்னல்களுக்குள்ளாக்கி, வாழ்வாதாரத்தைச் சிதைக்கலாமா? வேலியே பயிரை மேய்வதான விந்தை நடக்கக் கூடாதல்லவா!

மக்களின் நன்மைக்காக எனக் கூவிக்கொண்டு அவர்கள் செய்கின்ற செயல்கள் யாவும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை ஒட்டுமொத்தமாகச் சிதைத்து அவர்களை இல்லாது ஒழிக்கும் திட்டம்தான் இப்போது இங்கு நடக்கின்ற மிகப்பெரும் அவலமான நிலை!

நோயோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டிய நிலையை உலக மக்கள் அனைவரும் எதிர்கொண்டு வருகிறார்கள் எனும்போது, ஏன் இங்கு இத்தனை மாதங்களாக ஊரடங்கு? இந்த ஊரடங்கில் என்னவெல்லாம் ரகசிய திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்பது இன்னும் சிறிது காலத்தில் வெளிச்சத்துக்கு வந்துவிடும்!

உலக மக்களின் நம்பிக்கை மட்டுமல்ல, இந்தப் பிரபஞ்சத்தின் நம்பிக்கையாக இருக்கும் இயற்கையே தெய்வம்! அந்த தெய்வம் இன்னின்ன வடிவங்களில் இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் தொன்றுதொட்டு வழிபட்டு வந்த ஆலயங்களை எல்லாம் அடைத்துவிட்ட கொடுமை, மக்களின் நம்பிக்கையை சிதைத்துவிட்ட கொடுமையல்லவா?

தங்கள் குறைகளைச் சொல்லியழும் இடமே ஆலயம்தானே! மன அழுத்ததைப் போக்கும் இடங்களாகத் திகழ்ந்த வழிபாட்டுத் தலங்களை மூடி வைப்பார்களானால், அவ்வளவு கொடுமையானது கொரொனாவா? மனிதனி

குறுகியன் சிந்தனையா?

கீதையின் மொத்த சாராம்சத்தையும் இந்த மூன்றே வரிகளுக்குள் அடக்கிவிடலாம்!

“நடந்தது எதுவோ அது நன்றாகவே நடந்தது!

நடக்கிறதோ எதுவோ அது நன்றாகவே நடக்கிறது!

எது நடக்குமோ அது நன்றாகவே நடக்கும்!”

—இந்த வரிகள் எல்லா நிகழ்வையும் ஒரே நேர்கோட்டில் வைத்து நியாயப்படுத்துகிறது என்றாலும், தற்போதைய ‘கரோனா’ காலத்தில் இந்த வரிகளை எதிர்மறையாக வைத்து நமது ஆட்சியாளர்கள் உண்மையாக்கிக் காட்டுகிறார்கள்.

## ‘மக்களுக்கு எதிராக,’

“எதை நடத்தினார்களோ அது நன்றாகவே நடந்தது!

எதை நடத்துகிறார்களோ அது நன்றாகவே நடக்கிறது!

எதை நடத்துவார்களோ அது நன்றாகவே நடக்கும்!”

அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைத்து விட்டு, ஆட்சியாளர்கள் ஆண்டு என்ன சாதித்து விடப் போகிறார்கள்? மக்களின் முதல்வர், மக்களின் பிரதமர் என்ற பெயரில் இருந்து கொண்டு அவர்களை நம்பும் மக்களை அழித்துவிட்டு, யாருக்காக எதிர்காலத்தில் ஆட்சி செய்யப் போகிறார்கள் என்பது அந்த ‘யாருக்கோ’ நிச்சயம் தெரிந்திருக்கும்!


எப்படி இருந்தாலும், மீண்டும் கீதையின் வாசகம்படி வரலாற்றில் இவர்களும் கடந்து போவார்கள்!

அப்போது… எது நடக்குமோ அது நன்றாகவே நடக்கும்!

இந்தியாவில் எந்த வளர்ச்சி இருக்கிறதோ இல்லையோ, மதவெறி எனும் அந்த ஒரு விஷவிதை மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியிருக்கிறது! இங்கே மக்கள் புரட்சி ஒன்று நீறுபூத்த நெருப்பாக கனன்றபடி இருக்கிறது. அது எந்நேரத்திலும் எரிமலையாய் வெடிக்கக்கூடும்!

எந்த இந்தியாவை அவர்கள் தூக்கிப் பிடிக்க வேண்டுமென்று நினைக்கிறார்களோ அந்த இந்தியாவுக்குள் எரிமலைகள் வெடிக்கும். அதற்கு வித்திட்டவர்களாக இந்த ஆட்சியாளர்கள் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை!

வேற்றுமையில் ஒற்றுமை காணும் சகோதரத்துவ மனநிலையைக் கொண்ட இந்தியர்கள், அந்த எல்லைக்குப் போக மாட்டார்கள் என்றாலும், அவர்களை அந்த ஆபத்துக்கு தள்ளிவிடும் போக்கையே ஆட்சியாளர்கள் கொண்டிருக்கிறார்கள்!




மத்தியில் ஆளும் பிரதமரும் மாநிலத்தில் ஆளும் முதல்வரும் அந்த நாற்காலியை விட்டு இறங்கி வந்து மக்களோடு மக்களாக நின்று அவர்களின் வாழ்வாதாரத்தைப் பார்க்கவேண்டும்! பைத்தியக்காரத்தனத்தின் உச்சத்தில் இருந்து கொண்டு அவர்கள் தங்களின் மிச்சத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது! அப்படிப் பார்ப்பார்களேயானால் அவர்களின் எச்சத்தைக்கூட விடாமல் காலம் துடைத்தெறிந்து விடும் என்பதுதான் வரலாறு காட்டும் உண்மையாக இருக்கும்!



## என்ன பேச வேண்டும் என் பிரதமர்?— நம் கிராமங்களையும் நகரங்களையும் மறுவரையறுப்போம்!

உலகின் பழமையான விவாதம் ஒன்று இந்தக் கொள்ளைநோய் காலகட்டத்தில் மீண்டும் உயிர் பெறுகிறது. 'நகரமா, கிராமமா; எது நம் நீடித்த நிம்மதியான வாழ்க்கைக்கு உகந்தது?' லண்டன், நியூயார்க், மாஸ்கோ, சாவ் பாவ்லோ, மும்பை என்று மனித குலம் நம்பும் கனவு நகரங்கள் பலவும் கரோனா தொற்றுக்கு அதிகம் இலக்காகி இருப்பதும், நகரங்களை ஒப்பிட நெரிசலும் நெருக்கடியும் அற்ற கிராமங்கள் பாதுகாப்பாக இருப்பதும் இந்த விவாதத்துக்குக் கூடுதல் உத்வேகம் தந்திருக்கிறது. உலகின் பல நாடுகளில் நகரங்களில் வாழ்வோர் இன்று அங்கிருந்து வெளியேற ஆர்வத்தோடு இருப்பதாகச் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் நகரின் மையத்திலிருந்து விளிம்புக்கு, புறநகருக்கேனும் சென்றிட வேண்டும் என்று தெரிவிக்கின்றனர். இத்தகு உணர்வுகளை எப்படிப் புரிந்துகொள்வது?

பொதுவாக, நகரங்களை நவீனத்துடனும், கிராமங்களைப் புராதனத்துடனும் பொருத்திப் பார்க்கும் மனோபாவம் உலகம் முழுக்க நிலவுகிறது. உண்மை அப்படி இல்லை என்றாலும்கூட. அழிவில் புதையுண்டுபோன சிந்து சமவெளி, கீழடி தொடங்கி தம்மை மீட்டுருவாக்கியபடியே வந்திருக்கும் ஏதென்ஸ், ரோம், லண்டன் வரை நமக்குச் சொல்வது, நகரங்களின் புராதனத்தையும்தான். தீவிரமான விமர்சனங்களை நகரங்கள் மீது கொண்டிருந்தாலும் ஏன் மனித குலம் இடையறாது நகரங்களை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது? ஏனென்றால், வாழ்க்கையை நேற்றைய புதுமையும்கூட மூடிடாத வகையில் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கும் பண்பை நகரங்கள் பெற்றிருக்கின்றன. அப்படியென்றால், கிராமங்கள் எப்படி நீடிக்கின்றன? அவை இன்றைய புதுமையையும் வாழ்க்கையின் நெடிய பழமையோடு இணைக்க முற்படுகின்றன. ஆக, மனித குலத்தின் புராதன புதுப்பிப்பு சக்தி நகரங்கள் என்றால், புராதனத்தைத் தக்கவைக்கும் சக்தி கிராமங்கள். இரண்டுக்கும் இடையிலான சமநிலை முக்கியம்.

இந்தியாவைப் பொறுத்த அளவில் சுதந்திர இந்தியாவைத் தீர்மானிப்பதிலேயே இந்த விவாதம் பெரும் செல்வாக்கு செலுத்தியது. உலகப் போக்கிலிருந்து விலகி தேசப் பிதா காந்தி இந்தியாவுக்குக் கிராமத்தன்மை கொடுக்க முற்பட்டார். காந்திக்கு மாற்றுச் சிந்தனையாளர்களான பெரியார், நேரு, அம்பேத்கர், அண்ணா என ஏனைய பலரும் தம்முடைய தாயகத்துக்கு நகரத்தன்மையைக் கொடுக்க முற்பட்டனர். கிராமங்களையும் சிறிய அளவிலான நகரங்களாக இவர்கள் பார்க்க ஆசைப்பட்டபோது நகரங்களையும் பெரிய அளவிலான கிராமங்களாகப் பார்க்க காந்தி ஆசைப்பட்டார்.

நினைக்கும்போதே ஆலைகளின் இடையறாத பெரும் சப்தமும், நெரிசலான போக்குவரத்தும், வளங்களைச் சுரண்டும் பேராசையும் மிகுந்த நகரங்களைக் காட்டிலும், காந்தியின் அமைதியான உன்னத கிராமம் எளிதாக எல்லோரையும் ஈர்ப்பது. ஆனால், காந்தியின் உன்னத கிராமத்தை நோக்கி நடப்பவர்கள் வழியில் குண்டாந்தடியுடன் நிற்கும் நகரங்களின் தீவிர ஆதரவாளரான அம்பேத்கரை எதிர்கொள்ள வேண்டும். அவரிடமிருந்து தப்பித்தல் கஷ்டம். ஏனெனில், அவர் கையில் வைத்திருக்கும் குண்டாந்தடியின் பெயர் சத்தியம்.இந்தியக் கிராமங்களின் சீழ்பிடித்த சாதிய நிதர்சனத்தை அவர் தோலுரித்து நம் முன் வீசுகிறார். உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் போலவே சுயமரியாதையும் கண்ணியமும் நிறைந்த ஜனநாயக வாழ்க்கைச் சூழல் மனிதர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதையும், கிராமங்கள் எவ்வளவு ஒடுக்குமுறைத்தன்மையைக் கொண்டிருக்கின்றன என்பதையும் நமக்கு அவர் உணர்த்துகிறார்.

அதே சமயம், அம்பேத்கர் நம்பிக்கையோடு பார்த்த நகரங்களும் இந்தியாவில் சகலருக்குமான சமூக விடுதலைக்கு வழி வகுக்கவில்லை. தலித்துகளோடு அதே வாழ்க்கைப்பாட்டிலுள்ள ஏனைய சாதி மக்களையும் நகர்ப்புறச் சேரிகள் உள்ளடக்கியதுதான் இந்திய நகரங்களின் உச்சபட்ச சாதனை. ஒப்பீட்டளவில், கிராமங்களைக்




காட்டிலும் பல மடங்கு தாராள சுதந்திர வெளியாக நகரங்கள் திகழ்கின்றன என்றாலும், குறைந்தபட்ச சமூகப் பாதுகாப்புகூட இல்லாமல் கூட்டம் கூட்டமாக அகதிகளைப் போல இன்று நகரங்களிலிருந்து சொந்த கிராமங்களை நோக்கி புலம்பெயர் தொழிலாளர்கள் வெளியேறும்போது அம்பேத்கரின் நகரம் தொடர்பிலான நம்பிக்கையும், காந்தியின் கிராமம் தொடர்பிலான கனவுபோலவே உருக்குலைந்து வழிந்தோடுகிறது.

எப்படியாயினும் நாம் தோற்றுவிட்டோம். நம்மால் கிராமங்களையும் ஜனநாயகப்படுத்திச் செழுமைப்படுத்த முடியவில்லை; நகரங்களையும் பசுமைத்தன்மையோடு எல்லோருக்குமானதாக வளர்த்தெடுக்க முடியவில்லை. நகரம் — கிராமம் இரு அமைப்புகளையுமே நம்முடைய இன்றைய பார்வையும் கொள்கைகளும் வெவ்வேறு வகைகளில் சுரண்டுகின்றன. இரண்டையுமே நாம் பயன்படுத்திக்கொண்டாலும், இரண்டின் மீதுமே நமக்கு வரலாற்று வெறுப்பு இருக்கிறது. நம்முடைய முன்னோடிகளும் இதற்கு விதிவிலக்குகளாக இல்லை. காந்தியினுடையது நகர வெறுப்பு என்றால், அம்பேத்கருடையது கிராம வெறுப்பு. கிராமங்களையும் நகரங்களையும் எதிர் எதிரே நிறுத்துவதற்கு மாறாக இந்த முரணியக்கத்தைச் சமநிலையில் பராமரிப்பது தொடர்பில் நாம் யோசிப்பதே இன்றைய தேவை என்று தோன்றுகிறது.

கிராமங்கள் — நகரங்கள் இடையிலான சமநிலைக் குலைவுக்கான முக்கியமான காரணம்,

சமஸ்

'உற்பத்தி — சந்தை முறை'யில் நேரிட்ட சமநிலைக் குலைவு. சுற்றிலும் உள்ள கிராமங்களில் உற்பத்தி, அவற்றின் மையத்தில் உள்ள நகரத்தில் சந்தை என்று ஒன்றையொன்று நேரடியாகச் சார்ந்து




இயங்குவதாக இந்த அமைப்பு நீடித்தவரை கிராமங்கள் — நகரங்கள் சமநிலையில் குலைவு இல்லை. தொழில்மயமாக்கலின் விளைவாக நகரங்கள் பெரும் ஆலைகளோடு உற்பத்திக் கேந்திரங்களாகவும் உருவெடுத்த பிறகு, புதிய ஜனநாயக மாற்றங்களும் சேர்ந்து, நகரமையச் சிந்தனையை அரசுகள் சுவீகரித்துக்கொள்ள

நகரங்களின் கை ஓங்கியது. இப்போது மீண்டும் உற்பத்தியை நகரங்களுக்கு வெளியே கொண்டுசெல்வதை நாம் யோசிக்க வேண்டும்.

சுயசார்பு தொடர்பில் நாம் நிறையப் பேசுகிறோம். எந்த ஒரு ஊரும் உணவுக்கு எப்படி முழுமையாக வெளிப் பிராந்தியத்தைச் சார்ந்திருக்க முடியாதோ அதேபோல, தொழில் வாய்ப்புகளுக்கும் முழுமையாக வெளிப் பிராந்தியத்தைச் சார்ந்திருக்க முடியாது. உணவு, தொழில் வாய்ப்புகள்போல, பசுமையான சூழலையும், ஜனநாயகச் சமநிலையையும் உள்ளடக்கியதுதான் சுயசார்பு. இவற்றை உருவாக்குவதில் அரசுக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. அது வெறுமனே உபதேசங்களை வாரி வழங்கிவிட்டு சுயசார்பை முற்றிலுமாகத் தனிமனிதர்களின் பொறுப்பாக்கிவிட முடியாது.

சுயசார்பானது கூட்டுப்பொறுப்பு. ஊர்களுக்கான திட்டமிடல் இதில் முக்கியமான அம்சம்; அது ஒரு தொடர் பயணம். ஒவ்வொரு முடிவும் முக்கியமானது. பிரிட்டிஷார் 1853 ஏப்ரல் 16 அன்று 14 பெட்டிகளில் 400 பயணிகளோடு தொடங்கிய முதல் ரயில் சேவைக்கு அன்றைய பம்பாய்க்கு மாற்றாக வேறு ஒரு நகரத்தைத் தேர்ந்தெடுத்திருந்தால் இன்றைய மும்பை எப்படியானதாக இருந்திருக்கும்? 1911—ல் அன்றைய கல்கத்தாவிலிருந்து டெல்லிக்குத் தலைநகரை மாற்றாவிடில் இன்றைய கொல்கத்தா என்னவாக இருந்திருக்கும்? சுதந்திர இந்தியாவின் ஊர் கட்டுமானத் தோல்விகள் தலைநகர் டெல்லியின் விரிவாக்கத்திலேயே தொடங்கிவிட்டன. இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டதற்கும், குடியரசாக அறிவிக்கப்பட்டதற்கும் இடையிலான நான்கு ஆண்டுகளில் (1947—1951) மட்டும் 10 லட்சம் பேர் புதிதாக டெல்லிக்குள் வந்திருந்தனர்; அதாவது, மக்கள்தொகை இரட்டிப்பானது.

பிரிவினைக் கலவரங்கள் உண்டாக்கிய புலம்பெயர்வே இதற்கான முக்கியமான காரணம் என்றாலும், அகதிகளின் நிரந்தரக் குடியேற்றத்துக்கான விரிவான ஏற்பாடுகளை இந்திய அரசு சிந்திக்கவில்லை. விளைவாக, டெல்லியைச் சுற்றியிருந்த கிராமங்களை விழுங்கியே அகதிகளின் குடியேற்றமும், அதன் வழியிலான நகர விரிவாக்கமும் நடந்தன. 1951—ல் 198 சதுர கி.மீ. பரப்பில் இருந்த டெல்லியின் நகர்ப்புற பகுதி, 1961—ல் 323 சதுர கி.மீ. பரப்புக்கு விரிந்தது. "இது தவிர்க்க முடியாத தற்காலிக ஏற்பாடாகிவிட்டது; நகரங்கள் சிறப்பாகத் திட்டமிடப்பட வேண்டும்" என்று அரசின் தோல்வியை ஒப்புக்கொண்டு பேசினார் முதல் பிரதமர் நேரு. ஆயினும், இந்தியா அதற்குப் பின்னரும் முறையாக நகரங்கள் — கிராமங்களைத் திட்டமிடவில்லை. நகரங்கள் — கிராமங்களின் உள்ளடகத்தில் உள்ள குறைகள் சீரமைக்கப்படவில்லை.

பரவலான வளர்ச்சியை நீண்ட காலமாகப் பேசுகிறோம். ஆயினும், பெருநகரங்கள் சார்ந்தே வளர்ச்சி குவிகிறது. ஏன்? அங்குள்ள வாய்ப்புகள்தான் முக்கியமான காரணம். இயல்பாகவே வெவ்வேறு துறைசார் ஆளுமைகள் ஒரே ஊரில் திரளும்போது — கல்வி, வர்த்தகம், கலை, அறிவியல், அரசியல் அதிகாரத்தின் கூட்டு சக்தி ஒரே இடத்தில் வெளிப்படும்போது, அந்தக் கூட்டு சக்தியின் விளைவு நம்முடைய கற்பனைகளையும் கட்டுப்பாடுகளையும் விஞ்சிவிடுகிறது. அரசும் தன்னுடைய எல்லாத் துறைகளையும் ஒரே இடத்தில் குவிக்கும்போது பெருநகரங்கள் வீங்கிவிடுகின்றன.

இந்தியாவிலேயே அதிகமான மக்கள்தொகையைக் கொண்டதும் — பிரேசிலுக்கு சமமானதுமான — உத்தர பிரதேசத்தின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு இணையான உற்பத்தி மதிப்பை மும்பை நகரம் மட்டுமே கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் நான்கில் மூன்று பங்கை சென்னை மட்டுமே கொண்டிருக்கிறது. இப்படி வளரும்போது நகரத்துக்குக் காய்கனி வழங்கிய படப்பைப் பகுதியையும் தொழிற்பேட்டையாக அது விழுங்கிவிடுகிறது. அதாவது, எல்லா நகரங்களையும்கூட அல்ல; சில பெருநகரங்களை மட்டுமே நாம் வளர்த்துக்கொண்டிருக்கிறோம். கூடவே நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் சமநிலையையும் குலைத்துவிடுகிறோம். ஒரு நகரத்தின் மையத்தில் இருப்பவர் அதே நகரத்தின் விளிம்பில் இருப்பவரைக் காட்டிலும், அவர் விரும்பும் வேலைக்குக் குறைந்தது மூன்று மடங்கு அருகில் இருக்கிறார் என்றால், கிராமங்களில் வசிப்பவர்களின் வாய்ப்புக்கான தொலைவை எப்படி விவரிப்பது?

அதிகாரத்தை எப்படிப் பகிரவில்லையோ அப்படியே வாய்ப்புகளையும் நாம் பகிரத் தவறிவிட்டோம். அதுதான் நம்முடைய தவறுகளிலேயே பிரதானமானது. இப்போது இணை உருவாக்கம் தேவைப்படுகிறது. நாம் நீண்ட காலமாகக் கிராமங்களுக்கு நகரத்தன்மை அளிப்பதைப் பற்றிப் பேசிவந்திருக்கிறோம்; இனி நகரங்களுக்கும் கிராமத்தன்மை அளிப்பதைப் பற்றிப் பேச வேண்டும். பெருநகரங்களுக்கு ஒத்திசைவாக சிறுநகரங்கள், கிராமங்களையும் கிராமங்கள், சிறுநகரங்களுக்கு ஒத்திசைவாகப் பெருநகரங்களையும் கற்பனைசெய்ய வேண்டும். முக்கியமாக, எல்லாத் துறைகளும் ஓரிடத்தில் குவிவதை உடைக்க வேண்டும். இந்திய நகரங்களையும் கிராமங்களையும் மறுவரையறுப்பதற்கு இது மிக முக்கியமான தருணம். நம்மை நாம் புதுப்பித்துக்கொள்வோம்!



VARSHA ™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

ஒரு உண்மை

# தெரிஞ்சாகணும்

## இந்தியா – சீனா மோதலுக்குப் பின்னுள்ள வரலாறு

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் கல்வான் பள்ளத்தாக்கில் நடந்த மோதல்கள், பாங்காங் ஏரிப் பகுதியில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுகள் யாவற்றையும் 'திபெத்தின் ஐந்து விரல்கள்' என்ற உருவகத்தோடு சீனா பிணைக்கிறது. அது என்ன திபெத்தின் ஐந்து விரல்கள்? மாவோவால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தக் கருத்தாக்கத்தின்படி, திபெத் பகுதிதான் சீனாவின் வலது உள்ளங்கை; லடாக், நேபாளம், சிக்கிம், பூட்டான், அருணாசல பிரதேசம் ஆகியவை அதன் ஐந்து விரல்கள். அவற்றை விடுவிப்பது தனது கடமை என்று சீனா கருதுகிறது. இந்த ஐந்து விரல்களும் தன்னுடனேயே இருக்கும்படி உறுதிசெய்துகொள்வதற்கான நடவடிக்கைகளை இந்தியா எடுத்துவருகிறது.


## நேருவின் மும்முனைக் கொள்கை

இந்தியாவும் சீனாவும் பஞ்ச சீல ஒப்பந்தத்தைச் செய்துகொண்ட 1954—க்கும், சீன—இந்தியப் போர் நடந்த 1962—க்கு முன்பும் இடையிலான காலட்டத்தில் சீனாவின் பிரகடனங்களில் சிலவற்றைக் குறித்து நேரு அரசு கவலை கொள்ள ஆரம்பித்தது. குறிப்பாக, 1959—ல் திபெத்திலிருந்து தலாய் லாமா தப்பி இந்தியாவுக்கு வந்த பிறகு 'காஷ்மீருக்கு சுய—நிர்ணய உரிமை' கிடைக்க வேண்டும் என்று சீனா கோருவதற்கு ஆரம்பித்தது என்று எழுதியிருக்கிறார் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலர் டி.என்.கௌல். சீனப் பத்திரிகைகளும் வானொலியும் இந்தியாவுக்கு எதிராக எப்படி பிரச்சாரத்தை மேற்கொண்டன என்பதைப் பற்றியும், நாகா, மிசோ கிளர்ச்சியாளர்கள் தங்கள் நாட்டில் தஞ்சம் புகவும் ஆயுதப் பயிற்சி மேற்கொள்ளவும் சீனா அனுமதித்தது என்பதைப் பற்றியும் அவர் விவரித்துள்ளார்.

பிரதமர் நேருவின் கணக்குகள் 1962 போரில் தவறானது தொடர்பில் நிறைய விரிவாக அலசப்பட்டிருக்கிறது. ஆனால், நேரு அப்போது உருவாக்கிய மும்முனை வெளியுறவுக் கொள்கை அந்த அளவுக்குப் புரிந்துகொள்ளப்படவில்லை. நேருவாலும் பின்னவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கொள்கை சென்ற நூற்றாண்டின் போக்கில், மாவோவின் ஐந்து விரல்கள் கொள்கைக்கு வலுவான போட்டியைக் கொடுத்தது.

## எல்லையில் கட்டமைப்பு

முதலாவது கொள்கை, எல்லைப்புறத்தில் அடிப்படைக் கட்டமைப்பையும் நிர்வாகத்தையும் உருவாக்குவதற்கான முன்னெடுப்பு. 1950—களில் அருணாசல பிரதேசத்தையும் இந்தியா—சீனா எல்லையில் உள்ள மற்ற பகுதிகளையும் நிர்வகிக்க 'இந்திய எல்லைப்புற ஆட்சிப் பணிகள்' (ஐ.எஃப்.ஏ.எஸ்.) என்ற திட்டத்தை அரசு உருவாக்கியது. வெளியுறவுச் செயலர்தான் ஐ.எஃப்.ஏ.எஸ். தேர்வுக் குழுவின் தலைவர். இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பலரும் எல்லையில் மிகவும் தொலைவில்






இருந்த பழங்குடியினர் பகுதிகளிலும், அந்தப் பகுதியில் உள்ள தூதரகங்களிலும் மாறிமாறிப் பணிபுரிந்தனர். எல்லையில் நம்முடைய கட்டமைப்பைப் பலப்படுத்துவதில் வளர்ச்சியை ஒரு கருவியாக்கினர்.

அருணாசல பிரதேசத்திலிருந்து லடாக் வரை பயணித்து அந்தப் பகுதிகளின் விரைவான வளர்ச்சிக்காகப் பரிந்துரைகள் கொடுப்பதற்காகவே அதிகாரிகளுக்கென்று வெளியுறவுத் துறை அமைச்சகத்தில் சிறப்புப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. அடிப்படைக்

ஸுஹாஸினி ஹைதர்

சாலைகள் அமைப்பும் பங்கிட்டுக்கொண்டன. ஆயினும், எல்லைப்புறத்தில் உள்ள பகுதிகள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் அரசின் கவனம் தங்கள் மீது விழுவதில்லை என்றும் முறையிடும் தருணத்தில் ஐ.எஃப்.ஏ.எஸ். அமைப்பை இன்று மீண்டும் கொண்டுவந்தால் நன்றாகத்தான் இருக்கும்.



கட்டமைப்புகளைப் பொறுத்தவரை சீனா பல பத்தாண்டுகளாக அடைந்த வளர்ச்சியை நாம் இப்போதுதான் துரத்திக்கொண்டிருக்கிறோம். இதற்கான அடிப்படை ஐ.எஃப்.ஏ.எஸ். இயங்கிய குறுகிய கால அளவுக்குள் உருவாக்கப்பட்டது. ஆயினும், 1968—ல் ஐ.எஃப்.ஏ.எஸ். முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐ.எஃப்.ஏ.எஸ். என்பது அப்போது மிகவும் புதுமையான சிந்தனை. அதற்குப் பிறகு அது ஆற்றிய பணிகளை இந்திய ராணுவமும் எல்லைப்புற

### அண்டைப் பிணைப்பு

இரண்டாவது கொள்கை, அண்டை நாடுகளுடனான பிணைப்பு. நேபாளத்துடனும் பூட்டானுடனும் தொடர்ச்சியாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பலம் சேர்த்தன. ஜம்மு—காஷ்மீருடன் இணைக்கப்பட்ட லடாக்கையும் (1947), அருணாசல பிரதேசத்தையும் உள்ளடக்கிய பகுதிகள் மீது ராணுவரீதியிலும் நிர்வாகரீதியிலும் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டது. 1950—ல் சிக்கிமுடன் செய்துகொண்ட ஒப்பந்தமானது இந்தியாவால் பாதுகாக்கப்படும்

நாடாக சிக்கிமை ஆக்கியது. 1975—ல் இந்திரா காந்தியின் அரசு சிக்கிமை இந்தியாவின் ஒரு பகுதியாக ஆக்கி, அதை இந்தியாவின் 22—வது மாநிலமாகவும் ஆக்கியது.

இந்த ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றும் இரண்டு தரப்புகளுக்குமே லாபம் என்ற கணக்கில் இந்தியாவுடன் நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளைப் பிணைத்தன என்றாலும், காலப்போக்கில் இந்த ஒப்பந்தங்கள் காலாவதி ஆயின. நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுடன் கொண்டிருக்கும் தனித்துவமான உறவுகளால் திறந்த எல்லைகள், சுலபமாகச் சென்றுவருதல், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், கல்வி, உலக அரங்கில் இந்தியாவின் செல்வாக்கு மிக்க ஆதரவு உள்ளிட்ட நன்மைகள் கிடைத்தாலும் பொதுமக்களின் நினைவிலிருந்து இவையெல்லாம் மறைந்துபோயின. சீனாவால் நேபாளத்துக்குள் நுழைய முடிந்தாலும் பூட்டானுக்குள் நுழைய முடியவில்லை. இதற்கான காரணங்களுள் ஒன்று, இந்தியாவும் பூட்டானும் 1949—ல் செய்துகொண்ட 'நீடித்த சமாதானம் மற்றும் நட்புறவு'க்கான ஒப்பந்தம் 2007—ல் 'இந்தியா—பூட்டான் நட்புறவு ஒப்பந்தம்' ஆகப் புதுப்பிக்கப்பட்டது ஆகும். எனினும், இந்த ஒப்பந்தத்தில் பூட்டானின் வெளியுறவு விவகாரங்களில் இந்தியா வழிநடத்தும் என்ற பிரிவு மட்டும் நீக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்தியா—பூட்டான் உறவுகளை நல்ல நிலையில் இதுவரை வைத்திருக்கிறது. 2017—ல் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் டோக்லாமில் உரசல் ஏற்பட்டபோது, சீனாவிடமிருந்து பூட்டானுக்குப் பெரும் அழுத்தம் கொடுக்கப்பட்டபோதும், இரண்டு நாடுகளுக்கும் இடையே நல்லுறவே நிலவியது.

ஆயினும்,1950—ல் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட 'சமாதானம் மற்றும் நட்புறவுக்கான ஒப்பந்த'த்தை மறுஆய்வுக்கு உட்படுத்தும்படி நேபாளம் பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டிருந்தாலும் இந்தியா அப்படிச் செய்யாமல் இழுத்தடித்துக்கொண்டே வந்திருக்கிறது.

## திபெத்துடனான நெருக்கம்

மூன்றாவது கொள்கை, ஐந்து விரல்களையும் கொண்ட கையாக சீனாவால் பார்க்கப்படும் திபெத்துடனான இந்தியாவின் நெருக்கம். தலாய் லாமாவுக்கும் அவருடைய லட்சக் கணக்கான தொண்டர்களுக்கும் 1959—லிருந்து தஞ்சம் கொடுப்பதான பாராட்டுக்குரிய இந்தியாவின் முடிவு இதன் பின்னணியிலேயே இயங்குகிறது. இன்றுள்ள சவால் என்னவென்றால், உலகம் முழுவதுமுள்ள திபெத்தியர்களின் ஆதரவை இப்போது தலாய் லாமா பெற்றிருக்கிறார். ஆனால், அவருக்குப் பிறகு யார் தலைமை என்ற கேள்வி அந்தச் சமூகத்தைச் சூழ்ந்திருக்கிறது. 2000—ல் சீனாவிலிருந்து தப்பி இந்தியா வந்த கர்மபா லாமா, எதிர்காலத் தலைமைக்கு வாய்ப்புள்ளவராக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றாலும், தற்போது வேறொரு நாட்டின் குடிமகனாக இருக்கிறார்; பெரும்பாலும் அமெரிக்காவிலேயே வசிக்கிறார். இதற்கிடையே, சந்தேகத்துக்கு இடமின்றித் தனது தெரிவையும் அந்தச் சமூகத்தின் மீது சீனா திணிக்கும். ஏராளமான திபெத்தியர்களைத் தன்னிடம் கொண்டிருக்கும் இந்தியா, இந்த விவகாரத்தில் மிக முக்கியமான பங்கை ஆற்ற வேண்டும்.

## செய்ய வேண்டியது என்ன?

ஆக, 'உண்மையான கட்டுப்பாட்டு எல்லைப் பகுதியில் அடுத்து என்ன அடியெடுத்து வைப்பது என்று இந்தியா திணறும் சூழலில், அரசு செய்ய வேண்டிய முக்கியமான காரியம், மும்முனைக் கொள்கை போன்ற ஒரு மாபெரும் உத்தியை உருவாக்கி, இந்தப் பகுதிகள் ஒவ்வொன்றையும் தன்னுடன் நெருக்கிவைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதும், அண்டை நாடுகளுடனான ஒப்பந்தங்களைப் புதுப்பிப்பதும்தான்! மேலதிகம் இப்போதைய சீனாவின் எதிர்வினைக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. ஆகஸ்ட் 2019—ல் ஜம்மு—காஷ்மீரை இந்தியா மறுவரையறுத்தது, பாதுகாப்புச் சூழலையும் அச்சுறுத்தல் அளவுகளையும் மாற்றியமைத்திருக்கிறது. ஜம்மு—காஷ்மீர் விவகாரத்தை, குறிப்பாக லடாக் தொடர்பாக சீனா கடுமையாக விமர்சித்துள்ளது. 'சீனாவின் எல்லைப்புற இறையாண்மையைக் குறைத்து மதிப்பிடும் செயல்' என்றது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரையும், அக்ஷய் சின்னையும் திரும்ப எடுத்துக்கொள்வதாக உள்துறை அமைச்சர் அமித் ஷா கடந்த ஆகஸ்ட்டில் சூளுரைத்ததும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படாது. ஏனெனில், சீனா—பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் அந்த வழியாகத்தான் செல்கிறது. ஜம்மு—காஷ்மீரின் புதிய வரைபடம் நேபாளத்துடனான உறவிலும் பாதிப்பை ஏற்படுத்தியிருப்பது தற்செயலானது அல்ல. சீனாவை எதிர்கொள்ள இந்திய அரசு தயாராகிக்கொண்டிருக்கும் வேளையில், தனது எந்த விரலின் மீதிருந்தும் தன் பார்வை விலகிவிடாமல் இந்தியா பார்த்துக்கொள்வது மிகவும் அவசியம் என்று மட்டும் உறுதியாகக் கூறலாம்.

தமிழில்: ஆசை


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37



# அகதி முகாம்களே

## இவர்களுக்கு முகாம்களே வாழ்வாதாரம் !

புகலிடம் என்பது, மிகப் பழங்காலத்திருந்தே நாடுகள் கடைப்பிடித்து வரும் பழக்கமாகும். போரில் தோற்ற மன்னர்கள், நட்பு நாட்டு மன்னர்களிடம் தஞ்சமடைதலும், பின்னர் அவர்கள் ஆதரவுடன் படை திரட்டி மீண்டும் போரிட்டு தன் நாட்டை மீட்பதும் வரலாற்றில் அதிகம் காணப்படும் நிகழ்வாகும்.

தென் அமெரிக்க நாடான வெனிசுலா காரகாஸில் 1945 மார்ச் 28—இல் ஏற்கப்பட்ட ஆள்நில எல்லைப் புகலிடம் குறித்த மாநாட்டின் 1—ஆவது ஷரத்து, தனது இறையாண்மை அதிகாரத்தின் கீழ் எவருக்கும் தனது ஆள்நில எல்லைப் புகலிடம் அளிப்பதற்கு ஒவ்வொரு நாட்டுக்கும் உரிமை உண்டு. ஒரு நாடு தனது புகலிடம் அளிக்கும் உரிமையை செயல்படுத்தியது குறித்துக் குற்றம் சொல்வதற்கு எந்தவொரு நாட்டுக்கும் உரிமை கிடையாது என்று கூறுகிறது.

பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகள் தங்களின் உள்நாட்டுச் சட்டத்திலேயே புகலிடம் அளிப்பதற்கான உரிமையை அறிவித்துள்ளன. 1959—இல் திபெத்தில் தங்களுக்கு எதிராக கலவரங்களைத் தூண்டிவிட்டதாக சீன அரசால் குற்றஞ்சாட்டப்பட்ட தலாய்லாமாவுக்கு தன் ஆள்நில எல்லைக்குள் இந்தியா புகலிடம் அளித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அகதி என்பவர் இனம், சமயம், தேசிய இனம், குறிப்பிட்ட சமூகக் குழுவொன்றில், அரசியல் கருத்து என்பவை காரணமாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரும், அவருடைய நாட்டுக்கு அல்லது சொந்த இடத்துக்கு வெளியில் இருப்பவரும், அந்த நாட்டினுடைய பாதுகாப்பைப் பெற முடியாத அல்லது அச்சம் காரணமாக அவ்வாறான பாதுகாப்பை நாட விரும்பாதவருமான ஒருவரைக் குறிக்கும்.

அரசியல், போர் உள்ளிட்ட காரணங்களால் தம் நாட்டிலிருந்து வெளியேறி பிற நாட்டிலோ அல்லது அதே நாட்டில் பிற இடங்களுக்கோ அடைக்கலம் புகுந்தவர், இடம்பெயர்ந்தவர் அகதி எனப்படுவர். பொதுவாக புகலிடம் என்பதும் ஒரே பொருளிலேயே பயன்படுத்தப்படுகிறது.

ஆனால், இவர்களுக்குள் மெல்லிய வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. பரந்த பொருளில் நோக்கும்போது புகலிடம் கோரும் நபர்களுக்கு அடைக்கலம் தரும் ஒரு சட்ட நிறுவனமே புகலிடம் ஆகும். அகதி என்பது, அவ்வாறு புகலிடம் அளிக்கப்பட்ட நபரின் சட்டத் தகுதி நிலையாகும்.

புகலிடம் என்பது ஒரு நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. ஆனால், அந்தப் புகலிடம் பெற்ற அகதிகளின் சட்ட நிலை, சர்வதேச சட்டத்தால் ஒழுங்குபடுகின்றது. ஒரு நாட்டில் இருக்கும் அகதிகளுக்கு இடையே அவர்களின் இனம், மதம் அல்லது அவர்களின் பூர்வீக நாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டக் கூடாது.

ஒரு நாட்டில் சட்ட விரோதமாக நுழையும் அகதிகள் உள்ளே நுழைந்தவுடன் உரிய அதிகார அமைப்பிடம் சரணடைந்து உரிய விளக்கம் அளித்து விட்டால், சட்ட விரோதமாக நுழைந்த குற்றத்துக் காக அவர்களைத் தண்டிக்கக்கூடாது என்று அகதிகள் தகுதி நிலை குறித்த ஐ.நா. மாநாடு ஷரத்து 31 கூறுகிறது.

மேலும், ஒரு நாட்டில் அகதிகளாக அனுமதிக்கப்பட்டவர்கள், அந்த நாட்டில் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் செல்வதற்கு அந்த நாடு தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. அகதி என்ற வார்த்தையை கேட்கும்போது தானாகவே எல்லோருக்கும் கண்ணீர் வந்து விடும் என்பது நிதர்சனமான உண்மை.

மனிதன் தன் வாழ்க்கையில் பல விதமான துன்பங்களை அனுபவிக்கிறான். அதிலும் நாடு விட்டு நாடு சென்று அகதியாக வாழும் சூழ்நிலையில் உள்ளவர்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும். அப்படி வேதனைகளை அனுபவிப்பவர்கள், தங்களுடைய வாழ்க்கையை கவலையோடு கடத்துகின்றனர்.

# நாடாய்!



பொ.ஜெயச்சந்திரன்

உலக நாடுகளில் அகதிகளாக இருப்பவர்களில் அதிகமானோர் ஆப்பிரிக்கர்கள். அதனால்தான் முதலில் ஆப்பிரிக்க அகதிகள் தினம் என்று கடைப்பிடிக்கப்பட்டது. இது போன்ற நிகழ்வை வரலாற்று தினமாக மாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலும், ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள அகதிகளுக்கான தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையிலும், 2000—ஆம் ஆண்டில் ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் பிறகு ஆண்டுதோறும் ஜூன் 20—ஆம்தேதியை உலக அகதிகள் விழிப்புணர்வு தினமாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

அகதிகள், புலம்பெயர்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்குக்கொண்டே இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்தவர்கள்தான் உலகில் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளனர். இது ஒருபுறமிருக்க இலங்கையில் இருந்து வந்து தமிழக முகாம்களில் அகதிகளாக இருப்பவர்களின் எண்ணிக்கை 2018—ஆம் ஆண்டு கணக்கின்படி சுமார் 68,000 பேர். அதே போன்று காவல் துறை பதிவு மூலம் 50,000—த்துக்கும் மேற்பட்டவர்கள் வசித்து வருகிறார்கள்.

இலங்கை அகதிகளில் சுமார் 28,500பேர் இந்திய வம்சாவளித் தமிழர்கள். அதாவது, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள். இலங்கை இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு தற்போது இந்தியாவில் தஞ் சமடைந்திருப்பவர்கள். இவர்கள் சிறீமாவோ — லால் பகதூர் சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையில் வாழ்வதற்கான உரிமை பெற்றவர்கள்.

இலங்கை அகதிகளுக்கான மாத பணக் கொடையை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயர்த்தி குடும்பத் தலைவருக்கு ரூ.1,000, 12 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு ரூ.750, 12 வயதுக்குக் கீழே உள்ள குழந்தைகளுக்கு ரூ.400 என வழங்க 4.8.2011—இல் உத்தரவு பிறப்பித்தார். 9 ஆண்டுகள் நிறைவடைந்தும் இப்போதும் அதே மாத உதவித்தொகைதான் வழங்கப்படுகிறது. எனவே, மாத உதவித்தொகையை தமிழக அரசு அதிகரிக்குமா என்ற எதிர்பார்ப்பு அகதிகளிடம் உள்ளது.



இன்றைய அகதி முகாம்களில் வாழ்பவர்களில் சுமார் 55% பேர் இந்திய மண்ணில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இலங்கையைப் பார்த்ததுகூட இல்லை. இலங்கையின் கலாசாரம், பண்பாடு, அரசியல் எதுவும் இவர்களுக்குத் தெரியாது. இவர்களுக்கு இப்போது இருக்கும் கவலைகளில் முக்கியமானது இரட்டை குடியுரிமை, இரண்டாவது அரசுப் பணி தேர்வுகளில் தேர்வு எழுதுவதற்கு அனுமதி, மூன்றாவது வாக்குரிமை. இந்த மூன்றையும் யார் நிறைவேற்றுவார்கள் என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.




## 2. கடல் நடுவே கயவர்

**கொற்றவன்**

நிலவை மூடியிருந்த மேகம் விலகிய அதேநேரம், வானத்தில் ஆங்காங்கே வெள்ளித் துகள்களைத் தூவினாற்போல் விண்மீன்கள் கண்சிமிட்டத் தொடங்கின.

முசிறித் துறைமுக எல்லைக்கு மேற்கே நடுக்கடலில் நங்கூரமிட்டு நின்றிருந்தது கிரேக்கத்துக்குச் சொந்தமான ஒரு கப்பல். பச்சைவண்ணப் பாய்மரங்களுடன் ஒரு குன்றைப் போலிருந்த அக்கப்பல், வணிகக் கப்பலாகவோ பயணக் கப்பலாகவோ இல்லாமல், பார்க்கும்போதே அச்சுறுத்தும்படியான தோற்றத்தில் கட்டமைக்கப்பட்டிருந்தது.

அக்கப்பலின் மேல்தளத்தில் நின்றிருந்த சிமோ, ஆறடிக்கும் மேற்பட்ட உயரத்துடன், உருண்டு திரண்ட உடம்புடன் முரட்டுத்தனமாய் இருந்தான். கன்னத்திலும் மார்பிலும் விழுந்திருந்த வெட்டுக்காயங்கள், அவனது முரட்டுத்தனத்துக்கு விழுந்த முத்திரையாக அடையாளப்படுத்தின. கண்களில் வெறிகொண்ட வேங்கையின் சீற்றம் தெரிந்தது. அவனது உடையும் ஆபரணமும் கிரேக்கத்தைச் சார்ந்தவன் என்பதைப் பளிச்செனப் பறைசாற்றின.

கடற்பரப்பையே வெறித்தபடி நின்றிருந்தவன், பற்களை நறநறவென்று கடித்தபடியே திரும்பினான். அவன் பார்வை பதிந்த இடத்தில் பாய்மரத்தூணோடு பிணைத்துக் கட்டப்பட்டுக் கிடந்தான் ஒருவன்.

வேகமாக வந்த சிமோ, கட்டப்பட்டுக் கிடந்தவனின் தாடையில் காலைக் கொடுத்து நெம்பித் தூக்கினான். துவண்டுக் கிடந்த அந்த இளைஞன், சோகமும் சோர்வுமாக விழிகளைத் திறந்தான். எதிரே தெரிந்த சிமோவின் முகத்தைப் பார்த்ததும், அவன் விழிகளில் பயமும் மிரட்சியும் குடிகொண்டது. அரைமயக்கத்தில் கிடந்தவன் வாய்க்குழறி உளறலுடன் பேசத் தொடங்கினான்.

“என்னைக் கொன்று விடு! என்னைக் கொன்று விடு!” அவனது உளறலைப் பொருட்படுத்தாமல் தன் காலணியின் கூர்மையான முன்பகுதியை அவன் தொண்டையில் இறக்குவது போல நெருக்கி வைத்து அழுத்தி தன் கோபத்தை வெளிப்படுத்தினான்.

“எனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லிவிட்டேன்... மேலும் மேலும் என்னைக் வதைக்காதே... கொன்று விடு!...” அவன் சொல்லிமுடித்ததுதான் தாமதம்!

‘பளார்’ என்று கன்னத்தில் விழுந்த அறையில், அவன் கண்களில் மின்னல் வெட்டி இடிஇடித்து மறைந்தாற்போல் இருந்தது. அவனது முகத்துக்கு வெகு அருகே தெரிந்தது சிமோவின் உக்கிரமான முகம்!

“இதையே எத்தனைமுறைதான் சொல்லிக் கொண்டிருப்பாய்? என்னை ஏமாற்ற நினைத்து உன் உயிரை இழக்கப் போகிறாய்!” உறுமினான் சிமோ.

கீழே கிடந்தவன் வறட்டுச் சிரிப்புடன் முணுமுணுத்தான். “அதைச் செய் சீக்கிரம்!”

அந்தச் சிரிப்பு சிமோவுக்கு கோபத்தைத் தூண்டினாலும், அவனது உக்கிரப் பார்வை மறைந்து கண்களில் குரூரம் கொப்பளித்தது. முழங்காலிட்ட நிலையிலிருந்து வன்மச் சிரிப்புடன் எழுந்தான்.

“உண்மையைச் சொல்லாதவரை உன்னைக் கொல்லமாட்டேன். வதைத்துக் கொண்டேதான் இருப்பேன்.”

சொன்னவன் அதே வேகத்தில் ஓங்கி அவனது மார்பில் ஓர் உதை விட்டான். அந்தக் காட்சியைக் கண்டவாறே அங்கே வந்தான் கப்பல் தலைவன் மிக்கான்.

இளைஞன் மீண்டும், தட்டுத்தடுமாறி கூறினான். “எத்தனை முறை என்னை… வதைத்தாலும்… நடந்ததைத்தானே... சொல்ல முடியும்!”

சிமொவின் முகம் சிவந்தது. “உன்னை என்ன செய்கிறேன் பார்!” ஆவேசத்துடன் கத்தியபடியே தன் இடைவாளை விர்ரென உருவியவன், அவன் கழுத்தைப் பார்த்து வேகமாய் ஓங்கினான்.

அடுத்த கணம், மின்னல் வேகத்தில் ஓங்கிய அவன் கரம் அப்படியே நின்றது. ஓங்கிய கரத்தைத் தடுத்துப் பிடித்திருந்தான் கப்பல் தலைவன் மிக்கான்.

“போதும் சிமோ, அவனைக் கொன்றுவிடாதே!” எனக் கத்தினான்.

சினத்துடன் கப்பல் தலைவனை முறைத்தான் சிமோ. “இவன் எவ்வளவு பிடிவாதமாக மறுக்கிறான் பார்த்தாயா? இவனிடம் உண்மையை வரவழைக்காமல் விடமாட்டேன்!”

“இவ்வளவு நேரமும் அவனுக்குத் தெரிந்த உண்மையைத்தான் உளறிக் கொண்டிருக்கிறான், உணர மறுப்பது உனது முரட்டுத்தனம்!”


“என்னைக் குற்றம் சாட்டாவிட்டால் உனக்குத் தூக்கமே வராதா?”

“உன்னைக் குற்றப்படுத்தி எனக்கென்ன ஆகப்போகிறது? உன் நடத்தையை உனக்கு உணர்த்தப் பார்க்கிறேன். அவ்வளவுதான்!”

“கிடைத்தற்கரிய ஒரு வாய்ப்பு இவனால் பறிபோய்விட்டது! எப்படி இவனை மன்னிப்பது?”

தன் ஆத்திரத்தைக் கப்பலின் கைப்பிடித் தடுப்பில் காட்டினான். இருகைகளாலும் அவன் ஓங்கிக் குத்தியதில், அலை வந்து கப்பலை மோதியதுபோல ‘தொம்’ என்ற சத்தம் எழுந்தது. கைப்பிடியைப் இறுகப் பற்றியவாறே ஆழியை வெறித்தபடி புருவம் நெறித்தவன் கண்கள் குரூரமாய் சுருங்கியது.

அவனை நெருங்கி வந்து நின்றான் மிக்கான்.



*இருளில் நெளிந்த அலைகளில் அவ்வப்போது மீன்கள் வெள்ளித் துண்டுகளாய் துள்ளிக் குதித்த வண்ணம் இருந்தன. ஆழியை ஆட்சி செய்யும் மீன்கள், ஆட்டம் போடும் அழகைக் காண்பது ரசனைக்குரியதுதான் என்றாலும், சமயத்தில் அது ஆபத்தை வரவழைத்து விடும் அறிகுறியாகவும் மாறிவிடும்.*

*கப்பல் தலைவன் மிக்கான் மீன்களின் துள்ளலை உற்றுநோக்கியவாறும், சிமோவின் உள்ளத்துத் துள்ளலை அளந்தவாறும் இருந்தான். சிமோவை அமைதிப்படுத்தாவிட்டால் இங்கே வீணாக ஒரு கொலை நிகழும் என உணர்ந்தான்.*

*“கைக்கு கிடைத்த ஒரு வரம் கைநழுவிப் போய்விட்டது!” சிமோவின் புலம்பல் மிக்கானின் செவிகளில் விழுந்தது. இவன் நினைத்து நினைத்துப் புலம்பத் தொடங்கிவிட்டானெனில், அதுமேலும் வெறியாக வளர்ந்துக்கொண்டே போகும்! இவனை இப்போது ஆற்றுப்படுத்தாவிட்டால், ஆற்றுவெள்ளம்போல் ஆட்டம் போடத் துவங்கி விடுவானே எனக் கவலை கொண்டான் மிக்கான்.*



*துள்ளிக் குதிக்கும் வெள்ளி மீன்களை ஆராய்வதான பாவனையுடன் சிமோவின் எண்ணங்களை ஆராய்ந்த கப்பல்தலைவன், வானத்தை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினான். விரைவில் பொழுதுவிடிந்துவிடும் என்பதன் சாட்சியாக விடிவெள்ளி முளைக்கத் தொடங்கிற்று.*

*“சிமோ, நடந்தது நடந்துவிட்டது! விடியும்வேளை நெருங்கி விட்டது. கரைக்குச் சென்ற நமது ஆட்கள், நிச்சயம் நல்ல செய்தியைக் கொண்டு வருவார்கள். கவலையை விடு! விடிந்தபின் நாம் செய்ய வேண்டியதற்கு திட்டமிடு.”*

*“தீட்டிய திட்டம்தான் உடைந்து போய்விட்டதே!”*

*“திட்டத்தின் ஒரு பகுதிதானே உடைந்திருக்கிறது! இன்னமும் நமக்கு நிறைய வாய்ப்பிருக்கிறது!”*

*“கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டிருக்கிறோமே என்ற கவலை உனக்குக் கொஞ்சமும் இல்லையா?”*

*“உன்னை விடவும் எனக்கு அதிகமாகவே இருக்கிறது!”*

*“இந்தப் பெரும்பேச்சுக்கு ஒன்றும் குறைவில்லை உனக்கு!” சலிப்புடன் கூறிய சிமோவின் பார்வை அங்கே கட்டுண்டுக் கிடந்த இளைஞனின் மீது குவிந்தது.*

*“கிரேக்கத்தில் நீ செய்த சபதத்தை மறந்துவிட்டு இப்படிக் சலிப்படையலாமா?” என வலிய ஒரு புன்னகையை வரவழைத்த மிக்கான், அந்தச் சூழலின் இறுக்கத்தைச் சற்றே தளர்த்த நினைத்தான்.*

“மறக்கவில்லை மிக்கான்! மறக்கவில்லை! எப்படியும் இளவரசியை என் கைப்பிடிக்குள் கொண்டு வருவேன். அதை நிறைவேற்றிய பிறகே கிரேக்கத்தில் கால் வைப்பேன் என்ற சபதத்தை மறக்கவில்லை!”

“பிறகு ஏன் மனம் கலங்குகிறாய்?

“கையில் கிடைத்த மாணிக்கத்தைக் கடலில் வீசி எறிந்துவிடும் முட்டாள்தனத்தைச் செய்து விட்டால், வருத்தப்படாமல் எப்படி இருக்க முடியும்? இவ்வளவுபேர் இருந்தும், ஒரு பெண்ணிடம் தோற்றிருக்கிறோம் என்றால்... இதைவிட வெட்கக்கேடு வேண்டுமா? ச்சே!.. நினைக்கவே வெறுப்பாக இருக்கிறது!”

“ஏன் இவ்வளவு அவநம்பிக்கை? நம் ஆட்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடாதே! நேற்றிரவு இயற்கையும் சூழலும் நமக்கெதிராக இருந்ததனால்தான் கோட்டை விட்டுவிட்டோம்! பார், விடிந்ததும் இந்த நிலைமை மாறும்!”

“தானாக மாறும் என்று நினைப்பது மடமை! நாமாக மாற்ற வேண்டும் என்று நினைப்பதே திறமை!”

அவன் கூறியதைக் கேட்டு சற்றே முறுவலித்த மிக்கான், “எல்லாவற்றையும் உன் வார்த்தைப் பட்டியலில் அடக்கிவிடாதே சிமோ. பொழுது விடிவதும், இரவு கவிழ்வதும் நம் திறமையிலா உள்ளது? நம் திறமைக்குள் அடங்காதப் பட்டியல் ஏராளம் உள்ளன. எனவே திறமைக்கும் பொறுமைக்கும் உள்ள இடைவெளியைப் புரிந்துக் கொள்! விடியட்டும்! அதுவரை அமைதி கொள்” சிமோவின் தோளில் தட்டிக்கொடுத்து அங்கிருந்து நகர்ந்தான் மிக்கான்.

அவன் சொன்னதை மறுப்பதுபோல தலையாட்டிய சிமோ, ஆழியை வெறிக்கத் தொடங்கினான். குமுறும் உள்ளத்தோடு அவன் விழிகள் அலைகளை அளந்தன.

அந்த அலைகளில், முதல் நாள் இரவு நடந்த நிகழ்வுகளின் இறுதியாக நடந்த அந்தக் காட்சி தெரிந்தது.

அந்த இரண்டு யவன அழகிகளும் யாரும் எதிர்பாரா தருணத்தில் மிக வேகமாகக் கப்பலிலிருந்து தாவிக் கடலுக்குள் பாய்ந்தார்கள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவர்கள் பாய்ந்துவிட்டதை நம்பமுடியாமல் சிலநொடிகள் சிலையாக நின்றிருந்த சிமோ, அதற்குமேல் யோசிக்காமல் அவனும் கடலுள் பாய்ந்தான். சிமோ பாய்ந்த மறுகணமே அந்தக் கிரேக்கப் பெண்களுடன் நின்றிருந்த ஒரு கிழவரும், இளைஞனும் நீருக்குள் பாய்ந்தார்கள்.

பனிவிழும் அந்த முன்னிரவுப் பொழுதில், கப்பல் மேல்தளத்தில் ரசவாதம் ஏற்படுத்திக் கொண்டிருந்த ஐவரும் இமைப் பொழுதில் அந்த இடத்தை வெற்றிடமாக்கி விட்டு மறைந்து போனதை நம்பவியலாமல் பார்த்தபடி நின்ற கப்பல் தலைவன் மிக்கான், அந்த அதிர்வில் இருந்து மீண்டு ஓடிப்போய் கைப்பிடிமானப் பலகை மீது தாவி ஏறி நின்று, கடற்பரப்பின் மீது பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டே உரக்கக் கூவினான்.



'வீரர்களே! அவர்களைப் பிடியுங்கள்!"

கப்பல் தலைவனின் கட்டளையைக் கேட்ட மறுகணமே ஐந்தாறு வீரர்கள் கடலுக்குள் பாய்ந்தனர்.

அதேநேரம், கடலுக்குள் மூழ்கி எழுந்த சிமோ, கடல் நீரில் எங்கே சலசலப்பு சத்தம் கேட்கிறதென்று காதைத் தீட்டிக் கொண்டு நாலாபுறமும் அந்த இருளில் சுற்றிச் சுற்றி நீந்தி வந்தான்.

சில நொடிகள் கடந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலர் நீருக்கு மேலெழும்பி படபடவென்று நீந்தத் தொடங்கினார்கள். சிமோ வேகவேகமாய் அவர்களை நெருங்கினான்.



தலைக்காட்டியவர்கள் அவனது ஆட்களாகவே இருந்தனர். மீண்டும் மீண்டும் ஒவ்வொருவராய் தலைக்காட்டியவர்கள் அனைவரும் சொல்லி வைத்தாற்போலவே தனது ஆட்களாகவே இருந்ததைக் கண்டும் திகைத்தான் சிமோ.

எப்படி?எப்படி?

"அவர்கள் மட்டும் எப்படி மாயமானார்கள்?" அலைகள் வந்து கப்பலில் மோதும் சத்தத்தையும் மீறி ஒலித்தது அவனது குரல்,

"தேடுங்கள்!... நாலாபுறமும் நீந்திச் செல்லுங்கள்! அவர்கள் தப்பவே கூடாது! தேடுங்கள்!"

அவன் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு வீரர்கள் நாலாபுறமும் பிரிந்து வேகவேகமாய் நீந்தினார்கள்.

தன்னிடமிருந்து தப்பித்து நீருக்குள் பாய்ந்த அழகிகளும், அவ்விரு சேர நாட்டுக்காரர்களும் மட்டும் இன்னமும் வெளிப்படாமல் இருப்பது எப்படி?

நம்ப முடியாமல் மீண்டும் மீண்டும் நாலாபுறமும் மாறிமாறி நீந்தினான் சிமோ.

அவர்கள் மட்டும் எப்படி மாயமானார்கள்? எப்படியும் தண்ணீருக்குமேல் வந்தே தீரவேண்டும்! தப்பிவிடக் கூடாது! மனம் முழுதும் சிமோவுக்கு கோபமும் ஆற்றாமையும் ஒன்றையொன்று மிஞ்சும் அலைகளாக எழுந்து புரண்டது.

அப்போது சற்று தூரத்தில் நீரில் வெள்ளை வெளேரென்று ஏதோ ஒன்று தெரிய வேகவேகமாய் நீந்திச் சென்றான் சிமோ.

மெல்லிய துணி மட்டுமே அவன் கைக்கு கிட்டியது.

அது யவன இளவரசி உடுத்தியிருந்த மேலாடைத் துகில்!

அதெப்படி கரைநோக்கி நீந்தாமல் நடுக்கடல் நோக்கி வந்தது இந்தத் துகில்!

அப்படியானால்... அவர்கள் கரையை நோக்கி நீந்தாமல் நடுக்கடல் நோக்கியா நீந்திக் கொண்டிருப்பார்கள்?

ஏன்? என்ன திட்டம் அவர்களுக்கு?

அந்தக் கிழவனும் இளைஞனும் ஏதோ திட்டமிட்டு வந்துதான் இளவரசியைத் தப்பவைத்து விட்டார்களோ? விடக்கூடாது! அவர்களைத் தப்பவே விடக்கூடாது!

"எல்லோரும் நடுக்கடல் நோக்கி நீந்திப் பாருங்கள்! அவர்கள் இங்கேதான் எங்கோ மறைந்துக் கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார்கள்! விடாதீர்கள்!"

கடல் நேரில் மிதந்தபடியே கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான் சிமோ.

மேலும் அந்தத் திசையில் தேடலைத் தீவிரப்படுத்தினார்கள்.

நேரம் ஓடிக் கொண்டிருந்ததே தவிர, சிமோவும் அவனது ஆட்களும் எழுப்பிய சலசலப்பைத் தவிர, அவர்கள் கண்ணுக்கு வேறு எவரும் நீரில் நீந்துவதாகவே தெரியவில்லை.

தொடர்ந்து சிமோவும், அவனது ஆட்களும் வெகுநேரம் தேடிக் களைத்து, ஏமாற்றத்துடனே கப்பலுக்குத் திரும்பினர்.

அலைமோதும் மனதுடன் மேல்தளத்தில் நின்றிருந்த சிமோவின் கண்களில் விரிந்த அந்தக் காட்சி மறைந்தது.

கடல்காற்று சில்லென வீசியது.

சிமோவின் உள்ளம் கோபத்தில் கொதித்தது.

தன் இடையிலுள்ள குத்துவாளில் அவன் கரம் பதிந்தது.

கனவு தொடரும்...

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.

*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

editor@ithamil.com

# புள்ளியில் மறையும் சூட்சுமம்

பிசாசுகளைப் பிசாசு என்று
சொல்லக்கூடாது நாம்
புள்ளியில் மறைந்திருக்கலாம்
படைப்பின் சூட்சுமம்!

மனிதனின் தேடுகையும்
மனிதனைத் தேடுதலும் வித்தியாசப்படலாம்
பிசாசு என்று சொல்லாதீர்கள்
உக்கிரமாய் உதவலாம் அவை தேடுதலில்

நான் பிசாசா என்று
என் பிசாசிடம் கேட்கிறேன்
அரூபமாய் புள்ளியில் மறைந்து போகிறது
வீரியமற்ற கனவின் மிச்சம் போல அது

வெட்கவானின் சிதறிய பொழுதுகள்
வீறிட்டு அலறுகையில்
கையில் விளக்கேந்தி
புதுச் சொல் தேடுகிறது பிசாசு
தன் பெயரை அழகாக்கிக்கொள்ள

மிச்சத்தில் உழல்கிறான் மனிதன்
தானே பிசாசாய் ஆகிவிட்டது போல்!

**சு.மு.அகமது**

# குழந்தைகள் உலகம்

**ப.மதியழகன்**

குழந்தைகள் உலகம்
தனது நுழைவாயில் கதவுகளைத் திறந்து
குதூகலத்துடன் என்னை வரவேற்றது அங்கே
ஆனந்தமும், ஆச்சர்யங்களும்
ஒவ்வொரு மணற்துகள்களிலும்
பரவிக்கிடந்தன

காற்றலைகளில் மழலைச் சிரிப்பொலி
தேவகானமாய் தவழ்ந்து கொண்டிருந்தது
மோட்ச சாம்ராஜ்யம்,
தனக்குத் தேவதைகளாக
குட்டி குட்டி அரும்புகளை
தேர்ந்தெடுத்திருக்கின்றது
அங்கு ஆலயம் காணப்படவில்லை
அன்பு நிறைந்திருக்கின்றது
காலம் கூட கால்பதிக்கவில்லை
அவ்விடத்தில் சுயம் இழந்து
நானும் ஒரு குழந்தையாகி
மண்டியிட்டு அவர்கள் முன் நிற்கின்றேன்

அந்தக் கணத்தில்
மரக்கிளையொன்று முறிந்து விழுகையில்
அதைக் கொண்டு இன்னொரு
விளையாட்டு ஆரம்பமாகிவிடுகிறது
எங்கு நோக்கினும்
முடமாக்கப்பட்ட பொம்மைகள்
உடைந்த பந்துகள்
கிழிந்த காகிதக் குப்பைகள்
சேற்றுக் கறை படிந்த சுவர்கள்
களங்கமில்லா அரும்புகள் எனக்கு
கற்றுத் தந்தது இவைகள்
வீட்டிற்குத் திரும்பியதும்
ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்த
அலமாரி பொருட்களையெல்லாம்
ஒன்றுவிடாமல் கலைத்துப்போட்டேன்,
தரையில் விசிறி எறிந்தேன்
ஏக்கத்தோடு ஊஞ்சலின் மீது அமர்ந்தேன்
எனது வீட்டை அங்கீகரிக்குமா
குழந்தைகள் உலகம் — என்று
யோசனை செய்தபடி...

# கனவுகள்

ஆத்தாளுடன் நெல்லறுக்கப் போகும்போது
நெற்தாள் அறுத்தக் கையின் தடத்தை
இன்னும் என்னால் தாண்டிக்
குதிக்கமுடியவில்லை.

கஞ்சி குடிக்க பனம்பட்டை வெட்டும்போது
மயில்முடி குட்டிபோட இரை எடுத்து
கால் சட்டையின் இரகசிய அறையில்
மாற்றிப்போட்டு ஊறலாகிப்போனது

தேரிக்குளத்தின் தாழம்மூடுகளில்
வாத்து முட்டை பொறுக்கப்போய்
சாரையும் நல்ல பாம்பும் கனவில்
வந்து பிணைந்தாடி காய்ச்சல் வந்ததும்

தேங்கி நிற்கும் செம்மண் மழைநீரில்
விழுந்தெழுந்து வெள்ளைச்சட்டை நிறம்மாறி
முழங்காலின்கீழே தெறச்சி
வால் தடம் பதித்ததும்

ஆத்தா அடித்தழுது ஏசி
கண்ணீர் கவிதை எழுதி
கிழித்து எரிக்கப்பட்டதும்

பின்னாளில் என்ன எளவல எழுத?
எவளுக்குல எழுத?
எனும் இரணங்களின் மீதே
என் கவிதை இரத்தம் குடித்துக் கிடந்ததும்

இப்படியாய் என் பழைய நான்
கணினியின் காலடியில் காலாவதியாகிக் கிடக்கும்
நவீன என்னினிடம் மறந்துவிட்டாயா?
எனக் கண்ணடித்துச் சிரிக்கும் கதை!

இரா.அரிகரசுதன்

# யுவதிகள்

இன்றைய யுவதிகள்...
நவீன உலகின் எந்திரன்கள்...
அடுக்களை முதல்...
அறிவியல் வரை...
அனைத்தும் அறிந்தவர்கள்...
ஆணுக்கு நிகராய்...
அங்கம் வகிப்பவர்கள்...
சிறகுகள் முளைத்ததும்...
சிந்திக்க தொடங்கியவர்கள்...
சாதித்து காட்டினார்கள்...
சரித்திரம் படைத்தார்கள்...
பாரதி சொன்ன பாங்கு...
பண்புடன் வாழ்பவர்கள்...
அன்னையாய்
துணைவியாய்...
தோழியாய்...
அவதாரம் எடுக்கின்றார்...
அழகிய தேவதைகளாய்...
அரிதாரம் பூசுகின்றார்
உங்களில் ஒருத்தியாய்...
உங்களுடன் வாழ்கின்றார்.....
உணருங்கள்..
யுவனுக்கும், யுவதிக்கும்...
இனம் வேறு — ஆனால்...
மனம் ஒன்று!

காயத்ரி பாலாஜி

## பிரம்மாண்டம் காட்டும் விக்ரம்!

செவென் ஸ்கிரீன் ஸ்டுடியோ நிறுவனம் தயாரிக்க, கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் விக்ரம் நடிக்கவுள்ளார். ‘சியான் 60’ எனத் தற்காலிகமாக அழைக்கப்படும் இப்படத்தில் விக்ரமுடன் அவரது மகன் துருவ் ஒரு முக்கிய ரோலில் நடிக்கிறார். தற்போது கைவசம் ‘கோப்ரா’ மற்றும் ‘பொன்னியின் செல்வன்’ ஆகிய இரண்டு பிரம்மாண்ட படங்களை வைத்துள்ளார் விக்ரம். இந்த படங்களின் ஷூட்டிங் கொரோனா பிரச்சினை முடிந்த பிறகு துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் ஒரே நேரத்தில் மூன்று படங்களில் நடிக்கவுள்ளார்.



## திறமைக்கு குவியும் பாராட்டு!



## குபேரப் பார்வை பெறட்டும் ராஜபார்வை!

## உறுமும் சிங்கப் பெண்!

வரலட்சுமி நடிப்பில் சமீபத்தில் வெளியாகி இருக்கும் ‘ராஜபார்வை’ டிரைலர் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அவரது சண்டைக் காட்சிகளைப் பார்த்த நடிகர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர். ராஜபார்வை படத்தை ஜே.கே இயக்கியிருக்கிறார். அதற்கு முன்னதாக வரலட்சுமி நடிப்பில் உருவாகியுள்ள வெல்வெட் நகரம் வரும் 6 ஆம் தேதி திரைக்கு வருகிறது.



## ஏறுமுகத்தில் சூர்யா!

## சூரராய் பாயும் சூர்யா!

சூர்யாவின் 'சூரரைப் போற்று' திரைப்படத்துக்கு அடுத்ததாக ஹரி இயக்கத்தில் 'அருவா', வெற்றிமாறன் இயக்கத்தில் 'வாடிவாசல்', பாண்டிராஜ் இயக்கத்தில் ஒரு படத்திலும் சூர்யா நடிக்கவிருக்கிறார். அதைத் தொடர்ந்து 'சூரரைப் போற்று' இயக்குனர் விக்ரம் குமார் இயக்கத்தில் மீண்டும் நடிக்கவுள்ளார். 'சூரரைப் போற்று' படம் இந்தியில் ரீமேக் செய்யப்படும் நிலையில் தமிழ், தெலுங்கு, கன்னடத்திலும் அவருக்கு நல்ல மார்கெட் உள்ளதால், மளமளவென படங்களில் நடித்து வருவதில் தீவிரம் காட்டுகிறார் சூர்யா.

## அம்மனருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

## அம்மனாய் மாறும் நயன்தாரா!

மீண்டும் பக்தி கதாப்பாத்திரங்களின் மீது கவனம் செலுத்தி இருக்கும் நயன்தாரா தற்போது மூக்குத்தி அம்மன் என்ற படத்தில் அம்மனாக நடிக்கின்றார். இந்தப் படத்தை ஆர்.ஜே.பாலாஜி எழுதி இயக்குகிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு பின்னணிப் பாடகி எல்.ஆர்.ஈஸ்வரி 'அம்மனுக்குப் பொங்கல் வைப்போம்' என்று தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார். தற்போதைய பொதுமுடக்கம் முடிந்த பின்பு இப்படம் திரைக்கு வரவுள்ளது



# தல

## மதுரை மீனாட்சி

சிவத்தலங்களுள் மிக முக்கியமானவை 16. அவற்றுள் சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்னும் மதுரை என நான்கும் சிறப்பான புனிதத் தன்மை கொண்டவை. வாழும் காலத்திலேயே வீடுபேறு முக்தி தரும் தலம் என்பதால் 'முக்திபுரம்' என்றும் சிவ ராஜதானி, பூலோக கைலாயம், கடம்பவனம், சிவ நகரம், துவாத சாந்தத் தலம், சமட்டி வித்தியாபுரம், கன்னியாபுரம் என்பதுடன் நான்மாடக் கூடல் எனவும் பெயர் பெற்றது மதுரை.



நான்மாடக் கூடல் பெயர் வரக் காரணம், இந்திரன் மதுரையை அழிக்கக் கருதி பெரிய அளவில் மழை பொழிய மேகங்களை அனுப்ப, சிவபெருமான் நான்கு மாடங்களை நான்கு திசைகளுக்கும் அனுப்பி மதுரை நகர் மேல் விழாமல் செய்ததால் அப்பெயர் பெற்றது.

விருத்திகாசூரன் என்ற தேவேந்திரனுடன் போர் புரிந்து தோல்வியுற்று தப்பி ஓடி ஒரு மலை உச்சியில் அமர்ந்து தவம் செய்தான். தேவேந்திரன் அவனைக் கண்டுபிடித்து அவனது தலையை வெட்டியதால் இந்திரனுக்கு பிரம்மஹத்தி தோஷம் பிடித்தது. அதைப் போக்க மண்ணுலகில் சிவத்தலங்கள்தோறும் நீராடி சிவனை பூஜித்தான். பாண்டியநாட்டு கடம்பவனத்தில் நீராடியபோது அவனை விட்டுப் பாவம் விலகியது. அந்த வனத்தில் குளத்துடன் கூடிய கடம்ப மர நிழலில் சிவலிங்கம் இருந்ததால் அந்த இடத்தில் சிறு கோவிலைக் கட்டினான். அச்சிவலிங்கமே இன்று மீனாட்சி அம்மன் கோவில் சொக்கநாதர்.

குலசேகரப் பாண்டிய மன்னனின் தலைநகர் மணவூர். தற்போது கீழடி அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தில் மணலூர் என்று பெயர். அங்கே கூடையில் பொருள்களை வைத்து தலையில் சுமந்து வியாபாரம் செய்து வந்த தனஞ்செயன் என்ற வணிகன் கடம்பவன கோயிலில் தங்கி உறங்கினான். இரவில் கானம் ஒன்றைக் கேட்டு அருகில் சென்றபோது லிங்கம் அவன் கண்களுக்குத் தெரிய, இத்தகவலைக் குலசேகரப்



# வலம்

பாண்டியனிடம் கூற, அவன் கடம்பவனத்திற்கு வந்து ஈசனை வழிபட்டு பின் அங்கு கோயில் கட்டி நகரத்தை உருவாக்கினான்.

தாமரை மொட்டுப்போல கோயிலும், அதைச்சுற்றி தாமரை இதழ்கள் போல் தெருக்களையும் ஏற்படுத்தினான். குலசேகரப் பாண்டியனுக்குப் பிறகு அவனது மகன் மலையத்துவஜ பாண்டியன் பட்டத்துக்கு வந்தான் அவன் மனைவி காஞ் சனமாலை. இருவருக்கும் குழந்தை இல்லை!

குழந்தை வேண்டி 'புத்திரகாமேஷ்டி' யாகம் நடத்தினர். அப்போது வேள்வித் தீயிலிருந்து மூன்று வயதுப் பெண் குழந்தையாக எழுந்து வந்த மீனாட்சிக்கு மூன்று தனங்கள் இருந்தன. இதைக் கண்டு மன்னனும் ராணியும் அதிர்ச்சியாயினர். அப்போது, "இவளுக்கு ஏற்ற மணவாளன் இவள்முன் வரும்போது மூன்றாவது தனம் மறையும்!" என அசரீரி ஒலித்தது.

மீனாட்சி போர்க் கலை உட்பட பல கலைகளிலும் தேர்ச்சி பெற்று மதுரைக்கு அரசியானாள். அவள் ஒவ்வொரு நாடாகச் சென்று படை வலிமையால் வென்றபடி இமயமலையான கைலாயம் சென்றாள். அங்கே சிவனைப் பார்த்ததும் மூன்றாவது தனம் மறைந்தது. மதுரையில் மீனாட்சிக்கும் சிவபெருமானாகிய சொக்கநாதருக்கும் திருமணம் நடந்தது.


மீனாட்சியே மதுரை என்று கூறுமளவிற்கு சக்திக்கு முக்கியத்துவம் அளிக்கும் இந்தத் திருக்கோயில் சக்தி பீடங்களில் இதற்கு 'ராஜமாதங்கி சியாமள பீடம்' என்ற பெயர்!

மீன் போன்ற கண்களைக் கொண்டவள் என்பதால் மீனாட்சி எனும் பெயர் ஏற்பட்டது. மீன் தனது முட்டைகளைப் பார்வையாலேயே தன்மயமாக்குவது போல், பக்தர்களை அருட்கண்ணால் நோக்கி அருள்பாலிக்கிறாள்.

புவனகிரி செயபாலன்

பச்சைதேவி, மரகதவல்லி, தடாகை, அபிசேகவல்லி, அபிராமவல்லி, கயற்கண் குமாரி, கற்பூரவல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப் பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்கவல்லி, மும்மலைத் திருவழுதி





மகள் என மீனாட்சிக்குப் பல பெயர்கள் உண்டு!

இங்குள்ள மீனாட்சி அம்மன் விக்கிரகம் மரகதக்கல்லால் ஆனது. மீனாட்சி அம்மன் அரசியாக இருந்ததால் அபிஷேகங்களைப் பக்தர்கள் பார்க்க முடியாது. அலங்காரத்துடன்தான் பார்க்க முடியும்.

மீனாட்சி அம்மன் கோயில் 15 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. கிழக்கு மேற்காக 847 அடியும், வடக்குத் தெற்காக 792 அடியும் கொண்டது. உள்ளே ஒரு ஏக்கர் பரப்பளவில் பொற்றாமரைக் குளம். இதில் 8 கோபுரங்களும் விமானங்களும் அமையப்பெற்றுள்ளன.

கிழக்குக் கோபுரம் மாறவர்மன் சுந்தரபாண்டியனால் (கி.பி 1216 — 1238) கட்டப்பட்டதால், இதற்கு சுந்தரபாண்டியன் கோபுரம் என்று பெயர். இதில் 1011 சுதை வடிவங்கள் உள்ளன. இதனடியில் மதுரைவீரன் கோயில்.

தெற்கு கோபுரம் சிராமலை செவந்தி மூர்த்தி என்பவரால் கி.பி ஆயிரத்து 1559—ல் கட்டப்பட்டது. 1511 சுதைச் சிற்பங்கள் அடங்கிய 152 அடி உயரமுடையது.

மேற்குக் கோபுரத்தைக் கட்டியவர் பராக்கிரம பாண்டியன். (கி.பி 1315 — 1347) இதிலுள்ள கதை வடிவங்கள் 1124.

வடக்கு கோபுரம் 9 நிலைகளைக் கொண்டது. இதைக் கட்டியவர் கிருஷ்ண வீரப்ப நாயக்கர் (கி.பி 1564 முதல் 1572) 404 சுதைச் சிற்பங்கள். இதை மொட்டைக்கோபுரம் என்பர். காரணம், கோபுரம் முழுமையாக கட்டி முடிக்காமல் இருந்தது. அதை நாட்டுக்கோட்டை செட்டியார் ஒருவர் கட்டி முடித்தார். எனினும் மொட்டைக் கோபுரம் என்ற பெயர் நீங்கவில்லை!

மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் நான்கு புறமும் இருக்கும் வீதிக்கு பெயர் ஆடி வீதி. அதைத் தாண்டி கோயிலுக்கு வெளியில் சித்திரை வீதி. அடுத்து ஆவணி மூலவீதி, அதற்கடுத்து மாசி வீதிகள். அதனை அடுத்து வெளி வீதிகள் எனத் தமிழ் மாதப் பெயர்களில் தெருக்கள். அந்தந்த மாதங்களில் நடைபெறும் திருவிழா அன்று அந்த மாதப் பெயர்களைக் கொண்ட வீதிகள் வழியே இறைவனும் இறைவியும் உற்சவ மூர்த்தியாய் வீதி உலா வருவர். இந்த வீதிகளில் வாயிற்புரத்தில் பெரிய கோபுரங்கள் அமைந்துள்ளன.

சித்திரக் கோபுரம், வேம்பத்தூரரார் கோபுரம், நடுக்கட்டுக் கோபுரம், இடபக் குறியீட்டைக் கொண்ட கோபுரங்கள் உட்பட மேலும் 8 சிறிய கோபுரங்கள் உள்ளன.

கிழக்குக் கோபுரத்தின் கிழக்குப் பக்கத்தில் அஷ்டசக்தி மண்டபம். இதன் வழியாகத்தான் மீனாட்சி அம்மன் சன்னதிக்குச் செல்ல வேண்டும். இம்மண்டபத்தை அடுத்து மீனாட்சி மண்டபம். அடுத்து சிற்ப வேலைப்பாடுகள் அதிகம் கொண்ட முதலி மண்டபம். அதற்கு அடுத்து பொற்றாமரைக்குளம். இதில் தேவேந்திரனும்

அவரது வாகனமாகிய ஐராவதம் யானையும் தங்களின் சாபம் நீங்கப் பெற்றனர்.

அடுத்து கிளி மண்டபம், இதில் பஞ்ச பாண்டவர். திரௌபதி, வாலி, சுக்ரீவன் போன்ற சிற்பங்கள்.




அர்த்த மண்டபத்தை கடந்தால் கற்பக்கிரகம். இதற்கு இந்திர விமானம் என்று பெயர். இதில் 32 சிங்ககங்களும் 64 சிவகணங்களும் 8 வெள்ளை யானைகளும் உள்ளன.

இங்கு மீனாட்சியே பிரதானம் என்பதால், அம்மனைத் தரிசித்த பின்னரே சோமசுந்தரேஸ்வரர் சந்நிதி செல்லும் வகையில் ஆலயத்தின் அமைப்பு உள்ளது. சுவாமி சன்னதிக்கு எதிரில் வேலைப்பாடு மிகுந்த அகோர வீரபத்திரர் சிலை! அதே அளவு அக்னி வீரபத்திரர் சிலை, பத்ரகாளி மற்றும் ஊர்த்துவ தாண்டவச் சிற்பங்கள்!

சுந்தரேஸ்வரர் சந்நிதியில் கம்பத்தடி மண்டபத்தின் வலப்புறம் பெண்மைத் தோற்றம் உடைய புலிக்கால் கணேசர். மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் தான் வரும்முன் நடந்து விட்டதன் காரணமாகத் தமையரான கள்ளழகர் கோபமுற்று வைகையின் கடற்கரையிலேயே தங்கிவிட்டு மலைக்குத் திரும்பி விட்டதாகப் புராணம் கூறுகிறது.

ஆடி மாதம் விவசாயிகள் விதைக்கும் காலம் என்பதால், கிராம மக்களும் விவசாயிகளும் பங்குபெறுவதற்காக ஆடி மாதத்தில் நடந்து வந்த திருவிழாவில் சித்திரை மாதத்துக்கு மாற்றி அமைத்தார் திருமலைநாயக்கர்.

திருமலைநாயக்கர் அமைச்சர் மீனாட்சி நாயக்கரால் கட்டப்பட்ட மீனாட்சி நாயக்கர் மண்டபம் மேல் விட்டத்தில் 12 ராசிகள் சதுர வடிவில் உள்ளன. நாயக்க மன்னரின் ஆட்சியின்போது கோயிலுக்கு எதிரேயுள்ள மண்டபத்தில் காலை மாலை இரு வேளைகளிலும் 'நகரா' என்னும் தோல் வாத்தியமும் ஷெனாய் என்ற குழல் வாத்தியமும் இசைக்கப்பட்டன. எனவே இந்த மண்டபத்துக்கு நகரா மண்டபம் என்று பெயர்.

கிழக்குக் கோபுரத்திற்கு எதிரே 124 சிற்பங்கள் உள்ள புதுமண்டபம். இதை வசந்த மண்டபம் என்றும் கூறுவர். இதில் சிறு வணிகக் கடைகள் உள்ளன. இதில் திருமலை நாயக்கர் மற்றும் அவரின் 3 அரசுகளின் சிற்பங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகரும் அவர் தொழில் சார்ந்த பெயருடைய தெருவில் வசித்தனர். உதாரணம் சுண்ணாம்புக்காரத் தெரு, வைக்கோல்காரத் தெரு, தவிட்டுச் சந்தை எனப் பல தெருக்கள் உள்ளன.

மண்டப நாயக மண்டபம், திருஞானசம்பந்தர் மண்டபம், சங்கப்புலவர் உலா மண்டபம் என மேலும் பல மண்டபங்கள் இருந்தாலும் 985 தூண்கள் உள்ள ஆயிரம்கால் மண்டபம் மிகவும் பெரியது. எங்கிருந்து பார்த்தாலும் நேர் வரிசையில் காட்சி அளிக்கும்.

மதுரைக் கோயிலில் 231 உற்சவர்களும், தங்கம் மற்றும் வெள்ளி முலாம் பூசப்பட்ட வாகனங்களும், சப்பரங்களும், அம்மன் தேர், சுவாமி தேர், திருவாதவூர் தேர் ஆகியவையும் உள்ளன. ஸ்தல விருட்சங்கள் கடம்பம் மற்றும் வில்வம்.

இங்குள்ள தங்கரதம் 7 கிலோ தங்கம், 78 கிலோ வெள்ளியைப் பயன்படுத்தி 40 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது. பிரதி தமிழ் மாதம் முதல் தேதி இரவு 7 மணி அளவில் தேவஸ்தானம் தங்க ரத உலா நடத்துகிறது. பக்தர்கள் பணம் கட்டி கோயிலுக்குள் தங்கரதம் இழுக்கிறார்கள். இத்தலத்தில் பிரசாதம் தாழம்பூ குங்குமம். இந்தக் குங்குமம் ஆலயத்தில் தவிர வேறு எங்கும் கிடைக்காது.

கி.பி. 1310—ல் அலாவுதீன் கில்ஜியின் தளபதி மாலிக் கபூரின் அட்டூழியங்களில் மதுரை மீனாட்சி அம்மன் சன்னதியும், அதனைச் சுற்றியுள்ள ஒருசில மண்டபங்கள் தப்பினாலும், 68 ஆண்டுகள் மூடிக்கிடந்தன. 1378—ல் விஜயநகர சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த குமார கம்பணன் என்பவர் அவர்களை வென்று பாண்டிய நாட்டை மீட்டு ஆலயத்தைத் திறந்தார்.



சிதம்பரம் போன்ற இடங்களில் இடது பாதம் தூக்கி நடனமாடும் நடராஜர், பாண்டிய மன்னன் ராஜசேகரன் வேண்டியதற்காக இங்கு (மதுரை) தனது வலது பாதத்தைத் தூக்கி நடனம் ஆடியதாக ஐதீகம். இங்குள்ள நடராஜர் சன்னதிக்கு 1790 சதுர அடி பரப்பளவில் 1354 கிலோ வெள்ளி தகடுகளை மதுரை புதூரை சேர்ந்த அலாவுதீன் என்ற இஸ்லாமியர் பொருத்திக் கொடுத்துள்ளார்.

மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வடக்கே வட திருவாலவாய்க் கோயிலில் சொக்கநாதர் மீனாட்சி சன்னதி உள்ளன. இதை ஆதிசொக்கநாதர் கோயில் என்கின்றார்கள். இத்தலத்தில் ராமர், லட்சுமணர், வருணன், தேவர்கள் மற்றும் முனிவர்கள் பலரும் பூஜித்து பேறு பெற்றனர்.

சிவபெருமானின் 64 திருவிளையாடல்களும் நடந்தது இங்குதான். மாணிக்கவாசகர் நரியைப் பரியாக்கிய விழா ஆவணி மாதத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆதிசங்கரர் மீனாட்சி அம்மனை தரிசித்து மீனாட்சி பஞ்சரத்தினம், மீனாட்சி அஷ்டக ஸ்தோத்திரம் பாடியுள்ளார்.

இந்தியாவுக்கு வந்த கிரேக்க அறிஞர்களான மெகஸ்தனிஸ் (கி.மு 320), பிளினி (கி.பி 75) பேரறிஞர் தாலமி (கி.பி 140) தங்களது பயணக் கட்டுரையில் மதுரையைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர். மதுரையைப் பாண்டியர், இஸ்லாமியர், நாயக்கர், ஆங்கிலேயர், மராட்டியர் போன்றவர்கள் ஆண்டனர்.

ஒருசமயம் கொட்டும் மழையில் தன் வீட்டுக்குள் இருந்தவரை சிறுமி வடிவில் வந்து அவரை வலுக்கட்டாயமாக வெளியே இழுத்து வந்ததும், வீடு இடிந்து விழுந்தது. தன்னைக் காப்பாற்றியது மீனாட்சியே என உணர்ந்து அம்பாளுக்கு ஏராளமான ஆபரணங்களைப் சமர்பித்தது இன்றும் உள்ளது. அவர் பெயர் பீட்டர் பாண்டியன்.

தமிழ்நாடு அரசு அதிகாரிகள் 6 பேரடங்கிய குழு அயல்நாடு சென்று அங்கு உள்ள நகரங்களின் அமைப்பைப் பார்த்து அதன் அமைப்பில் தமிழகத்திலும் நிர்மாணம் செய்யலாம் என்று முதல்வராக இருந்த காமராஜரிடம் பரிந்துரைக்க, “நீங்க மதுரைக்கு போய் அந்த நகரம் எப்படி அமைந்திருக்கிறது என்று பார்த்து வந்தால் போதும். வெளிநாடு செல்ல வேண்டாம்!” என்றார்.

அந்த அளவு சிறப்பு வாய்ந்தது மதுரை. நியூசிலாந்து நாட்டின் கோடீஸ்வரர் பெர்னார்டு வெபர் 2005 ஆம் ஆண்டு உலக அதிசயங்கள் குறித்த புதிய பட்டியலில் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தைச் சேர்த்து கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவிடம் அளித்தார். அதன் அடிப்படையில் இக்கோவில் 25 ஆவது இடத்தில் உள்ளது. இதிகாச புராண வரலாற்று சிறப்பு எனப் பலவற்றிலும் பெருமை பெற்றது மதுரையும் மீனாட்சியும்.

# புத்தக விமர்சனம்

## பாட்டையாவின் பழங்கதைகள்

### கொரியக் கவிதைகள்


**நூலாசிரியர்:**

**பாரதி மணி**

விலை– ரூ.130

**வெளியீடு:**

**வாசக சாலை**




ஒரு எழுத்தாளன் எப்போது கொண்டாடபடுகிறான் என்றால், எப்போது அவன் மக்கள் கலைஞன் ஆகிறானோ அப்போதுதான்! அது அவன் எழுதும் பிரதியால் மட்டும் நிகழ்வது இல்லை. யதார்த்த வாழ்விலும் அது மிக இயல்பாக நிகழவேண்டும். அப்படியொரு வாய்ப்பு கிடைத்த பாரதிமணி, தன் வாழ்வில் நடந்த சம்பவத்தை இந்நூல் வாயிலாக சுவையாகவும், சூடாகவும் வாசகருக்கு அறுசுவை அமுதிடுகிறார்.

சட்டென படித்துவிட்டு கடந்து போகும் பேஸ்புக் கிறுக்கல் கூட கல்வெட்டு கிறுக்கலாக நிலைத்து விடுகிறது பாரதிமணி எழுதும் போது. சமையல் குறிப்பிலிருந்து சினிமா அனுபவம் வரை பேசும் இந்தப் பதிவுகளில் ஒரு இடத்தில் எனக்கும் கடவுளுக்கும் ஒரே வித்தியாசம்தான்! கடவுள் தன்னை பாரதிமணியாக கருதுவதில்லை என்று எழுதிகிறார்.

யார் வேண்டுமானாலும் முயற்சியால் பயிற்சியால் எழுதி விட முடியும். ஆனால் இப்படி வாழ முடியாதே! வாழ்வு நம் வசமா? அது காலத்தின் கொடை அல்லவா? அதை காலமாகாமல் நிற்கவைக்கும் பாரதிமணியின் எழுத்து பாராட்டுக்குரியது!

சிறுகதை



# தவப்புதல்வன்

## கோபாலன் நாகநாதன்

**மொ**பைல் ஒலித்தது, யார் இந்த நடு இரவில் போன் செய்கிறார்கள் என எண்ணியபடி போன் —ஐ எடுத்தான் நரேன். எதிர்முனையில்இந்தியாவிலிருந்து அப்பா பரமேஸ்வரன், என்னப்பா இந்த நேரத்தில் போன் செய்யுறீங்க? என கேட்டான்

அப்பா பரமேஸ்வரன், பதட்டத்துடன், அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக், ஆஸ்பத்திரியில் சேத்துருக்கேன், நிலைமை கிரிட்டிக்கலா இருக்கு, 72 லீஷீஞுகூஷீஉ தாண்டனுமுன்னு டாக்டர்சொல்லிட்டார்,உனக்கு விஷயம் சொல்லணுமேனு போன் பண்ணினேன் என்றார்.

அதிர்ச்சியடைந்த நரேன், அம்மாக்கு இப்போ எப்படி இருக்குப்பா? என கேட்டான், வீநீஞு —லதான் வச்சிருக்காங்க, என்றார்.

அப்பா ஏதாவது பணம் அனுப்பட்டுமா?

வேண்டாம் நரேன், பணமெல்லாம் வேண்டாம், நீ கவலைபடாதே என்றார். ஆஸ்பத்திரியில நானும் அலமு அத்தையும்தான் இருக்கோம் என்றார்.

சரிப்பா, நான் அப்புறமா போன் பண்ணி நிலைமை என்னனு கேட்டுக்கிறேன் என சொல்லி போன் —ஐ வைத்தான் நரேன். ஆனால், விதி வேறு விதமாக விளையாடியது, அடுத்த நாளே மீண்டும் ஒரு அட்டாக் வந்ததால், சாரதா இறந்து போனாள்.

அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்த பரமேஸ்வரன் உடனே கலிபோர்னியாவில் உள்ள மகன் நரேனுக்கு போன் செய்தார்,

அம்மா இறந்த செய்தியை கேட்ட நரேன் மிகவும் அதிர்ச்சி அடைந்தான்,

தொடர்ந்து பேசிய பரமேஸ்வரன் உடனே கிளம்பி வா என்றார்,

மறு முனையில் நரேன் அவசரமாக “அப்பா என்ன மன்னிச்சிருங்க “நான் இப்போ ஒரு இன்டர்நேஷனல் நீஷீஸீயீமீகூஷீமீஸீநீமீ —ல பிரான்ஸ்க்கு வந்து இருக்கேன், என்னால பாதியில விட்டுட்டு கிளம்பி வர முடியாது, அதனால எனக்காக காத்திருக்க வேண்டாம், அம்மாவின் காரியத்தை நடத்திடுங்கோப்பா என்றான்,

அதிர்ச்சி அடைந்த பரமேஸ்வரன் என்னடா சொல்ற? அம்மாவோட இறுதி காரியத்திற்கு கூட வர முடியாம என்னடா பெரிய நீஷீஸீயீமீகூஷீமீஸீநீமீ என்றார்?

அப்பா புரிஞ்சிக்கோங்கோ, இது ஆறு மாசம் முன்னாடியே யீவீஜ் ஆனது, இடையில கேன்சல் பன்ன முடியாது,

மூன்று நாளில் முடிந்துவிடும், முடிந்தவுடன் நான் உடனே புறப்பட்டு இந்தியா வந்துவிடுகிறேன் என்றான்.

உன் மனசாட்சிபடி நடந்துக்கோ என கோபமாக

கூறிவிட்டு போன் தொடர்பை துண்டித்தார் பரமேஸ்வரன்.

சாரதாவின் காரியங்கள் முடிந்து வாசல் பக்கம் ஈஸிசேரில் அயற்சியுடன் படுத்துக்கொண்டிருந்த பரமேஸ்வரன் திடிரென சாரதா என குரல்,கொடுத்தார், அதை கேட்டு பக்கத்து, அறையில் இருந்து வெளீயே வந்த அலமு,, கண்கலங்கியபடி ஏண்டா அவதான் நாம கூப்பிட்டாலும் வரமுடியாத இடத்திற்கு போய்விட்டாளே என்றாள், மறந்து போச்சா என கேட்டாள்.

ஆமாக்கா, அவள் இறந்து போலவே இல்லை, அவள் உயிருடன் இருப்பது போலவே தோன்றுகிறது என்ற அவர் மனைவியை பற்றிய நினைவுகளில் மூழ்கினார்.

சாரதா ஒரே மகன் நரேன் மீது மிகுந்த அன்பும், பாசமும் வைத்திருந்தாள்.

அவன் ஆசைப்பட்ட எதையும் இல்லை என்று சொன்னதில்லை, நரேன் ஙி.ணி. முடித்தவுடன், அமெரிக்கா சென்று மேல்படிப்பு படிக்க வேண்டும் என்று கேட்ட போதும், தனியார் கம்பெனியில் வேலை பார்த்துவந்த நான், நமக்கு வெளிநாடு அனுப்பி படிக்கவைக்க வசதி இல்லை, எனவே அவன் வேலைக்கு செல்லட்டும் என மறுத்த போதும்,

குழந்தை ஆசைப்படுகிறான், பேங்க் லோன் போட்டு படிக்க வைங்க என என்னை வற்புறுத்தி சம்மதிக்க வைத்தாள்.


அதேபோல், எனது அக்கா அலமேலு, அவளது கணவர் திடீரென்று இறந்தபின், எனது வீட்டில் வந்து அடைக்கலமானாள்,,என் அக்காவிற்கு குழந்தைகள் கிடையாது, என்றாலும் அலமு அக்காவை எங்களுடன் வைத்துக்கொள்ள சம்மதித்து, தன் கூட பிறந்த சகோதரி போல நடத்தினாள்.

அக்கா அலமேலுவும் சாரதாவுடன் பாசமாக நடந்துகொண்டதுடன், மகன் நரேன் —ஐ வளர்ப்பதில் மிகவும் உதவியாக இருந்ததுடன், நரேனை தன் மகனாக பாவித்து அன்புடன் நடந்து கொண்டாள்.

நரேன் —ஐ காலையில் எழுப்பி குளிக்க செய்து, பள்ளிக்கு அனுப்பும் வரைதானே பார்த்துக்கொள்ளுவாள்.

மீண்டும் மாலையில் நரேன் பள்ளியிலிருந்து வந்தவுடன் அவனை முகம், கை கால்களை சுத்தம் செய்ய சொல்லி, சாப்பிட ஏதாவது கொடுத்து பள்ளியில் கொடுத்த வீட்டு பாடங்களை செய்ய வைப்பாள்.


சமையல்கட்டு வேலைகளை சாரதா



கவனித்துக்கொள்வாள்.

குழந்தை நரேனுக்கு உடம்பு சரியில்லாமல் போனால் அலமு மிகவும் துடித்து போவாள், அவனுக்கு உடல் நிலை சரியாகும்வரை கோவில் கோவிலாக சுற்றிக்கொண்டு இருப்பாள்.

சமீபகாலமாக சாரதா அடிக்கடி நெஞ்சுவலி என கூறி வந்தாள், டாக்டரிடம் கூப்பிட்டால் தனக்கு ஒன்றும் இல்லை, காஸ்ட்ரிக் மீகூஷீஷ்ஙூதீறீமீ தான் எனக்கூறி வர மறுத்துவிடுவாள். ஆனால், அலமு என்னிடம், சாரதாவை டாக்டரிடம் கூட்டிப்போய் காண்பித்து விட்டு வா, விளையாட்டாக கருத்தாதே



என கூறி வந்தாள். சாரதா தனது உடம்பை சரிவர கவனித்து கொள்ளாமல் இருந்ததே அவளுடைய திடீர் மரணத்திற்கு காரணம்.

தற்போது சாரதாவின் மறைவு அத்தையை மிகவும் மனமுடைய செய்து விட்டது. இனி யாரிடம் சாரதா காட்டிய அன்பைப்போல எதிர் பார்க்கமுடியும் என மிகவும் கவலை கொண்டாள்.

பரமேஸ்வரனின் பழைய நினைவுகளுக்கு பிரேக் போடுவது போல வீட்டு வாசலில் டாக்ஸி ஒன்று வந்து நின்றது, அதிலிருந்து, நரேன் பெரிய பெட்டியுடன் இறங்கினான்.

வாசலில் அப்பாவை பார்த்தவுடன் கதறி அழுதான்,

அப்பா அவனுக்கு ஆறுதல் கூறுவதுபோல, முதுகில் தட்டிக்கொடுத்து வீட்டினுள் செல்லும்படி கூறினார்.

வீட்டினுள் சென்ற நரேன், மாலை போடப்பட்டு மாட்டப்பட்டிருந்த அம்மாவின் புகைப்படத்தையும் பார்த்து அழுதான்.

சத்தம் கேட்டு வெளியே வந்த அலமு அத்தை நரேன் —ஐ பார்த்து ஏண்டா, இப்பிடி வராம இருந்திட்டே? என கேட்டாள் .

இல்ல அத்தை, நான்தான் அப்பாகிட்ட சொன்னேனே, மீட்டிங்கில் மாட்டிக் கொண்டேன்னு அதனாலேதான் வர முடியல,

ஆயிரம்தான் நீ காரணம் சொன்னாலும், ஒரே பிள்ளையா பொறந்துட்டு அம்மாவோட இறுதி காரியத்துக்குக்கூட வராம இருந்தது தப்புதான் என்றாள் அலமு.

நீ சும்மா இரு அத்தை, நீ வேற ஏதாவது சொல்லிண்டுஇருக்காதே என கோபமுடன் சொல்லிக்கொண்டே தனது அறையினுள் சென்றான் நரேன்.

பரமேஸ்வரனும், நரேனிடம் பதினாறு நாள் காரியங்களும் முடியும் வரையில் ஏதும் பேசவில்லை.

அனைத்து காரியங்களும் முடிந்துவிட்ட நிலையில் வந்திருந்த உறவினர்களும் ஊர் திரும்பி விட்டனர்.

வீட்டின் நடு ஹாலில் பரமேஸ்வரன் ஓய்வாக அமர்ந்திருந்தார். அப்பாவின் அருகில் நீலீணீவீக்ஷீ —ஐ இழுத்து போட்டு அமர்ந்த நரேன்,

அப்பா இனி நீங்க என்ன பண்ணபோறீங்க? பேசாம என்கூட வந்துடுங்க, என்றான்.

அவனை நிமிர்ந்து பார்த்த பரமேஸ்வரன் என்னடா சொல்ற என கேட்டார்?

ஆமாம்பா, நீ என்னோட கிளம்பி அமெரிக்கா வந்துடு, வீட்ட கொஞ்சநாள் கழித்து விற்று விடலாம் என்றான்,

அலமு அத்தைய என்ன பண்றது என்றார் பரமு, பரமேஸ்வரன்.

அத்தைய ஏதாவது ஹோமில் சேர்த்துவிடலாம் என கூறினான்.

உடனே கோபமடைந்த அவர், ஏண்டா அலமு அத்தைய போய் ஹோம்ல சேக்கலாம்னு சொல்றியே, உனக்கே இது நல்லா இருக்கா என கேட்டார்,

அப்பா வேற வழியில்லை, நான் அமெரிக்காவிலிருந்து அடிக்கடி இங்கு வந்து உன்ன பார்த்துண்டு இருக்க முடியாது,

நீ அங்க வந்துட்டா உன் மருமகள் நல்லா பாத்துப்பா, உன் பேரன் ஈஸ்வர் —ம் உங்க கூட விளையாடிண்டு இருப்பான், உனக்கும் பொழுது போகும் என்றான்.

அதெல்லாம் வேண்டாம், நானும் அத்தையும் இங்கேயே இருக்கோம், சமையலுக்கு வேணா ஒரு மாமிய ஏற்பாடு செய்துக்கறோம் என்றார்.

நீ இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை குடும்பத்தோட வந்து பாத்துட்டு போ என்றார் பரமேஸ்வரன்.

அப்பா உனக்கும் வயசாயிடத்து, அத்தைய உன்னால பாத்துக்க முடியாது, அதனால அத்தைய ஹோம்ல விடறதுதான் சரி, நீ என்னோட கிளம்பர வழியப்பாரு என்றான் மீண்டும் நரேன்.

நரேன், நீ கொஞ்சம் கூட நன்றி மறந்து பேசாத, உன்ன உன் சிறு வயசிலேர்ந்து மார்லயும், தோள்லையும் போட்டு வளர்த்தவ உன் அத்தை அலமேலு, உனக்காக பல நாள் பட்டினிகூட இருந்திருக்கா, உன் அம்மாவைவிட அதிக அன்பும் பாசமும் உன்மேல வைத்திருக்கும் அத்தையை யாரும் இல்லாத அனாதை போல ஹோம்ல விடணும்னு சொல்றேயேனு பரமேஸ்வரன் கோபத்துடன் கேட்டார்.

அதற்கு நரேன், அப்பா பழைய கதையெல்லாம் இப்போ பேசிண்டு இருக்காதே,

அத்தை சின்ன வயசில செய்தாள் என்பதற்காக என்னோட அமெரிக்காவிற்கெல்லாம் கூட்டிண்டு போக முடியாது, அவ செஞ்சதுக்கு பிரதிஉபகரமாகத்தான் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லைனு ஹோம்ல சேக்கலாம்னு சொல்றேன் என்றான்.



இனிமேல் என்னால் அமெரிக்காவிலிருந்து வந்து போக முடியாது, அதனால நீ என் கூட அமெரிக்கா வரதுனா வா, அப்புறம் உன் இஷ்டம் —னு சொல்லிட்டு உன் முடிவை இரண்டு, மூணு நாள்ல சொல்லுனுட்டு வேகமாக வெளியே கிளம்பி சென்றான்.

பரமேஸ்வரன், மிகவும் அதிர்ச்சியுடனும், வருத்தத்துடனும் நின்றார்.

இதையெல்லாம் தனது ரூம் வாசலில் நின்றபடி கேட்டுக்கொண்டிருந்த அத்தை அலமேலு, அண்ணன் பரமேஸ்வரனிடம், அழுதுகொண்டே பரமு நீ என்ன பத்தி கவலை படாதே, உன் பிள்ளை சொல்லுவதை கேள், நீ அவனுடன் கிளம்பி செல் என்றாள்.

நீ பேசாம இரு அலமு, இதுக்கு நான் ஒரு வழி பண்றேன் என்றார்.

என்னடா பண்ணப்போறன்னு அத்தை கேட்டதற்கு கொஞ்சம் பொறுமையா இருந்து பாரு என்றார் பரமு.

அடுத்த மூன்று நாள்களிலும் யாரும் சரிவர பேசிக்கொள்ளவில்லை.

பரமேஸ்வரன் மட்டும் அடிக்கடி வெளியில் சென்று வந்துகொண்டிருந்தார்.

நான்காம் நாள் காலை அனைவரும் காலை உணவுக்குபின் நடு ஹாலில் கூடினர்.

நரேன் அப்பாவை பார்த்து என்ன முடிவு செஞ் சுருக்கீங்க? என கேட்டான்.

எனது முடிவில் எந்த மாற்றமும் இல்ல, அத்தையை ஹோம்ல விடறதுல எனக்கு இஷ்டம் இல்லை, இந்த வயசுல அவளை ஹோம்ல விடறது மஹாபாவம்னு நினைக்கிறேன்.


அதனால நாங்க இரண்டு பேரும் இங்கேயே இருக்கப்போறோம்னு சொல்லி முடித்தார் பரமேஸ்வரன்.

உங்க முடிவு இதுதான்னா நான் சொன்னதுலயும் எந்த மாற்றமும் இல்லை, நான் இனிமேல் இந்தியா வருவேன்னு எதிர்பார்க்காதிங்க, என்றான் நரேன்.

வருவதும், வராததும் உன் இஷ்டம்., நீ வந்தா சந்தோஷம், வரலைனாலும் நான் வருத்தப்பட மாட்டேன் என்றார் பரமேஸ்வரன்.

சரி நான் கிளம்பறேன் என்று பெட்டிகளை எடுத்துக்கொண்டு கிளம்பினான் நரேன்.

சில நிமிடங்கள் வருத்தத்துடன் அமர்ந்து இருந்தார் பரமேஸ்வரன்.



அடுத்த வாரத்தில் தொண்டு நிறுவனத்தை சார்ந்த நிர்வாகிகள் வந்து பரமேஸ்வரனுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்கு பின் தற்போதைய வீடு தொண்டு நிறுவனம் பெயரில் ரீவீயீமீ பீமீமீபீ ஆக பதிவு செய்யப்பட்டது.

பரமேஸ்வரன்,அத்தை இருந்த அறைகள் புதுப்பிக்கப்பட்டு வசதிகள் செய்து தரப்பட்டது. அவர்கள் இருவரும் உயிருடன் இருக்கும் வரை தற்போது உள்ள அறைகளை பயன் படுத்திக்கொள்ளவும் இசைவு தெரிவித்தனர். வீட்டின் நடு ஹாலில் சாரதாவின் பெரிதாக்கப்பட்ட படம் ஒன்று மாட்டப்பட்டு மாலை சாத்தப்பட்டது. காப்பகத்தின் அன்றாட நிர்வாகத்தை பரமேஸ்வரனே கவனித்து கொள்ளுமாறு தொண்டு நிறுவன தலைவர் கேட்டு கொண்டார்.

வீட்டின் உள்ளேயும், வெளியிலும் சில மாற்றங்கள் செய்யபட்டு புதிய வர்ணங்கள் அடிக்கப்பட்டது.

ஒரு நல்ல நாளில் வீட்டின் முகப்பில் "சாரதா முதியோர் காப்பகம் "

( ஆ த ர வ ற் ற மு தி யோ ா் க ளு க் கா ன து ) என பெரிய பெயர் பலகை வைக்கப்பட்டது.

பரமேஸ்வரனின் நிர்வாகத்தில் சாரதா முதியோர் காப்பகம் இயங்க ஆரம்பித்தது.



SAKTHI CASH & CARRY
245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરૂં
इडली/ दोसा आटा
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648




## பட்டுக்கோட்டையார் பாடல்களில் சமுதாயப் பார்வை

மானிட வாழ்க்கை மகத்துவமானது. மற்ற உயிர்களைக் காட்டிலும் பண்பட்ட பக்குவ நிலையை உடையது. சூழலும், சூறாவளியும் சுற்றி வருவது போல மனித வாழ்க்கையும் மாறிக் கொண்டேயிருக்கிறது. தரிசு நிலங்களைக் கொத்திப் பதப்படுத்தி மண்ணைப் பொன்னாக்கும் வளமான பூமியாக மாற்றுவது உழவனின் கடமையாகும்.

பண்பில்லாத மனித உள்ளத்திற்குத் தத்துவங்களையும் அறிவுரைகளையும் வழங்கி ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவது கவிஞர்களின் கடமையாகிறது. ஏனெனில் ஒரு கவிஞன் பொதுநலவாதியாகத் தான் இருப்பான். பொதுநலத்திற்காக பாடுபடும் ஞானிகள், யோகிகள், கவிஞர்கள், அடியார்கள், சான்றோர்கள் மற்றும் மனித நேயம் கொண்ட மனிதர்கள் அனைவரும் சமூகச் சீர்திருத்தவாதி களாக இருக்கின்றனர்.

சிந்தனை, செயல், விழிப்புணர்வு, விடுதலை யுணர்வு, புரட்சி, மறுமலர்ச்சி மனமாற்றம் இவற்றிற்குக் காரணமாக விளங்கியவர்கள் பலர். அவர்களுள் அரிஸ்டாட்டில், ஆபிரகாம் லிங்கன், காரல் மார்க்ஸ், லெனின், பாரதியார், பாரதிதாசன், பெரியார் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அவர்களின் வழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

பண்பாட்டின் புகழிடமாய் விளங்கும் செந் தமிழ் மண் ஈன்றெடுத்த பாவலர்களிலே, மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும் ஒருவராவார். இக்கவிஞரது பாடல்களில் பொது வுடைமைக் கருத்துக்களும் புரட்சிக் கருத்துக்களும் மிகுந்து காணப்படும். இதற்குக் காரணம், அவர் வாழ்ந்த அக்காலச் சமூகச் சூழ்நிலையே ஆகும்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்திலடங்கிய 'செங்கப்படுத்தான் காடு' என்ற கிராமத்தில் 1930ஆம் ஆண்டு விவசாயக் குடும் பத்தில் திரு. அருணாச்சலக்கவிராயருக்கும், திருமதி. விசாலாட்சி அம்மையாருக்கும் இளைய மகனாய்ப் பிறந்தார். கணபதிசுந்தரம், வேதம்பாள் ஆகிய இருவரும் கவிஞரோடு உடன்பிறந்தவர்கள். இவரின் துணைவியார் கௌரவாம்பாள் என் பவராவார். 1959—ஆம் ஆண்டு மகன் குமரவேல் பிறந்தார். 8.10.1959 ஆம் ஆண்டு மூக்கில் இரத்தக் கசிவு ஏற்பட்டு திடீரென்று சென்னை பொது மருத்துவமனையில் மறைந்தார்.

கல்யாண சுந்தரனார் சிறுவனாக இருக்கும் பொழுது அண்ணன் கணபதியுடன் ஓராண்டு உள்ளூர் சுந்தரம் பிள்ளை திண்ணைப்பள்ளியில் அரிச்சுவடி படித்திருக்கிறார். பிறகு தன் அண்ணனிடம் இரண்டாண்டு பாடம் கற்றுக்கொண்டார். சிறு வயதிலேயே பாடல்கள் பாடுவதிலும், நாடகம் திரைப்படம் பார்ப்பதில் அலாதியான ஆர்வம் கொண்டவர்.

கவிஞர் எட்டு வயதில்,

"நல்லதைச் சொல்பவன் நாத்திகனா?— உலகில்

இல்லாததை சொல்லி ஏமாற்றுவது தான் முறையா?"

என்ற பாடலை தன் அண்ணன் கணபதியிடம் எழுதிக் காட்டியிருக்கிறார். இதுவே கவிஞரின் முதல் பாடலாகும். ஆனால் இந்தப் பாடலின் முதல் வரியைத் தவிர, மற்ற வரிகள் இதுவரை கிடைக்கவில்லை.

கவிஞருக்கு ஒன்பது வயதிலேயே படிப்பு முடிந்துவிட்டது. கவிஞர் வாழ்ந்த காலத்திற்குள் 17—வகையான தொழில்களைச் செய்தாராமென்று ப. ஜீவானந்தம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

கவிஞர் எந்தப் பாடலை எழுதத் தொடங் கினாலும் "வாழ்க பாரதிதாசன்" என்று எழுதி விட்டுத்தான், பாட்டின் பல்லவியை எழுதத் தொடங்குவார்.

திரைப்படத்திற்கு எழுதிய முதல் பாடல்.

"காப்பி ஒண்ணு எட்டணா கார்டு சைசு பத்தனா

# பெருமை

## ப. இந்திரா

காணவெகு ஜோராயிருக்கும் காமிராவைத் தட்டினா!

பிரியம் போல காசுபணம் சலிசாகவும் கொடுக்கலாம்"

இந்தப் பாடல் 'படித்த பெண்' என்ற திரைப்படத்திற்கு எழுதிய பாடலாகும்.

கல்வி மனிதனுக்குத் தேவைதான் என்று கவிஞர் அழுத்திக் கூறுகிறார். ஆராய்ந்து அறிந்து கொள்ளும் உண்மை அறிவு கல்வியால்தான் வரும் என்பதோடு இந்த உலக இயக்கத்தைப் புரிந்து கொள்ளவும் கல்வியின் வழிபெறும் அறிவே தேவை என்கிறார். ஆனால் அதுமட்டும் அவன் வாழ்க்கையை மேம்படுத்திவிடாது என்று தொடர்ந்து கூறி நம்மை சிந்திக்கத் தூண்டுகிறார்.

"படிப்பு தேவை அதோடு
உழைப்பும் தேவை — முன்னேற
படிப்பு தேவை — அதோடு
உழைப்பு தேவை
உண்மை தெரியும், உலகம்
தெரியும் படிப்பாலே — நம்
உடலும் வளரும் தொழிலும்
வளரும் உழைப்பாலே"

ஏட்டுக்கல்வி ஒரு மனிதனின் மூளையைத் தான் கூர்மையாக்கும் என்று மு.வ அவர்கள் கூறு கின்றார். அறிவு வளர்ச்சி வேறு மூளை வளர்ச்சி வேறு. ஒரு மனிதன் எட்டில் படித்ததோடு நின்று விட்டால் அவன் அறிவு வளர்ச்சி பெற்றவனாக ஆகிவிடமாட்டான் என்ற அற்புத வாழ்வியல் உண்மையைப் பட்டுக்கோட்டையார் மிக எளிமை யாகத் தமது பாடல்களில் கூறியுள்ளார்.

பெண்ணின் உரிமைக்குக் குரல் கொடுத்த வர்கள் மாயூரம் வேதநாயகம்பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள் ஆவர். இவர்களுடைய வழிவந்தவர் நம் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள்.

சமுதாயம் முழு விடுதலைபெற்று உயர பெண்கள் முன்னேற்றம் மிக அவசியமானதொன் றாகும். இதனையுணர்ந்த கவிஞர் தம் பாடல்களில் பெண்களின் உயர்வினைப் பற்றியும், அவர்கள் படும் துயரம், அத்துன்பம் நீக்க, பல வழிகள் இவைகளை தம் பாடல்களில் பாடியுள்ளார்.

பெண்மையைப் புகழ்ந்து பாடிய பாரதியை பட்டுக்கோட்டையார் பாடுகையில்,



"பெண்மையைச் சக்தியை
உண்மையைப் புகழ்ந்தான்"
என்கிறார்.

சமூகத்தில் பெண்களின் தாழ்வுற்ற நிலைமையைத் தம் பாடல்களின் மூலம் வெளிக் கொணர்ந்து பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக் கிறார் பட்டுக்கோட்டையார்.

"உலகிற்கு ஒளி அளிப்பது ஆதவன்
வாழ்விற்கு ஒளி அளிப்பது பெண்மை"
என்று பாடுகின்றார்.

ஒரு நாட்டின் செல்வத்தை, மேன்மையை, அந்நாட்டுப் பெண்களின் மூலம் கணக்கிட முடியும் என்பதே கவிஞரின் கருத்தாகும்.

"ஆணுக்குப் பெண்கள் அடிமையென்று
யாரோ எழுதி வச்சாங்க"
என்ற பாடலின் ஒவ்வொரு வரியிலும், மக்கள் கவிஞரிடம் பெண்களின் விடுதலைக்குப் பாடு படும் உணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது.

மேலும் அப்பாடலிலேயே,

"கற்பின் பலமென்றும் கண்ணகி குலமென்றும்
கச்சிதமா திட்டுவாங்க"
என்று கூறுவதிலிருந்து பெண்களின் கற்பைக் களவாடும் ஆண் சமூகத்தினைச் சாடுவது புலப் படுகிறது.

மக்கள் அனைவருக்கும் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றினையும் உருவாக்கு வோர் தொழிலாளர்களே. தொழிலாளர்கள் உலகை நடத்திச் செல்லும் ஒளி விளக்குகள் என்றால் மிகையாகாது. உலகை வாழ வைக்கும் பாட்டாளி மக்கள் நலமுடன் வாழ்ந்தால்தான் மக்களினம் சிறப்புற்று வாழ முடியும். தொழிலாளர்கள் வாழ்விலே, பஞ்சம் புகுந்தால் அவர்களின் நிலை பரிதாபத்திற்குரியதாகும். எனவே தொழிலாளர்கள் பூரண நலத்துடன் வாழ வேண்டும்.

"செய்யும் தொழிலே தெய்வம்

அந்தத் திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி
கொண்ட கடமைதான் நமது பதவி
பயிரை வளர்த்தால் பலனாகும்
அது உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும்"

என்று தொழிலாளர்களின் தன்னம்பிக்கையையும், செய்யும் தொழிலையும் திறமையாகச் செய்ய வேண்டும் என்ற பொதுவுடைமைக் கோட்பாட்டை உருவாக்கினார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.

கஞ்சி குடிப்பதற்கிலார் — அதன்
காரணங்கள் இவை எனும் அறிவுமிலார்
என்று பாரதி கேட்டதையே,
அவன் தேடிய செல்வங்கள் சீமான் வீட்டினிலே
சேர்ந்ததினால் வந்த தொல்லையடி
என்று கூறுகிறார்.

உழைக்காததால் அல்ல, உற்பத்திப் பெருக்கம் இல்லாததால் அல்ல, உற்பத்தி சேர வேண்டிய இடத்தில் சேராமல் முதலாளிகளிடம் சேர்ந்து விட்டால் தான் வருகிறதுதொல்லை என்று சுட்டுகிறது.

"வளர்ந்து வரும் உலகத்துக்கே
நீ வலது கையடா"
என்று ஆற்றல், அறிவு, பண்பு ஆகியவற்றை உடைய தொழிலாளர் உலகின் வலதுகை என்கிறார்.

"பழந்துணி அணிந்தாலும்
பசியாலே இறந்தாலும்
பாதை தவறாத
பண்பு உள்ளம்
இருந்த நிலை மறந்து
இழுக்கான குற்றம் தன்னைப்
புரிந்திடலாமென்று
துணியுதடா — நேர்மை
பொல்லாத சூழ்நிலையால்
வளையுதடா"

என்று பாடுவதில் தவறுகள் இழைக்கப்படுவதற்கே சூழ்நிலை தான் காரணம் என்ற கருத்தை வெளி யிடுகிறார்.

"காலுக்குச் செருப்பும் இல்லை
கால் வயிற்றுக் கூழும் இல்லை"
என்று ஜீவா கூறிய கருத்தை அமைத்து,
"கையில் ஒரு காசுமில்லை
கடன் கொடுப்பார் யாருமில்லை
கஞ்சிக்கொரு வழியுமில்லை
கொல் வறுமை தாழவில்லை
ஏங்கி இரந்துண்ணவோ எங்கள் மனம்
கூசுதடா"என்கிறார்.

பசியிலும், தன்மான உணர்வைப் பலியிடத் தயங்கி ஏங்கும் உழைப்பாளர் குமுறலை வெளி யிட்டார். அதே தொனி இப்பாட்டிலும் ஒலிக்கிறது.

ஒன்பது செண்பகப்பூ கவிதைத் தொகுதியில் (ஆசிரியர் — துறைவன்) கவிஞர்கள் ஏரோட்டும் உழவனை, பார்போற்றும் புலவனாக்கி மகிழ் கின்றனர். அதுவும் புலவர்கள் தங்கள் இலக்கண மரபை மாற்றி உழவன் படைத்த இலக்கியத்தைப் போற்றுகின்றனர். கிழவர்கள் தனது பழைய மரபு

களைப் பறைசாற்றுவதைத் துறந்து, மாறிவரும் உலகிற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு இளைஞர் களிடம் உள்ள புதிய மரபை ஏற்றுக் கொள் கின்றனர். இதனை, பட்டுக்கோட்டையார்

“உழவர் புதியதாய் தமிழ் செய்வார் — அதை
உவந்து புலவர் போற்றிடுவோர்
கிழவர் கூடி இளைஞரிடம் — நிதம்
கேட்டு மகிழ்வார் புதுமறைகள்”

என்று கூறுகிறார்.

உயிரினங்களின் உன்னத உணர்வு காதல், அன்பு, நேசம், பிரியம், பாசம், பற்று, நட்பு, பக்தி எனப் பல சொற்களின் ஒரே பொருள் காதல். கங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை தனது மையப் பொருண்மையாய் தேர்ந்தெடுத்தது காதலையே. காதலின்றி கவி படைத்தவரை காண லாகாது. உலக இயக்கமானது காதல் என்ற மையப் புள்ளியைப் பற்றிக் கொண்டே படருகிறது. இவ்வகையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படைத்துள்ள காதலின் பன்முகப் பரிமாணங் களைக் காணலாம்.

“எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்”

பட்டுக்கோட்டையார் காதலைப் பற்றிப் பாடும் போது,

“மின்னும் இயற்கையெல்லாம்
உன்னழகைக் காட்டுதடி
எண்ணமெனும் தேன் கூட்டில்
இன்பக் கனல் மூட்டுதடி”

என்று காதலியின் உயர்வைப் பாடுகிறார். மேலும் பெண்களின் அன்பையும், பாசத்தையும், நல்ல கணவன் உறவையும்,

“மங்கை இதயம் நல்ல துணைவன்
வரவு கண்டே மகிழ்ந்திடும்
உறவு கொண்டால் இணைந்திடும் — அதில்
உண்மை இன்பம் விளைந்திடும்”

என்று எடுத்துரைக்கின்றார். காதலுக்குப் பொருள் கூறுகையில்

“தடுத்தவர்கள் வென்றதில்லை
சரித்திரமே சொல்லும் — காதல்
அடுத்தவர்கள் அறியாமல்
ரகசியமாய்ச் செல்லும்”

என்று கூறிக் காதலின் வல்லமையைப் புலப்படுத்துகிறார்.



யார் வாழ்ந்தாலென்ன, யார் ஆண்டா லென்ன? தான் வாழ்ந்தால் போதும் எனத் தற் சார்போடு இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் கவிஞர் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார் என்பது அவரின் கவிதைகளால் வெளிப்படுகிறது. கவிஞரின் சமுதாய சிந்தனைகள் கவிதைகளாக மட்டும் உருவாகவில்லை. கால வரலாறாகவும் காணப் படுகிறது. அவரின் சிந்தனைகள் சமுதாயத்தில் பிரதிபலிக்கப்படுமானால் தமிழ்ச் சமுதாயம் உலக அரங்கில் தலை நிமிர்ந்து இருக்கும்.




# சிவகாமியின்



## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

## சிங்க இலச்சினை

## 44

மறு நாள் பொழுது விடிந்து சூரியன் வானவெளியில் இரண்டு நாழிகை பிரயாணம் செய்திருந்தும், மண்டபப்பட்டுக் கிராமத்து வீதிகளில் ஜன நடமாட்டமும் கலகலப்பும் இல்லை. இரண்டு நாளாக இரவில் நடந்த களியாட்டங்களில் ஈடுபட்டதனாலும், எதிர்பாராத விந்தைச் சம்பவங்களினால் உள்ளக் கிளர்ச்சியடைந்து தூக்கமின்றி இரவு நேரங்களைக் கழித்ததனாலும், அந்தக் கிராமவாசிகள் அன்று காலை கொஞ்சம் மந்தமாகவே இருந்தார்கள். பல வீடுகளில் வாசற் கதவுகள் இன்னும் திறக்கப்படாமலே இருந்தன. திருநாவுக்கரசர் மடத்து வாசற்கதவும் அவ்வாறு உட்புறம் தாழிடப்பட்டுத்தான் இருந்தது. ஆனால் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

குண்டோதரன், சத்ருக்னன், வஜ்ரபாஹு ஆகிய மூவரும் அந்த வேளையில் மடத்து வாசலுக்கு வந்தார்கள். குண்டோதரன் கதவை இடித்தான். உள்ளே கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரலின் சத்தம் உடனே நின்றது. மனிதர் நடமாடும் சத்தமும், கதவுகள் திறந்து மூடப்படும் சத்தமும் கேட்டன. பிறகு, வாசற் கதவு திறந்தது.

ஆயனர் வெளியிலே வந்து, “நீதானா, குண்டோதரா! இராத்திரியெல்லாம் எங்கே போயிருந்தாய்? உன்னை நம்பினால்...” என்று சொல்லிக்கொண்டு வந்தவர், வஜ்ரபாஹுவையும் சத்ருக்னனையும் பார்த்துவிட்டு, “இவர்கள் யார்?” என்று கேட்டார்.

“நேற்றிரவு, இரண்டு பேர் வந்திருந்தார்கள் — சிற்பக் கலையில் ஊக்கம் உள்ளவர்கள் என்று சொன்னேனே, அவர்கள்தான். இராத்திரியெல்லாம் இவர்களைத் தேடிக் கடைசியில் பொழுது விடியும் சமயத்தில் கண்டுபிடித்தேன். தங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னபடியால் அழைத்து வந்தேன்” என்றான் குண்டோதரன்.

“அப்படியா! உள்ளே வாருங்கள்! அம்மா, சிவகாமி! மணை எடுத்துப் போடு” என்றார் ஆயனர்.

ஆயனருக்குப் பின்னால் நின்று சிவகாமி உடனே மணைகளை எடுத்துப் போட்டாள். ஆயனரும், வந்தவர்கள் இருவரும் உட்கார்ந்தார்கள். சிவகாமியை வற்புறுத்தி உட்காரச் சொல்லியும் அவள் உட்காரவில்லை. புதிதாக வந்த இருவரையும் ஆவலுடன் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“உங்களைப்பற்றி குண்டோதரன் சொன்னான் — சிற்பத்தில் ஆர்வம் உள்ளவர்கள் என்று. உங்கள் இருவருக்கும் எந்த ஊரோ?” என்று ஆயனர் கேட்டார்.

“குருவே! என்னைத் தெரியவில்லையா?” என்றான் சத்ருக்னன்.

“தெரியவில்லையே, அப்பா! நீ எப்போதாவது என்னிடம் சிற்பம் கற்றுக்கொண்டாயா, என்ன?”

“ஆம், ஐயா! சிவகாமி அம்மையை வேணுமானால் கேளுங்கள் அவருக்கு ஞாபகம் இருக்கும்.”

“ஆமாம், அப்பா! இரண்டு மூன்று நாள் இவர் உங்களுடைய சீடராயிருந்தார்!” என்றாள் சிவகாமி.

“என் அதிர்ஷ்டம் அப்படி! நான் வந்த சில நாளைக்கெல்லாம் தாங்கள் மாமல்லபுரத்துக்குப் போனீர்கள்...” என்றான் சத்ருக்னன்.

“பிறகு, கொஞ்ச நாளைக்கெல்லாம் எல்லா வேலையும் நின்றுவிட்டது. இந்தப் பாழும் யுத்தம் எதற்காக வந்ததோ, எப்போது முடியப் போகிறதோ தெரியவில்லை!” என்று ஆயனர் கூறிப் பெருமூச்சு விட்டார்.

“இன்னும் கொஞ்சம் பொறுமையாயிருங்கள், ஆயனரே! யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடும். தாங்கள் பழையபடி தங்கள் அரண்ய வீட்டுக்குப் போகலாம்“ என்றார் வஜ்ரபாஹு.

அந்தக் குரலைக் கேட்டதும் ஆயனர் சிறிது திடுக்கிட்டவராய், வஜ்ரபாஹுவை உற்று நோக்கி,




"ஐயா! தாங்கள் யாரோ?" என்றார்.

"என்னை நிஜமாகவே தெரியவில்லையா, ஆயனரே!"

"பார்த்த ஞாபகமாய் இருக்கிறது."

அப்போது சிவகாமி தந்தையின் அருகில் வந்து அவருடைய காதோடு, "சக்கரவர்த்தி, அப்பா, தெரியவில்லையா?" என்றாள்.

ஆயனர் அளவிடமுடியாத வியப்புடன் ஒருகணம் வஜ்ரபாஹுவின் முகத்தை உற்று நோக்கினார். பின்னர், அவசரமாகப் பீடத்தை விட்டு எழுந்து, "பிரபு! இது என்ன வேஷம்? அடையாளமே தெரியவில்லையே?" என்றார்.

"வேஷம் போடும் கலையில் என்னுடைய சாமர்த்தியம் இப்போதுதான் எனக்குத் திருப்தி அளித்தது. போர்க்களத்தில் புலிகேசியின் முன்னால் நின்று தூது சொல்லிவிட்டுத் திரும்பியபோது கூட இவ்வளவு திருப்தி எனக்கு உண்டாகவில்லை!" என்றார் மகேந்திரர்.

ஆயனர், "பல்லவேந்திரா! குண்டோதரன் நேற்றிரவே என்னிடம் சொன்னான், யாரோ இருவர் வந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்தக் கிராமத்துப் பாறைகளைப் பார்த்துவிட்டுக் கோயில் அமைப்பதுபற்றிப் பேசினார்கள் என்று. உடனே தங்களுடைய ஞாபகம் எனக்கு வந்தது. அப்படிப்பட்ட சிற்ப மனோகற்பனை உள்ளவர்கள் நம் சக்கரவர்த்தியைத் தவிர யார் உண்டு என்று எண்ணினேன். கடைசியில் தாங்களாகவே இருக்கிறீர்கள்! பிரபு! இந்த ஏழைச் சிற்பியைப் பார்ப்பதற்காக இவ்வளவு தூரம் தேடி வந்தீர்கள்? தங்களைப் பார்த்து எத்தனை காலம் ஆகிவிட்டது? ஒரு யுகம் மாதிரி இருக்கிறது" என்றார் ஆயனர்.

"ஆயனரே! உங்களிடம் பொய் வேஷத்துடனே



வந்தேன். அதோடு பொய் சொல்லவும் விரும்பவில்லை. நான் இங்கே வந்தது உங்களைப் பார்ப்பதற்காக அல்ல. என் மகன் மாமல்லனைத் தேடிக் கொண்டு வந்தேன்" என்றார் சக்கரவர்த்தி. சிவகாமி நாணத்தினால் தலை குனிந்து கொண்டாள்.

ஆயனர் சிறிது தடுமாறிவிட்டு, "பல்லவேந்திரா! மாமல்லர் நேற்று இரவே புறப்பட்டுச் சென்று விட்டாரே! குண்டோதரன் சொல்லவில்லையா?" என்று கேட்டார்.

"மாமல்லனும் பரஞ்சோதியும் இத்தனை நேரம் காஞ்சிப் பாதையில் போய்க்கொண்டிருப்பார்கள். வந்த இடத்தில் உங்களையும் பார்த்துவிட்டு, மாமல்லனைக் காப்பாற்றியதற்காக நன்றி சொல்லிவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்றார் சக்கரவர்த்தி.

"பிரபு! மாமல்லரை நாங்கள் காப்பாற்றவில்லையே? வெள்ளத்தில் முழுகிப் போக இருந்த எங்களையல்லவா குமார சக்கரவர்த்தி தக்க சமயத்தில் வந்து காப்பாற்றினார்!"

"ஆம், ஆயனரே! அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், மாமல்லனுடைய உயிரை நீங்கள் காப்பாற்றியதும் உண்மைதான்; 'நீங்கள்' என்றால், முக்கியமாக உங்கள் குமாரியைச் சொல்லுகிறேன். இதோ பார்த்தீர்களா, இந்தக் கத்தியை!" என்று சக்கரவர்த்தி கூறி, நாகப் பிடி அமைந்த கத்தியை எடுத்துக் காட்டினார்.

ஆயனர், சிவகாமி இருவரும் அந்தக் கத்தியை இன்னதென்று விளங்காத பயங்கரத்துடன் பார்த்தார்கள்.

"இந்த விஷக்கத்தி மாமல்லன் மேல் பாய்வதற்கு இருந்தது. அப்போது சிவகாமி பக்கத்தில் இருந்தபடியால் மாமல்லன் அந்த அபாயத்திலிருந்து தப்பினான்!"

சிவகாமி நடுங்கினாள். அவளுடைய இருதய பீடத்தில் வீற்றிருக்கும் தெய்வத்தின்பேரில் விஷக்கத்தி பாய்வதற்கு இருந்தது என்று எண்ணியபோது அவளுடைய நெஞ்சில் அந்தக் கத்தி பாய்ந்துவிட்டது போன்ற வேதனை உண்டாயிற்று. அவ்விதம் நேராமல் தன்னால் மாமல்லரைக் காப்பாற்ற முடிந்தது என்ற எண்ணம் சொல்ல முடியாத உள்ளக்கிளர்ச்சியை உண்டாக்கிற்று. ஆனால், தான் காப்பாற்றியது எப்படி என்பது தெரியாதபடியால் திகைப்பும் ஏற்பட்டது.

"பிரபு! என்ன சொல்கிறீர்கள்? குமார சக்கரவர்த்தியின் மேல் விஷக்கத்தி ஏன் பாயவேண்டும்? அவ்விதம் செய்ய எண்ணிய பாதகன் யார்? அதை எவ்விதம் சிவகாமி தடுத்தாள்? எல்லாம் ஒரே மர்மமாயிருக்கிறதே? சிவகாமி! உனக்கு ஏதேனும் தெரியுமா?" என்று ஆயனர் கேட்டார்.

"சிவகாமியைக் கேட்பதில் பயனில்லை. அவளுக்கு ஒன்றும் தெரியாது. சமயம் நேரும்போது நானே எல்லாம் சொல்கிறேன். இப்போதைக்கு அபாயம் நீங்கி விட்டது. மாமல்லன் காஞ்சிப் பாதையில் வெகு தூரம் இதற்குள் போயிருப்பான். நானும் போக வேண்டியதுதான். ஆயனரே! இந்த மண்டபப்பட்டுக் கிராமம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா? யுத்தம் முடியும் வரையில் இங்கேயே நீங்கள் தங்கியிருக்கலாமல்லவா?"

"ஆம், பிரபு! அப்படித்தான் உத்தேசம். இந்தக் கிராமவாசிகள் மிகவும் நல்லவர்கள். கலை அபிமானம் உள்ளவர்கள், பாறைக் கோவில்கள் அமைக்க உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்."

"நானும் அதற்கு ஏற்பாடு செய்கிறேன். உங்களுக்கு வேண்டிய திரவியமும், ஆட்களும், கருவிகளும், கொடுத்து உதவும்படி திருக்கோவலூர்க் கோட்டத்து அதிகாரிகளுக்குக் கட்டளை அனுப்புகிறேன்."

"பல்லவேந்திரா! தாங்கள் ஒரு நாளாவது இங்கே தங்கலாமா? இன்று சாயங்காலம் பாறைகளைப் போய்ப் பார்த்து எப்படி எப்படிக் கோயில் அமைக்கலாம் என்று தீர்மானிக்கலாமே?"

மகேந்திர சக்கரவர்த்தி சிரித்துவிட்டு, "ஆயனரே! காஞ்சிக்கு மூன்று காத தூரத்தில் வாதாபிப் படைகள் வந்து கொண்டிருக்கின்றனவாம். அந்தப் படைகள் காஞ்சிக்கு வருவதற்குள் நான் போயாகவேண்டும்" என்றார்.

"அப்படியா! இங்கிருந்து காஞ்சி ஏழு காத தூரம் இருக்குமே? எப்படிப் போவீர்கள்?" என்று ஆயனர் கவலையுடன் கேட்டார்.

"அதைப்பற்றிக் கவலையில்லை. நதியின் அக்கரையில் கண்ணபிரான் ரதத்துடன் காத்திருக்கிறான்."

அப்போது சிவகாமி ஆயனரைப் பார்த்து, "கமலி சௌக்கியமாயிருக்கிறாளா என்று கேளுங்கள் அப்பா!" என்றாள்.

"கமலி சௌக்கியம், அம்மா! கண்ணபிரான் உன்னைப் பார்த்துக் கமலியைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று எவ்வளவோ ஆவலுடன் இருந்தான். நான்தான் வரக்கூடாதென்று தடுத்து விட்டேன்."

சிவகாமி மறுபடியும் ஆயனரைப் பார்த்து, "அப்பா! கமலிக்கு குழந்தை பிறந்ததும் சொல்லி

அனுப்பச் சொல்லுங்கள்!" என்றாள்.

எக்காரணத்தினாலோ, மகேந்திர பல்லவரை ஏறிட்டுப் பார்க்கவே அவளுக்குச் சங்கோசமாயிருந்தது.

"ஆகட்டும், சிவகாமி! அப்படியே சொல்லியனுப்பச் சொல்லுகிறேன். ஆயனரே! நான் புறப்படட்டுமா? போகும் வழியில் வேணுமானால் சுற்றுப் பாறைகளைப் பார்த்து விட்டுப் போகலாம். நீரும் வருகிறீரா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"ஆகட்டும் பிரபு! அதைவிட எனக்கு என்ன



வேலை?" என்று ஆயனர் எழுந்தார்.

"இன்னும் ஒரு விஷயம் மறந்துவிட்டேன்" என்று கூறி, மகேந்திர பல்லவர் தமது அங்கிப் பையிலிருந்து அறுகோண வடிவமான பதக்கம் ஒன்றை வெளியில் எடுத்தார். அதைக் காட்டி, "ஆயனரே! இது என்ன தெரிகிறதா?" என்று சக்கரவர்த்தி கேட்கவும், "தெரிகிறது, பிரபு! சிங்க இலச்சினை" என்றார் ஆயனர்.

"ஆமாம், ஆயனரே! இந்த இலச்சினை பல்லவ இராஜ்யத்தில் மொத்தம் பதினொரு பேரிடந்தான் இருக்கிறது. பன்னிரண்டாவது இலச்சினையை உம்மிடம் கொடுக்கிறேன். இதைக் காட்டினால், இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் எந்த மூலை முடுக்கிலுள்ள அதிகாரியும் நீர் விரும்பியதைச் செய்வார். எந்தக் கோட்டைக் கதவும் உடனே திறக்கும். இதை வைத்துக் கொண்டு என்னையும் மாமல்லனையும் எந்த நேரத்திலும் பார்க்கலாம். இந்த யுத்த காலத்தில் உம்மிடம் இது இருக்கட்டும் என்று கொடுக்கிறேன். சர்வ ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ள வேண்டும், ஏதாவது மிகவும் முக்கியமான காரணம் ஏற்பட்டாலன்றி இதை உபயோகிக்கக் கூடாது" என்று கூறிச் சக்கரவர்த்தி இலச்சினையை நீட்டினார்.

"பிரபு! இந்த ஏழைச் சிற்பிக்கு எதற்காக இந்தச் சிங்க இலச்சினை?" என்று ஆயனர் அதை வாங்கிக் கொள்ளத் தயங்கினார்.

"ஆயனரே! இந்தப் பெரிய இராஜ்யத்தில் உம்மையும் உம்முடைய குமாரியையும் காட்டிலும் எந்தச் செல்வத்தையும் நான் பெரிதாய்க் கருதவில்லை. ஏதாவது ஒரு சமயத்திற்கு வேண்டியதாயிருக்கலாம். ஆகையால், வாங்கிப் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்" என்று மகேந்திரபல்லவர் கையை நீட்டிக் கொடுக்க, அதற்கு மேல் ஆயனரால் அதை மறுக்க முடியவில்லை.

பயபக்தியுடன் வாங்கிக்கொண்டு, "அம்மா சிவகாமி! இதை உன் பெட்டியில் பத்திரமாய் வைத்துவிட்டு வா!" என்று சொல்லிக் கொடுத்தார்.

சிவகாமி அந்தச் சிங்க இலச்சினையை வாங்கிக்கொண்டு அடுத்த அறைக்குள் அதைப் பத்திரப்படுத்தப் போனாள். அங்கே அந்தக் கிராமத்துப் பெரிய வீட்டுப் பெண்மணிகள் அவளுடைய ஆடை ஆபரணங்களை வைத்துக் கொள்வதற்காக அளித்திருந்த அழகிய வேலைப்பாடமைந்த பெட்டி இருந்தது. பெட்டியைத் திறந்து அதற்குள்ளே சிங்க இலச்சினையைச் சிவகாமி பத்திரப்படுத்தினாள்.

அவ்விதம் அவள் பெட்டியைத் திறந்து சிங்க இலச்சினையை வைத்ததை அதே அறையில் தூணுக்குப் பின்னால் மறைந்திருந்த நாகநந்தி பிக்ஷு கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்!

(சபதம் தொடரும்)

கட்டுரை



# யோக

யுஜ் என்னும் சமஸ்கிருத சொல்லில் இருந்த வந்த யோகா என்னும் சொல்லுக்கு, தனிப்பட்டவரின் நனவுநிலை அல்லது ஆன்மா, பிரபஞ்ச சக்தியுடன் இணைதல் என்று அர்த்தம். யோகா என்பது இந்தியாவின் *5000* ஆண்டு பழைமை வாய்ந்த உடல் சார்ந்த அறிவு. யோகா என்பதைப் பலர், உடல் வளைதல், திரும்புதல், நீட்டுதல், மூச்சினை எடுத்து விடுதல் என சிக்கலான உடற்பயிற்சி என்று நினைக்கக்கூடும், இவையனைத்தும், உள்ளிருக்கும் மனித மனதின் ஆன்மாவின் எல்லையற்ற சக்தியைத் திறந்து திறனை அதிகரிக்கும் ஆழமான அறிவியலைப் பற்றிய மேலோட்டமான கருத்துகள்.

யோகா என்பதே, தன்னுள் எப்படி வாழ வேண்டுமெனும் வாழ்க்கையின் சாரத்தைப் பொதிந்து வைத்திருக்கும் அறிவியல் ஆகும் — ஞான யோகம் — ஞான தத்துவ மார்க்கம், பக்தி யோகம் — பக்தி வழியில் பேரின்பம், கர்ம யோகம் — செயல்களின் பாதை, ராஜ யோகம் — மனதைக் கட்டுக்குள் வைக்கும் மார்க்கம். ராஜ யோகம், எட்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ராஜ யோக அமைப்பின் மையப்பகுதி என்பது, இவை அனைத்தையும் பல வழிகளில் சமன் செய்து இணைக்கும் யோக ஆசனப் பயிற்சியாகும்.

## நவீன வாழ்க்கைச் சூழலில் யோகாவின் நன்மைகளும் முக்கியத்துவமும்

உடலுக்கும் மனதிற்கும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே ஒத்திசைவைக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துவது யோகா. யோகா, ஆரோக்கிய வாழ்விற்கான கலையும் அறிவியலுமாகும். யோகா காட்டும் முழுமையான அணுகுமுறை மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளது. வாழ்வின் அனைத்து நோய்கள் வராமல் தடுப்பது, ஆரோக்கிய மேம்பாடு, வாழ்க்கை முறைகளோடு தொடர்புடைய பலவிதமான நலக் கேடுகளையும் நிர்வகிப்பது ஆகியவற்றில் உதவக்கூடியதாக யோகா அமைந்திருக்கிறது. யோகா இப்போது உலகம் முழுவதிலும் பிரபலமாக இருக்கிறது. சில வகை நோய்களை நிர்வகிப்பதற்கு திறம்படப் பயன்படுகிறது என்பது மட்டுமல்லாமல், யோகாவைப் பயில்வோருக்கு மனநலம், மனக்கிளர்ச்சிகளிலிருந்து விடுபடுதல் போன்ற துயர் தீர்க்கும் வல்லமைகளையும், நல உணர்வையும் தருவதனால் யோகா உலகம் முழுவதிலும் பிரபலமானதாகத்திகழ்கிறது. ஆக, ஆரோக்கியமான வாழ்க்கை முறையின் ஒரு பகுதியாக யோகா உலகம் முழுவதிலும் தற்போது செயல்பட்டுவருகிறது. உணர்வு நிலையின் பழம்பெரும் பண்பாடு, விழிப்பு நிலையின் அறிவியல், சமநிலை மன உணர்வு, பணியில் சிறப்பு ஆகியவற்றைத் தருவதாக யோகா புரிந்துகொள்ளப்படுகிறது. அற்புதமான இத்தகைய பண்பாடு அப்படியே உலகெங்கும் பரவ வேண்டும். உலகெங்குமுள்ள ஒவ்வொருவரும் இதனால் பயன்பெற வேண்டும் என்பது மிக முக்கியமானது. உடலை வளர்ப்பதற்கும், மன அமைதிக்குமான வெறும் ஆசனங்களும், பிரணாயமமுமே யோகா என்று துரதிருஷ்டவசமாக தவறுதலாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. மாறாக, யோகா என்பது ஒரு முழுமையான அணுகுமுறையைக் கொண்டிருப்பது. ஒரு வாழ்க்கை முறையாக யோகாவை உள்ளீர்த்துக் கொள்ளும்போது அது வாழ்க்கையை புரட்சிகரமாக மாற்றி அமைக்கும். மனித குலத்திற்கான மதிப்புமிக்க விண்ணுலகப் பரிசாகும் இது. சாதாரண ஆளுமையை தனித்தன்மை கொண்ட சிறப்பான ஆளுமையாக மாற்றக் கூடியது யோகா.

சுய மேம்பாட்டிற்கான முயற்சிகள் அனைத்துமே யோகாவாகும். தன்னைப் பற்றிய சிறந்த அறிவையும், சுய கட்டுப்பாட்டையும் பெறுவதற்காக ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு காலத்திலும் மனிதன் தன்னை கட்டுப்பாடு ஆக்கிக் கொள்கிறான். இந்தியாவில் இது யோகா எனும் வழி முறையின் மூலமாக சாத்தியப்பட்டுள்ளது. ஒருவரின் ஆளுமையின் மீது முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, உண்மையான சுயத்தினைக் கண்டறிவதற்கு உதவக்கூடிய ஒரு முழுமையான வழிமுறை யோகாவாகும். யோகிகள் கண்டறிந்தவற்றிலும், கண்டுணர்ந்த வற்றிலும் பெரும்பகுதி இன்றும்கூட, நேரடியான பொருத்தம் உடையதாக உள்ளது. ஆழ்ந்த மன





டாக்டர்
ஐஷ்வர் வி.பசவரட்டி

அமைதி, ஐயங்களைப் போக்கிக் கொள்வது, வாழ்வின் நோக்கத்தைக் கண்டறிவது என்பன போன்ற வாழ்க்கையின் மிக அடிப்படையான பிரச்னைகளில் யோகி தனது சிந்தனையை நீண்ட காலம் செலுத்துகிறார். அதற்கான தீர்வுகளைக் கண்டறிகிறார். இரக்கமும், பரிவும் கொண்ட முழுத்தெளிவுடன் கூடிய அழகிய வாழ்க்கையை வாழ்வதற்கு எவருக்குமே ஒரு சந்தர்ப்பம் இது. யோகா எனப்படும் வாழ்க்கை அறிவியலின் மூலம் ஒருவர் கற்றுக் கொள்வது இதைத்தான்.

பழங்காலத்திலும் தற்காலத்திலும் யோகா

மனித நாகரிகம் உதயமான போதே யோகா பயிற்சியும் ஆரம்பித்ததாக நம்பப்படுகிறது. சிந்து சமவெளி நாகரிகத்தின் அழிவில்லாத பண்பாடு யோகா என பரவலாக பெரிதும் கருதப்படுகிறது. மனித குலத்தின் ஆன்மீக, லோகாயத வாழ்க்கை மேம்பாட்டிற்கு உறுதுணை புரியக்கூடியதாக யோகா நிரூபணமாகியுள்ளது. பலவகைப்பட்ட யோகா தத்துவங்கள், பாரம்பரியங்கள், மரபு வழிகள், குருசிஷ்ய பரம்பரைகள் போன்றவை வெவ்வேறு வகைப்பட்ட யோகா பரம்பரைகள் போன்றவை வெவ்வேறு வகைப்பட்ட யோகா பாரம்பரியங்களைச் சேர்ந்த பள்ளிகள் உருவாவதற்கு வழி செய்தன. எடுத்துக்காட்டாக: ஜனன யோகா, பக்தியோகா, கர்ம யோகா, தியான யோகா, மந்திர யோகா, லயயோகா, ராஜ யோகா, ஜெயின் யோகா, பௌத்த யோகா போன்றவை. ஒவ்வொரு குரு சீடர் பரம்பரையும் அதற்கென தனிப்பட்ட கொள்கைகள், பயிற்சி முறைகள் ஆகியவற்றைக் கொண்டதாக உள்ளன.யோகாவின் மூலாதாரமான நோக்கங்களை அடைய இவை நம்மை இட்டுச்



செல்கின்றன. யோகா நிலமாகிய இந்தியாவில் நிலவும் வெவ்வேறு வகையான சமூகப் பழக்க வழக்கங்களும், சம்பிரதாயங்களும் அன்பையும், சமநிலையையும், பிற படைப்புகள் அனைத்தின் மீதான கருணை மிகுந்த பார்வையையும் பிரதி பலிக்கின்றன. பல்வேறு நிறங்களும், அழகுமிகு வண்ணங்களும் கொண்டிருக்கும் யோகா சாதனா அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கைக்கான சஞ்சீவியாகக் கருதப்படுகிறது.

தனிநபர் அளவிலும், சமூகத்தின் அளவிலும் விசாலமான பரந்த நலம் பேணும் யோகாவின் போக்கு அனைத்து மதங்கள், இனங்கள், தேசங்களைச் சேர்ந்த மக்களும் பின்பற்றுவதற்கு ஏற்றதாக இருக்கிறது. தற்காலத்தில் யோகா பயிற்சியின் மூலம் பல கோடிக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றனர். இத்தகைய பயிற்சிகள் யாவுமே பழங்காலம் முதல் இன்று வரையிலான திறமைமிக்க யோகா பயிற்றுநர்களால் வளர்த்துப் பாதுகாக்கப்பட்டவை. உலகெங்கிலும் யோகா ஒரு வாழ்க்கைமுறை அங்கமாகவே ஆகி இருக்கிறது. அதிகமாக பயிலப்படும் யோகா சாதனாக்கள். யாமா, நியமா, ஆசனா, பிரணா யாமா, பிரத்ய ஹரா, தரணா, தியானா, சமாதி / சம்யாமா, பன்தா, முத்ரா, ஷத் கர்மா, யுக்த— கர்மா, யுக்த—அஹரா, மந்திர ஜெபா போன்றவை.

## நவீன வாழ்க்கை முறையில் யோகாவின் பயன்கள்

நவீன வாழ்க்கை முறை உடல் நலத்திற்கு பெருத்த சவால்களை கொண்டு வந்துள்ளது. உலகெங்கும் வாழக்கூடிய மக்களின் பலவித நோய்களுக்கு காரணமாக இருக்கிறது. மன அழுத்தம், முறையற்ற உணவுப் பழக்கங்கள், சுறுசுறுப்பில்லாத வாழ்க்கை போன்றவை உடல் நலத்திலும், செயல்பாட்டிலும் வீழ்ச்சியை ஏற்படுத்தி நீரிழிவு, ஆஸ்த்மா, இதய நோய்கள், வளர்சிதை மாற்றக்குறைபாடுகள், புற்றுநோய் போன்றவை உருவாகக் காரணமாகின்றன. இத்தகைய நவீன கால உடல்நலக் குறைபாடுகளில் பெரும்பாலானவை தவறான வாழ்க்கை முறைகளினால் ஏற்படுபவை. இத்தகைய குறைபாடுகளை எதிர்த்துப் போரிடுவதற்கு யோகா பயன்படுகிறது. அறிவியலும், ஆன்மீகமும் எப்போதுமே தனித்தனியாக பார்க்கப்பட வேண்டியவை அல்ல என்று யோகா காட்டுகிறது. வாழ்க்கை முறையினால் ஏற்படக்கூடிய பிரச்னைகளையும் உடலும் மனமும் சார்ந்து வரக்கூடிய நோய்களையும் தீர்ப்பதற்கு திறனுடையதாக யோகா இருக்கிறது.

நோய்களைத் தவிர்ப்பதிலும், மன அழுத்தம், உடல் மனம் சார்ந்த நோய்கள் ஆகியவற்றை சமாளிப்பதிலும், உடல்நலத்தை மேம்படுத்துவதிலும் யோகா பயன்படுகிறதா? என்பது பற்றி உலகம் முழுவதிலும் ஏராளமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடற்செயலில் உயிர் வேதியியல், உளவியல் ஆகியவற்றில் மாறுபட்டு தென்படக்கூடிய மதிப்புகளை ஆய்வுகள் மூலம் கண்டறிந்தும் அளந்து அறிந்தும் உடல்நலத்தில் யோகா ஏற்படுத்தும் விளைவுகள் கணக்கிடப்பட்டன. யோகா பயிற்சி பெறுபவர்களின் இச்சை செயல் நரம்பு மண்டலம், நாளமில்லா சுரப்பி மண்டலம் ஆகியவற்றில் உடலணுக்களின் அளவில் யோகா நுணுக்கமாக செயல்பட்டு செல்வாக்கு செலுத்துவதாக அறியப்பட்டுள்ளது.



இச்சை செயல் சமநிலைக்கும், அனிச்சை செயல் மண்டலத்தை வலுப்படுத்தி பல்வேறு உடற் செயலியல் மண்டலங்களில் பழுதுகளை நீக்கி வயதாகும் தன்மையை தாமதப்படுத்துவதற்கும் யோகப் பயிற்சிகள் உதவுகின்றன.

உடலின் வளர்சிதை மாற்றத்தை சீர்படுத்தி, மன அழுத்தம் ஏற்படுத்தும் எதிர்வினைத் தாக்குதலின் வேகத்தை குறைக்கும் வேலையையும் யோகா செய்கிறது. உடலியல், அறிவாற்றல் செயல்பாடுகளை மேம்படுத்தி, உடல் வெப்ப சீர்மையை ஒழுங்குபடுத்தி, உடலைத் தளர்ச்சியாக்கி, அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளும் வலுவை யோகப்பயிற்சி தருகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து நோய்கள் வராமல் தடுக்கிறது. ரத்த அழுத்தம், இதய ரத்தக்குழாய் நோய், நீரிழிவு போன்றவற்றிற்கு காலம்காலமாக செய்யப்பட்டு வரும் மருத்துவ மேலாண்மைச் செயல்களுக்கு துணைபுரியக்கூடிய யோகா இருக்கிறது. நீரிழிவு, ரத்த அழுத்தம் உடைய நோயாளிகளுக்கு மருந்துகளின் தேவையை மட்டுப்படுத்துவதற்கு யோகா உதவுகிறது. இதய ரத்தக்குழாய் பிரச்னைகளைத் தவிர்க்கவும், சமாளிக்கவும் உதவுகிறது.

யோகாவினால் ஏற்படக்கூடிய பயன்களை மூன்று நிலைகளில் சிந்திக்கலாம். உடல் அள வில் நல்ல ஆரோக்கியத்தை இது தருகிறது. மனதளவில் சிந்தனையை ஒன்று குவிக்கிறது. மன அழுத்தத்தை நீக்கி செயல்திறனை அதிகரிக்கிறது. ஆன்ம நிலை சார்ந்து செயல் பட்டு மனித மதிப்பீடுகளை மேம்படுத்தி வாழ்க்கையில் அமைதியையும், ஆறுதலையும் கொண்டுவந்து சேர்க்கிறது.

யோகாவினால் ஏற்படக்கூடிய பொதுவான உடல், உடற்செயலியல் பயன்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- இசைவு இணக்கம் ஆகியவற்றை அதிகரிக்கிறது.
- தசைகளின் நலத்தையும் வலிமையையும் பேணுகிறது.
- சுவாசத்தை சீராக்கி உயிர்வீரியத்தை மிகுவிக்கிறது.
- வளர்ச்சிதை மாற்ற சமநிலையைப் பேணி வளர்க்கிறது.
- உடல் எடையைக் குறைக்கிறது.
- இதயம், ரத்த ஓட்டம் ஆகியவற்றை சீர் படுத்துகிறது.
- உடற்பயிற்சி வல்லமையைக் கூட்டுகிறது.
- நோய் எதிர்ப்பு சக்தியை மிகுவிக்கிறது.
- இதய ரத்த நாளங்களின் திண்மையைப் பாதுகாக்கிறது.

பொதுவான சில உடற்செயலியல், ஆன்மீக ஆதாயங்கள்

- உணர்ச்சிகளிலிருந்து விடுபட்ட ஒய்வை அளிக்கிறது.
- தற்போதைய தருணத்தைப் போற்றும் தன்மையை வழங்குகிறது.
- மனக்கட்டுப்பாட்டை அதிகமாக்கி சிந்தனை சிந்தையில் தெளிவை ஏற்படுத்துகிறது.
- கவனம் சிதறாமல் ஒருமுகப்படுத்துகிறது.
- சுய ஒழுங்கினை அதிகரிக்கிறது.
- கற்பனையையும் படைப்பாற்றலையும் விரிவாக்குகிறது (குறிப்பாக குழந்தை களிடம்)
- மனநிறைவை உண்டாக்கி மனநிலையை மேம்படுத்துகிறது. “ தன்னை அறியச் செய்கிறது. “ தன்னம்பிக்கையை ஊட்டுகிறது.
- மனவலிமையையும் செயலுறுதியையும் ஏற்படுத்துகிறது.
- பதற்றம், மனச்சோர்பு அறிகுறிகளைக் குறைக்கிறது.
- அன்றாட வாழ்வில் நேர்மறை சிந்தனைகள் வெளிப்படும் ஆற்றலை அளிக்கிறது.
- வாழ்க்கையின் நோக்கம், அர்த்தம் பற்றி புரிய வைக்கிறது.
- அகமனதோடு அதிகம் ஒத்துப்போகும் நிலையை உருவாக்குகிறது.
- மற்றவர்களோடும் உலகத்தோடும் தொடர்புகொண்டிருக்கத் தூண்டுகிறது.

இந்தியாவில் இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. ஆரோக்கியமான வாழ்க்கைமுறை, ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றில் இவர்கள் தீவிரமான அக்கறை கொண்டுள்ளனர். மன அழுத்தமில்லாத வாழ்க்கைக்கும், சிறப்பான செயல்பாடுகளுக்குமென யோகாவை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இவர்கள் இருக்கின்றனர்.

யோகாவின் வலிமைக்கும், ஆற்றலுக்கும் போதுமான முக்கியத்துவம் தரப்பட்டாக வேண்டும். இதற்கு கொள்கை ரீதியான முன்முயற்சிகளும், உபாயங்களுடன் கூடிய இடையீடும் தேவைப்படுகின்றன. யோகாவை ஒழுங்குபடுத்தவும், வளர்த்தெடுக்கவும் முறையான நிர்வாக அமைப்பு தேவைப்படுகிறது. அரசாங்கத்தின் ஆதரவும் இதற்கு தேவையாகிறது. அமைதியை விரும்பக்கூடிய தனிநபர்களால்தான் அமைதியான குடும்பத்தை உருவாக்க முடியும். தனி நபர்களிடத்திலும், குடும்பத்திலும், சமுதாயத்திலும், தேசத்திலும் இத்தகைய ஒத்திசைவை உருவாக்குவதற்கு யோகாதான் வழி. உலகம் முழுவதிலும் அமைதியையும் ஒத்திசைவையும் உருவாக்குவதற்கு யோகாதான் உதவும்.




## கொரோனா வைரஸ் சிகிச்சை: கபசுரக் குடிநீரை யார் எவ்வளவு பருகலாம்?

கொரோனா தொற்றின் பிரதான அறிகுறியான காய்ச்சல் மற்றும் சளியை சமாளிக்க அருந்தப்படும் சித்த மருத்துவ குடிநீரான கபசுரக் குடிநீர் பருகும் அளவு ஒவ்வொருவருக்கும் வேறுபடும் என்றும் ஆயுஷ் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படியே பொது மக்கள் அதை அருந்தவேண்டும் என்றும் தேசிய சித்த மருத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

சென்னை தாம்பரத்தில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் கபசுரக்குடிநீரின் பயன்பாடு குறித்த விரிவான ஆய்வு நடைபெற்றுவருகிறது.

ஆரோக்கியமான குழந்தைகள், முதியவர்கள், இளம் வயதினர், கொரோனா நோயாளிகள் என ஒவ்வொருவருக்கும் கபசுரக்குடிநீரை பருகுவதற்கான அளவை மருத்துவர்கள் வகுத்துள்ளனர்.

### கபசுரக்குடிநீரை யார் எவ்வளவு பருகலாம்?

கொரோனா பாதிக்கப்பட்ட நோயாளிகள் தினமும் கபசுரக் குடிநீர் பருகவேண்டும். மற்றவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டிய அளவு மாறுபடும். ஒரு வியாதியின் தாக்கம் எல்லோருக்கும் ஒரே மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தாது. ஒவ்வொருக்கும் உடல்நிலை வித்தியாசமானது.

கொரோனா பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறிகுறிகள் தென்படும் நபர்கள் ஆகியோர் தினமும் மூன்று வேளை 40 எம்.எல்(மிலி) பருகவேண்டும்.

மருத்துவர்கள், மருத்துவமனையில் பணிபுரிவோர், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் என அதிகளவிலான பொது மக்களோடு அன்றாடம் பணிபுரிவோர், பாதிக்கப்பட்டவர்களோடு அதிக நேரம் செலவிடுவோர்கள் தினமும் ஒரு வேளை 40 முதல் 50 எம்.எல் பருகலாம்.

பாதிக்கப்பட்டவர்களோடு நேரடி தொடர்பில் இருப்பவர்கள், பாதிப்புக்கு ஆளாகக்கூடும் என்ற நிலையில் இருப்பவர்கள் தினமும் இருவேளை 40 முதல் 50 எம்.எல் பருகலாம்.

ஆரோக்கியமானவர்கள், கொரோனா அறிகுறிகள் வருவதை தடுக்க முதலில், தொடர்ச்சியாக ஒரு வாரம் பருகலாம். உணவுக்கு பின்னர் ஒரு வேளை 40 முதல் 60 எம்.எல் வரை பருகலாம். இரண்டாவது வாரம் முதல், ஒரு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை ஒரு வேளை அதே அளவு பருகலாம்.

குழந்தைகளுக்கு கொடுக்கும்போது, ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு பத்து எம்.எல். கொடுக்கலாம். ஐந்து முதல் 10 வயதுள்ள குழந்தைகளுக்கு 20 எம்.எல் அளவும், 10 வயதில் இருந்து 18 வயது வரை உள்ளவர்களுக்கு 30 எம்.எல் வரை கொடுக்கலாம்.

கொரோனாவின் அறிகுறிகளை தடுப்பதற்காக கபசுரக்குடிநீரை பருகலாம் என தமிழக அரசு அறிவித்தது. கபசுரக்குடிநீர் புதிய மருந்தா? இதன் பயன்பாடு எப்போது தொடங்கியது?

கொரோனா பரவலுக்கு முன்பே கபசுரக்குடிநீர் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொரோனா பரவுவதற்கு முந்தைய காலத்தில், காய்ச்சல் மற்றும் சளியை குறைக்க நோயாளிகளுக்கு இந்த மருந்தை அளித்தோம்.

கொரோனாவுக்கு தடுப்பு மருந்து இல்லை என்ற நிலையில், அதன் அறிகுறிகளை கட்டுப்படுத்தினால் கொரோனா தாக்கம் குறையும் என்பதால் கபசுரக் குடிநீரை பரிந்துரைத்தோம். டெங்கு தாக்கத்தின் போது நிலவேம்பு குடிநீர் அறிமுகம் ஆனது போலவே, பொது மக்களிடம் தற்போது கபசுரக் குடிநீரின் பயன்பாடு தொடங்கியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் கபசுரக் குடிநீரின் ஆற்றல் குறித்த ஆய்வுக்காக எலிகளுக்கு அந்த மருந்து அளிக்கப்பட்டது. விலங்கு நல குழுமத்தின் அனுமதியோடு ஆய்வு செய்தோம். 2000 எம்.எல். அளவு வரை பருகிய எலிகளுக்கு எந்த பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை.

இந்த சோதனை நல்ல முடிவுகளை தந்ததால், பின்னர் சித்த மருத்துவ நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 450 பேர் தற்காப்புக்காக அருந்தினோம். அதன் பலனால் நாங்கள் தற்காப்போடு உள்ளோம்.

இதனை தொடர்ந்து, கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு கபத்தை குறைக்க




கபசுரக் குடிநீர் அளிக்கப்பட்டது. தற்போது தமிழகம் முழுவதும் 13 மையங்களில் 20,000 நபர்களுக்கு கபசுரக் குடிநீர் அளிக்கப்பட்டு, அவர்களின் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஆவணப்படுத்தி வருகிறோம்.

கபசுரக்குடிநீர் அல்லாமல் பிற மூலிகை கஷாயங்களின் பயன்பாடு குறித்து சொல்லுங்கள்.

சித்த மருத்துவத்தை பொறுத்தவரை, உணவே மருந்து என்பதை அடிப்படையாக கொண்டது. மூலிகை செடிகளில் இருந்து எடுக்கப்படும் பொருட்களை கொண்டு மருந்து தயாரிக்கிறோம். மூலிகை கலவைகளை பலவிதமாக பகுத்து சோதனை செய்த பின்னர்தான் ஒரு மருந்தை தர முடியும். இதற்கென நிபுணர் குழு உள்ளது.

தற்போது கபசுரக் குடிநீர் குறித்த ஆய்வு நடைபெறுகிறது. அதேபோல 15 விதமான மருந்து கலவைகளை கொண்டு ஆய்வு செய்கிறோம். வேப்பிலை மற்றும் மஞ்சளின் கலவையின் பரிசோதித்து வருகிறோம்.

கொரோனாவுக்கு முக்கிய அறிகுறிகள் காய்ச்சல் மற்றும் சளி. மூச்சுக் காற்று சீராக இருக்கவேண்டும். மூச்சுக் குழாய் செயல்பாடு சீராக இருக்கவேண்டும். கபசுரக் குடிநீர் போலவே ஆடாதோடை மணப்பாகு பயன்படுத்தலாம்.

பொது மக்கள், வீட்டில் இஞ்சி, எலுமிச்சை கலவை சாரை தினமும் இருவேளை தேநீருக்கு பதிலாக அருந்தலாம். பலவகையான மூலிகைகளை அதுகுறித்த விவரங்கள் தெரியாமல்

1. Chukku



2.Thippili



3. Kirambu



4. Akkirakaram



5. sirukanchori ver



6. Neermulli ver



7. Kadukkai



8. Aadathodai



9. Karpooravalli



10.Koshtam



11.Seendhil



12.siruthekku



13. Nilavembu



14.Koraikizhangu



15.Vattathiruppi ver.



அருந்தகூடாது. இந்திய ஆயுஷ் அமைச்சகத்தின் வழிகாட்டுதல் மற்றும் மருத்துவரின் துணையோடு ஒவ்வொருவரின் உடலுக்கு ஏற்றவாறு மூலிகை கஷாயங்களை பயன்படுத்துவது நல்லது.

டெங்கு காய்ச்சல் பரவிய போது நிலவேம்பு குடிநீரும், ஹெச் 1 என் 1 வைரஸ் தொற்றால் பன்றி காய்ச்சல் தீவிரமாக பரவிவந்தது. அப்போது இதை கட்டுப்படுத்த கைகொடுத்தது சித்தமருத்துவம் தான்.

நிலவேம்பு குடிநீர், ஆடாதோடை மணப்பாகு என உடலுக்கு எதிர்ப்பு சக்தியை வழங்கக்கூடிய மூலிகை நீர் அரசு சித்த மருத்துவமனைகளில் வழங்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ்



தொற்று தீவிரமாக பரவிவரும் நிலையில் அலோபதி மருத்துவ துறை மருந்துகளை கண்டறிவதில் வேகம் காட்டிவருகிறது.

இந்நிலையில் சித்தா, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி மருத்துவர்களிடம் வைரஸை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டது. அப்போது இந்திய சித்தமருத்துவர்கள் கபசுர குடிநீரை பரிந்துரை செய்தார்கள்.அதே நேரத்தில் இவை கொரோனா வைரஸை குணப்படுத்தும் என்று நினைத்திட வேண்டாம். இவை கொரோனாவாக இருக்கலாம் என்று தனிமைப்படுத்தியவர்களுக்கும், அறிகுறிகள் இலேசாக இருக்கும் போது சிகிச்சை அளிப்பவர்களுக்கும் கபசுரகுடிநீரை கொடுக்கலாம். மேலும் அலோபதி சிகிச்சை பெறுபவர்களுக்கும் இந்த குடிநீரை கொடுக்கலாம் என்றும் பரிந்துரை செய்திருக்கிறார்கள் சித்த மருத்துவர்கள்.

## வைரஸ் தொற்றுக்கு இயற்கை மருத்துவம்

நமது உடலின் மென்மையான பகுதிகளே பெரும்பாலும் வைரஸ் கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றன. பூஞ்சை, பாக்டீரியா, காளான் போன்ற பலவகையான நுண்கிருமிகளுக்கு அதற்கென சிறப்பாக வழங்கப்படும் நுண்கிருமி நாசினி பலனளித்தாலும், வைரஸ் கிருமியினால் ஏற்படும் தாக்குதலுக்கு மட்டும் சிறப்பான நுண்கிருமி நாசினிகள் இல்லை.

ஏனெனில் வீரியமற்ற நிலையில் காணப்படும் வைரஸ் கிருமிகள் உயிருள்ள செல்களின் உள்ளே நுழைந்ததும், மிகவும் வீரியமடைந்து தன் தோற்றத்தையும் தாக்குதலையும் மாற்றிக்கொண்டே இருக்கின்றன. ஆகையால்தான் வைரஸ் கிருமிகளை எதிர்க்கும் அல்லது தடுக்கும் மருந்துகள் சிறப்பாக செயல்படுவதில்லை.

சளி, குருதி, குருதி படிந்த கருவிகள், உடல் திரவங்கள், இனப்பெருக்க திரவங்கள் ஆகியவற்றின் மூலம் வேகமாக பரவும் வைரஸ் கிருமிகள், குறிப்பிட்ட காலம் வரை காத்திருந்து வீரியம் பெற்றதும், அத்தியாவசிய உறுப்புகளை தாக்கி, பலவித நோய்களை ஏற்படுத்துகின்றன.

ஒரு வைரஸ் கிருமி உடல் செல்லை தாக்கி, அதற்கான நோய் குறிகுணங்களை முதன்முதலில் காட்டத் தொடங்கும் காலத்தில் சரியான முறையில் சிகிச்சை எடுத்துக்கொண்டால் வைரஸ் கிருமிகளை சரியாக எதிர்கொள்ள முடியும். இல்லையெனில் நோயின் தீவிரம் அதிகரித்து பல உடல்நல கோளாறுகளை ஏற்படுத்திவிடும். வைரஸ் நுண்கிருமிகளை அழிக்கக்கூடிய நோய்

எதிர்ப்பு செல்கள் நம் உடலிலேயே போதுமான அளவு அமைந்துள்ளன.

## இயற்கை மருத்துவமுறைகள்

இவை வைரஸ் கிருமிகள் உள்ளே நுழைந்ததும் இம்யுனோ குளோபின்களை அதிகரித்து நோயை கட்டுப்படுத்துகின்றன.

இந்த இம்யுனோ குளோபின்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்வதற்கான இயற்கையின வழிமுறைகளாம். ஹெர்பஸ் வைரஸ், அடினோ வைரஸ், புளூ வைரஸ் போன்றவற்றால் ஏற்படும் கிருமி தாக்குதலை நீக்கி, நம்மை காக்கும் எளிய மூலிகை மயிற்கொன்றை.

செசல்பினியா பல்செரிமா என்ற தாவரவியல் பெயர் கொண்ட செசல்பினேசியே குடும்பத்தைச் சார்ந்த இந்த பெருஞ்செடிகள் தோட்டங்களில்



அளவைக்கொண்டே நோயின் தீவிரம் கணக்கிடப்படுகிறது. ஏனெனில் டி.என்.ஏ. வரை தாக்குதலை ஏற்படுத்தும் மிக நுண்ணிய ஆற்றலுடையவை வைரஸ் கிருமிகள்.

உயிரற்ற செல்களில் இவை அழிந்துவிடுவதாலும், வீரியம் குறைவதாலும் பாக்டீரியா, பூஞ்சை போன்ற கிருமிகளைப் போல் மின் நுண்ணோக்கியில் பார்க்க இயலுவதில்லை.

வாய், உதடு, நாக்கு, தொண்டை, ஆண், பெண் இனப்பெருக்க உறுப்புகள், மென்மையான தோல் பகுதிகள் ஆகியவையே வைரஸ் கிருமிகளின் இலக்காகும்.

இவற்றில் ஏற்படும் தாக்குதலே தொண்டை வலி, அம்மை, அக்கி, மரு, பாப்பிலோமா, நாய்முள், நாக்கு, வாய் மற்றும் பிறப்புறுப்பில் கடுமையான குழிப்புண்கள் ஆகியவற்றில் கொப்புளங்களாகவும், புண்களாகவும் வைரஸ் கிருமியின் தாக்குதலின் அடையாளமாக நாம் உணருகிறோம்.

இதனால் தோன்றும் சிறு சுரம், வலி ஆகியன அழகுக்காக வளர்க்கப்படுகின்றன. இதன் இலை மற்றும் பூக்களிலுள்ள பிளேவனாய்டு குர்சிட்டின் வைரஸ் கிருமிகளை எதிர்க்கும் ஆற்றல் உடையவை.

வைரஸ் கிருமித் தொற்றினால் தோன்றும் சுரம் மற்றும் தொண்டைவலி நீங்க மயிற்கொன்றை இலைகளை இடித்து, சாறெடுத்து 15 முதல் 30 மில்லியளவு வெந்நீருடன் கலந்து சாப்பிட வேண்டும். இதன் விதைகளை அரைத்த தடவ, இருமலினால் தோன்றும் மார்பு வலி நீங்கும். இலைச்சாற்றை தடவ, அக்கி தீவிரம் குறைந்து, தழும்பு மற்றும் அதனால் உண்டாகும் வலி மறையும்.

மயிற்கொன்றை இலை மற்றும் பூக்களை நிழலில் உலர்த்தி, ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ள வேண்டும். 15 கிராம் இலைப்பொடியை 500 மிலி நீரில் போட்டு கொதிக்கவைத்து 125 மிலியாக சுண்டிய பின் வடிகட்டி குடிக்க சுரம் நீங்கும்.



# இசையால்

## இசையெனும் இறை இன்பம்!

முத்தமிழில் நடுவாக நின்று ஏனைய இரண்டினையும் இசைவிப்பது இசைதான். இறைவனையே ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் இசை வடிவானவனாக உருவகித்துப் போற்றுகிறது தமிழ் மரபு. இசையோடு கூடிய பண்ணுக்காக இறைவன் செய்த திருவிளையாடல்களைப் பக்தி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

கலைக்கூடங்களான கோயில்களில்தான் இசை பெரிதும் ஆராதிக்கப் பெற்றது. இனிமையும், மங்கலமும் பொங்க ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளிலும் இசை இறைவனையே உயிர்பெறச் செய்தது.

ஆனால், தற்காலத்தில் கருவிகளின் செயற்கை ஒலிகள் மட்டுமே கோயில்களில் முனகலாகக் கேட்கின்றன.

பண்டைக் காலங்களில் இசைக் கலைஞர்கள் பலர் குழுமியிருந்த தலமாக இசைக் கருவூலமாக திருக்கோயில்கள் விளங்கியிருந்தன. அங்கு பல வகையான இன்னிசைக் கருவிகள் ஒன்றுகூடி முழங்கிக் கொண்டிருந்தன. இன்றைக்கு அவையாவும் ஏறக்குறைய மறைந்தே விட்டன.

திருக்கோயில் விழாக்கள் கொண்டாடுவதில் தமிழர்கள் விருப்பமுடையவர்கள். குழல் ஒலி, யாழ் ஒலி, கூத்தொலி, ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகுதிரு என்று திருப்பல்லாண்டு இசைபடப் பாடுகிறது.

திருக்கோயில் வளாகத்தில் தமிழோடு இசைப் பாடல்கள் ஓதப்பெற்றன. திருக்கோயில்களில் பாடவ்யம், கானபாடி, உடுக்கை வாசிப்போர், கொட்டி மத்தளம் வாசிப்போர், முத்திரைச் சங்கு ஊதுவார், பக்கவாத்தியார், காந்தர்வர், உவைச்சர் என்றெல்லாம் பல இசைக் கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு பொழுதுக்கும் உரியவாறு பண்களையும் நிர்ணயித்திருந்தனர்.

குரலிசை, வாத்திய இசை முதலானவை திருக்கோயில்களிலேயே வளர்ந்தன. ஊசற்பாட்டு, திருஅம்மானை, திருபொற்சுண்ணம் முதலிய இசைப் பாடல்கள், பக்திப் பாடல்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்திருந்தன.






# இசையும்

## இரா. மகாதேவன்

இசை வெறும் பொழுதுபோக்கு மட்டுமன்று. ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் இடையில் உள்ள இடைவெளியை இட்டு நிரப்பி, இசைவிப்பது. அரிய இறையின்பத்தை அடையும் எளிய சாதனம் இசை.

திருமுறைகள் அனைத்தும் பண்சுமந்த இசைப் பாடல்களே. இறைநலம் சான்ற இன்பத் தமிழிசைப் பாடல்களாகத் திருமுறைப் பாடல்கள் இருந்தமையால் இறைவனே இத்திருப்பாடல்களுக்கு தனதுரை என ஒப்பம் தந்தான். அதனால் இத் திருப்பாடல்கள் நீரையும் நெருப்பையும் வென்று விளங்கின. பிறந்தநாள் தொட்டு இறக்கும் நாள் வரையிலும் தமிழர்கள் வாழ்க்கையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் இசை இடம்பெற்றிருந்தது.

கோயில் வழிபாடுகளில் இடம்பெற்று விளங்கிய இசைக் கருவிகள் பல. நாகசுரம், திருச்சின்னம், எக்காளம், முகவீணை, கௌரிகாளம், கொம்பு, நவுரி, ஒத்துநாகசுரம், புல்லாங்குழல், சங்கு, துத்தரி, பலிமத்தளம், கவணமத்தளம், சுத்தமத்தளம், தவில், பேரிகை, சந்திரப்பிறை, செண்டை, டக்கடமாரம், டங்கீ, டமவாத்தியம், டவண்டை, இடக்கை, ஜக்கி, ஜயபேரீ, கனகதப்பட்டை, மிருதங்கம், முட்டு, நகார், பெரிய உடல், சின்ன உடல், சன்ன உடல், தப்பு, திமிலை, வீரகண்டி, சேகண்டி, வான்காதக்கை, தாளம், பிரம்மதாளம், கைத்தாளம், குழித்தாளம், மணிகைமணி, கொத்துமணி, சேமக்கலம், கிடிகிட்டி, வீணை, கெத்து — இவ்வாறு கோயில் வழிபாட்டில் இடம்பெறும் கருவிகள் பல உண்டு.

கிராம தேவதைகளின் வழிபாட்டில் உடுக்கை, பம்பை, கைச்சிலம்பு முதலானவற்றுக்குத் தனித்த இடமுண்டு. கோயிலைத் தவிர இவ்விசைக் கருவிகளை வேறெங்கும் காண்பதும்



கேட்பதும் அரிது. கவுத்துவங்கள், சுத்த நிருத்தம், புசங்கத்திராசித நிருத்தம், குறவஞ்சி முதலானவை கோயில்களில் மட்டுமே நிகழ்த்தப் பெற்றவை. அதுபோலவே நாகசுரமாகிய பெருவங்கியத்தில் மட்டுமே இசைக்கப் பெறும் மல்லாரி, ரத்தி, ஒடகூரு, எச்சரிக்கை முதலானவை கோயில் வழிபாட்டில் மட்டுமே இடம்பெற்றிருந்தன.

கோயில்களில் இசை வழிபாட்டில் முன்னிற்கும் நாகசுரம் தொன்மையான வரலாற்றை உடையது. பன்னிரண்டு துளைகளைப் பெற்ற ஒரே குழற்கருவி.




பன்னிரு ராசிகளில், கோள்கள் ஏழும் சஞ் சரிப்பதற்கேற்ப இதன் பன்னிரண்டு துளைகளின் உதவியால் ஏழு சுரங்களும் அவற்றின் வகைகளும் எழுப்பப் பெறுகின்றன. நாள் முழுதும் கோயில்களில் நாகசுரக் குழுவின் இசை முழங்கிக் கொண்டிருக்கும்.


நாள் வழிபாட்டுக்கும், திருவிழாக் கொண்டாட்டத்துக்கும் தனித்தனியான இசை மரபு உண்டு. இசைக் கருவிகளும் கலைஞர்களும் இருக்க வேண்டிய திசைகளைக் குறித்தும்கூட வரையறை உண்டு. கிழக்கில் வீணை, தெற்கில் குழற்கருவிகள், வடக்கில் தாளம், மேற்கில் தோற்கருவிகள் என்பது பொதுமுறை. இவற்றுடன் மிருதங்கம், நட்டு முட்டு, பாடுவார்கள், குழல் கருவிகள் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திற்கும் தகுந்த இசை வழிபாடும் உண்டு. மார்கழிக்குக் காந்தாரம், தைக்கு மேகராகக் குறிஞ்சி, மாசிக்குத் தக்க ராகம், பங்குனிக்குக் கெஜசிகம், சித்திரைக்குக் கொல்லிப்பண், வைகாசிக்குச் சீகாமரம், ஆனிக்கு வியாழச்சிரேணி, ஆடிக்குச் சட்பதம், ஆவணிக்குத் தக்கேசி, புரட்டாசிக்கு ராட்டிரபாஷை, ஐப்பசிக்குத் தாண்டவம், கார்த்திகைக்குக் கெஜஞ் சிகம் என்பது ஒழுங்கு. இவற்றில் சில பண்களை இன்று புரிந்துகொள்ளக்கூட இயலவில்லை என்று வருத்தத்தோடு பதிவு செய்கிறார் இசையறிஞர் — ஆய்வாளர் தஞ்சாவூர் பி.எம். சுந்தரம்.

இசையை விரும்பாத மனிதர்களே இந்த உலகில் இல்லை என்று சொல்லும் அளவிற்கு மிக உயர்ந்த இடத்தில் இசையை நாம் வைத்திருக்கிறோம். மனம் சோர்வான சமயங்களில் நம்மை உற்சாகப்படுத்தும் ஒரு கருவியாக இசை இருக்கிறது. தவிர, பல வகைகளில் இசை நமக்கு துணைபுரிகிறது. விஷயம் இதுவல்ல.அரிதாக சில சமயங்களில் குழந்தைகள் குறைப்பிரசவத்தில் பிறந்து விடுகின்றன. அப்படி பிறக்கும் குழந்தைகளுக்கு நரம்பு சார்ந்த பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். அதனால் மூளையின் செயல்பாடு இயல்பை விட குறைவாக இருக்கும். ஜெனிவாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இசையின் மூலம் குறைப்பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளின் மூளைச் செயல்பாட்டை மேம்படுத்தலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றனர்.

“கருத்தின் உறைவிடமாகவும், அழகின் இருப்பிடமாகவும் அமைந்து, உள்ளத்தை உள்ளம் உணர்ந்தவாறு வெளிப்படுத்தி உள்ளத்திற்கு உவகையூட்டுவதால் இசை தன்னலம்

பழிபாவங்களும் நிறைந்த இந்த உலகைவிட்டு அழைத்துச்செல்கிறது” என்கிறார் கவிஞர் தாகூர்மனதில் தோன்றும் அழகுணர்ச்சியை வெளிப்படுத்துகிறது. இசை முத்தமிழுக்கு





முன்னும், இயலுக்கு பின்னும், நாடகத்திற்கு இடையில் நின்று இரண்டொடும் இணைந்து இயங்குவது இசை. ஓசை நயமும் இசைந்து மனதுக்கு இன்பம் அளிப்பது இசை.

இசை மன இறுக்கத்தை தளர்த்துகிறது— கோபதாபங்களை தடுகிறது.உற்சாகத்தை உண்டாக்குகிறது. இரத்த அழுத்தத்தை அமைதிப்படுத்துகிறது.சிந்தனை தெளிவு உண்டாக்குகிறது. நோய்களை தீர்க்கிறது. உயிர் அணுக்கள் வளர இசை உதவுகிறது, என்று அறிவியல் மேதைகள் தங்கள் அனுபவத்தில் சொல்கிறார்கள். இசை வாழ்க்கையைத் தெய்வீகமாக்குகிறது. இசை மூலம் இறைவனை அடையலாம் என்று நிருபித்தவர்கள் நம் பெர்யோர்கள்.

சங்க காலம், தொல்காப்பிய காலம் அதற்கு பின் வேத காலம் இடைக்காலம்என்றெல்லாம் வரலாற்று காலங்களில் தோன்றிய நூல்கள் எல்லாம் இசையை வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே காட்டுகிறது. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலியே பர்பாட்டு ரு பாலினும் உரியதுதாகும். இசை மக்களுக்குக் காலம் காலமாக பண்பாட்டுக் காவல் கருவியாக ஆன்மீக உணர்வு சமய நெறி— கோவில் வழிபாடு, நாட்டியம், மொழி உணர்வு என்று இருந்து வருகிறது.

தமிழ் இசை வளர்ச்சி அடைந்தால் தமிழ்ப் பண்பாடும் உரிமையும் உண்டாகும். ஆனால், இன்றோ இசைக் கலைஞர்களுடனே இசை மரபும் மறைந்து வருகிறது. கற்றுத் தருவதற்கு விரும்பினாலும், கற்றுக்கொள்வார் யாருமில்லை. இசையைப் போற்றும் வழக்கம் திருக்கோயில்களில் குறைந்து வருகிறது. கோயிலைக் கடந்து வேறெங்கும் இந்த இன்னிசைக்கு முக்கியத்துவம் இல்லை. மேற்கத்திய நாகரிக இசையின் தாக்கத்தினால் அழிவின் விளிம்பை நோக்கிப் பயணிக்கும் தமிழர்களின் இன்னிசையை ஏற்றுப் போற்றும் காலம் எப்போது வருமோ?

உலக இசை விழிப்புணர்வு தினம் ஜூன் 21 கடைப்பிடிக்கப்பட்டது. உலகமே போற்றும் இசையெனும் இறையின்பத்தை— தமிழர்கள் தம் பழம்புகழை மீண்டும் பெற முயற்சிப்பார்களா?



# தமிழ் 2020

## நற்றமிழரின் நாடித்துடிப்பு

**JANUARY**




**FEBRUARY**




**MARCH**




**APRIL**




**MAY**




**JUNE**




**JULY**

| Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 27 | 28 | 29 | 30 | 31 | |

**AUGUST**

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

**SEPTEMBER**

| Su | Mo | Tu | We | Th | Fr |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 27 | 28 | 29 | 30 | | |

**OCTOBER**

| Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

**NOVEMBER**

| Su | Mo | Tu | We | Th | Fr | Sa |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

**DECEMBER**

| Su | Mo | Tu | We | Th | Fr |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 27 | 28 | 29 | 30 | 31 | |


அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com
June 2020
தமிழ்
11ம் ஆண்டில்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Email: editor@ithamil.com


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा